# காட்டாறு

அறிவியல் பண்பாட்டு மாத இதழ்

அக்டோபர் - 2017 பருவம்-4 புனல்-37 தனிச்சுற்று நன்கொடை ரூ 20



அனைத்து
ஜாதியினரையும்
அர்ச்சகராக்கிய
பினராயி விஜயனுக்கு

# நன்றி

நேர்காணல்



# மனு தர்ம எதிர்ப்பை சமையல் அறைகளிலிருந்து தொடங்க வேண்டும்!

## பல்லடம் தீபா நாராயணமூர்த்தி

என்னுடைய பெயர் தீபா. என்னுடைய சொந்த ஊர் பல்லடம் அருகே இருக்கும் தெற்குப்பாளையம். அம்மா பெயர் செல்வி. வீட்டிற்கு நான் ஒரே பெண். அப்பா இல்லை. என்னுடைய இணையர் நாராயணமூர்த்தி. எங்களுக்கு ஒரு மகள் தீ.நா.செந்தணல். இணையருடைய ஊர் சூலூர் அருகே இருக்கும் கண்ணம் பாளையம். எங்களுடைய திருமணத்திற்குப் பிறகு என்னுடைய அம்மா வீட்டில் தெற்குப்பாளையத்தில் தான் இருக்கிறோம்.

**இணையரைத் தேர்ந்தெடுப்பதில் உங்களுடைய எதிர்பார்ப்பு எந்த மாதிரி இருந்தது? தோழர் நாராயணமூர்த்தியைத் தேர்ந்தெடுக்க காரணம் என்ன?**

எனக்குப் பிடித்த மாதிரி இருக்கணும் என்று நினைத்தேன்.அரசுப் பணியில் இருக்கிற மாப்பிள்ளை கூட வந்திருந்தனர். ஆனால், எனக்கு விருப்பம் இல்லை. உறவினர்கள் எல்லோரும்கூட அரசுப் பணியில் இருக்கிறவங்களைத் திருமணம் செஞ்சுக்கோ... நீ வேலைக்கு போக வேண்டியது இருக்காது. உன்னுடைய வாழ்க்கை நல்லா இருக்கும் என்று சொன்னார்கள்.

ஆனால், நான் மறுத்துவிட்டேன். அரசு வேலையில் இருக்கிறாங்க என்பதற்காக நான் திருமணம் செய்யமுடியாது. எனக்குப் பிடிக்க வேண்டும் என்று சொன்னேன். நான் திருமணம் செய்தாலும் என்னுடைய வீட்டிற்கே என்னுடைய துணைவர் வரவேண்டும் என்று நினைத்தேன். (ஏனென்றால் அம்மா மட்டும் தனியாக இருப்பார்கள் என்பதற்காக) ஆனால், எங்களுடைய வீட்டுக்கு நாராயணமூர்த்தி வரவேண்டும் என்று திருமணத்திற்கு முன்பு நாங்கள் சொல்லவில்லை. அவரே குடும்பச் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு என்னுடன் அம்மா வீட்டில் இருக்கிறார்.

எங்களுடைய உறவினர் ஆனந்த் என்பவர்தான் நாராயணமூர்த்தியை எங்கள் குடும்பத்திற்கு அறிமுகப்படுத்தினார். நாராயணன் பொறுப்பான நல்ல பையன். தீபாவுக்குச் சரியான ஒரு இணையராக இருப்பார் என்று சொன்னார். ஆனந்த் என்பவர் எங்களுக்கு மிகவும் நம்பிக்கையான ஒருவர்.அவர் சொன்னால் சரியாக இருக்கும் என்று நினைத்தோம். மூர்த்தியை எங்களுடைய வீட்டிற்கு வரச் சொன்னோம். 01.05.2013 அன்று எங்களுடைய வீட்டிற்கு வந்தார். எனக்கும் அவரை பிடித்திருந்தது. அதனால் திருமணத்திற்கு சம்மதம் தெரிவித்தேன். ஆனால், திருமணத்திற்கு முன்பு சிறைக்குச் சென்றிருந் தார். அதை எனக்குத் தெரியப்படுத்தினால் நான் திருமணத்திற்கு மறுப்புத் தெரிவித்துவிடுவேன் என்று நினைத்து என்னிடம் நாராயணமூர்த்தி சொல்லவில்லை.

எங்களுடைய திருமணத்திற்குப் பத்து நாட்களுக்கு முன்புதான் அதை என்னிடம் சொன்னார். ஆனால், அவர் என்னைப் பார்த்து விட்டுச் சென்றவுடன் அவரைப்பற்றிய செய்தியை அடுத்த சில நாட்களில் நான் தெரிந்துகொண்டேன். கொலை, கொள்ளை என்ற பெயரில் சிறைக்குச் செல்லவில்லை, அவருடைய கொள்கைக்காகச் சிறை சென்றார் என்று தெரிந்துக்கொண்டேன். அதனால், நான் அதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை.

**உங்களுடைய திருமணத்தைப் பற்றிச் சொல்லுங்கள்?**

என்னுடைய திருமணம் வீட்டில் உள்ள பெரியவர்கள் பார்த்து முடிவு பண்ணிச் செய்து வைத்த திருமணம். தாய்த்தமிழ் பள்ளி தலைமை ஆசிரியர் தலைமையிலும், திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் தோழர்.கொளத்தூர்மணி முன்னிலையிலும் 07.07.2013 இல் தாலி, சடங்கு மறுத்து திருமணம் நடத்தி வைக்கப்பட்டது.

**தாலி இல்லாமல் நடக்கிற திருமணத்தை உங்களுடைய வீடுகளில் எப்படி ஏற்றுக்கொண்டார்கள்?**

தாலி இல்லாமல் திருமணம் நடந்ததற்கு காரணம் திருவள்ளுவர் தாய்த்தமிழ் பள்ளி தலைமை ஆசிரியர் இராஜேஷ்கண்ணா. என்னுடைய அம்மா அந்தப் பள்ளியில் வேலை செய்து கொண்டு இருந்தார். அவர்தான் அம்மாவிடம் எடுத்துச் சொல்லி, தாலி மறுப்புத் திருமணத்திற்குச் சம்மதிக்க வைத்தார்.

ஆனால், என்னுடைய உறவினர்கள் எல்லோரும் தாலி இல்லாமல் எப்படிக் கல்யாணம் செய்வது. அவங்க ஒரு கிறிஸ்டியனா இருந்தாக்கூட மோதிரம் மாத்தலாம். தாலி இல்லாமல் கல்யாணம் பண்ணி ஏதாவது பிரச்சனை வந்தால் என்ன செய்வது? அரசுப் பதிவுத் திருமணமாவது செய்யவேண்டும். நாளைக்கு அந்தப் பையன் விட்டுட்டு போயிட்டா என்ன செய்வது என்று சொன்னார்கள்.

எனக்கு நடந்த திருமணம் தாலி, சடங்கு மறுத்து நடந்ததைப்போல என்னுடைய உறவினர் வட்டாரத்தில் யாருக்கும் சுயமரியாதைத் திருமணம் நடக்கவில்லை. அதனால் தான் இப்படிச் சொன்னார்கள். அதற்கு நான் விட்டுட்டு போறவங்களுக்கு காவல் காத்திட்டு இருக்கமுடியாது. தாலி கட்டினாலும், கட்டவில்லை என்றாலும் அவன் விட்டுட்டு போனால் போகட்டும். அதைப்பற்றி எந்த ஒரு கவலையும் கிடையாது என்றேன். எனக்கு இது புதிதும் இல்லை. என்னுடைய சிறுவயதிலேயே எனது அம்மாவைக் கருத்து வேறுபாடு காரணமாக அப்பா பிரிந்து போய்விட்டார். அம்மா தனியாக இருந்து தான் என்னை வளர்த்தார்.

**இருபாலினரின் இல்லப் பராமரிப்பு பற்றிச் சொல்லுங்கள்?**

ஒரு குடும்பம் என்று சொல்வது பெண்ணை மட்டும் சார்ந்தது அல்ல. ஆணும்,பெண்ணும் இணைந்து வாழ்வதுதான் குடும்பவாழ்க்கை. குடும்பத்தில் உள்ள இன்ப - துன்பத்தில் எப்படி இருவருக்கும் பங்கு உள்ளதோ, அதேபோல, வீட்டு வேலைகளிலும், குழந்தைகளைப் பராமரிப்பதிலும் இருவரும் பங்கெடுத்துச் செய்யவேண்டும். அப்போதுதான் குடும்பத்தில் சந்தோஷமாக இருக்கமுடியும்.

**ஹவுஸ் ஒய்ஃப் களாக – இல்லத்தரசிகளாக இருப்பவர் களின் வாழ்க்கை முறையைப் பற்றிச்சொல்லுங்கள்**

இல்லத்தரசியாக இருப்பவர்கள் காலையில் 5 மணிக்கு எழுந்ததில் இருந்து காலை டிபன் செய்யணும், எல்லோருக்கும் காபி போட்டுக் கொடுக்கணும், குழந்தைகளைப் பள்ளிக்குத் தயார் படுத்தணும், அவங்க டிபன் பாக்ஸ், சினேக்ஸ் பாக்ஸ், தண்ணீர் பாட்டில் எல்லாம் எடுத்து வைக்கணும். பள்ளிக்கு எடுத்துக் கொண்டு போவதற்கு அவர்களுக்குப் பிடித்த மாதிரி உணவுகளைச் செய்து கொடுக்கணும்.

கணவனுக்கு மதிய உணவு ரெடி பண்ணிக் கொடுக்கணும். அப்புறம் எல்லோரையும் அனுப்பி வைத்து விட்டுப் பாத்திரம் கழுவுவது, துணி துவைப்பது, துவைத்த துணியை மடித்து வைக்கணும். அயன் பண்ண வேண்டிய துணிகளை அயன் பண்ணணும். அடுத்த நாள் காலையில் டிபன் செய்வதற்கு மாவு அரைக்கணும். திரும்பவும் 3.30 மணிக்குக் குழந்தைகளைப் போய்க் கூட்டிட்டு வரணும். அவுங்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கணும். மீண்டும் இரவு உணவு ரெடி பண்ணணும். இப்படியாகத்தான் இல்லத்தரசிகளின் வாழ்க்கை இருக்கிறது.

கணவன் வேலைக்கு போவதால் எந்த ஒரு வேலையையும் செய்யமாட்டார். அவர் உட்கார்ந்த இடத்தில் சாப்பாடு கொண்டுபோய் வைக்கணும். அவருக்குப் பரிமாறுவதில் இருந்து, அந்தத் தட்டைக் கழுவுவது முதற்கொண்டு அந்தப் பெண்தான் செய்யவேண்டும். அதற்குக் காரணம், “நீ வீட்டுல சும்மாதானே இருக்க” என்று சாதாரணமாகச் சொல்லி விடுகிறார்கள். வீட்டில் உள்ள அனைத்து வேலைகளையும் செஞ்சிட்டு வீட்டிலேயே அடிமை யாய் இருக்கணும். இதற்கு ஒரு பட்டம் வேற இல்லத் தரசி என்று. இதுதான் பெரும்பாலும் இல்லத்தரசி களின் நிலையாக உள்ளது.

**உங்களுடைய வீட்டில் நீங்கள் இருவரும் இல்லப்பராமரிப்பு பணிகள் செய்வதைப் பார்த்து உங்கள் குடும்பத்திலும், அக்கம் பக்கத்தில் இருப்பவர்கள் எப்படி எடுத்துக்கொள்கிறார்கள்? அந்த அனுபவத்தைப் பற்றிக் சொல்லுங்கள்?**

நாராயணமூர்த்தி வேலை செய்யும் போதுகூட என்னுடைய அம்மா மாப்பிள்ளையை எதுக்கு வேலை செய்யச் சொல்ற... அவர் துணி துவைப்பது, பாத்திரம் கழுவுவதை நாலுபேர் பார்த்தா என்ன சொல்லுவாங்க! அவர் வேலைக்கும் போய்ட்டு வந்து உனக்கு வீட்டுலையும் வேலை செய்யணுமா என்று என்னிடம் சொல்லி என்னைத் திட்டுவாங்க. அதற்கு நான் அவங்க அவங்க வீட்டில்தானே வேலை செய்யறாங்க. இதுல மத்தவங்க பாக்குறதுக்கும், பேசுறதுக்கும் என்ன இருக்கு என்று சொல்லுவேன்.

எங்க வீட்டிற்குப் பக்கத்தில இருக்க எங்க அத்தை சொல்லுவாங்க மூர்த்தி பரவாயில்லை. உனக்கு வீட்டுவேலை செய்வதில் நல்ல உதவியாக இருக்கிறார். இப்ப இருக்கிற எல்லாக் குடும்பத்து ஆண்களும், பெண்களுக்கு உதவியாக இருந்தால் நல்லா இருக்கும் என்று சொல்லுவாங்க.

ஒரு சில ஆண்கள் வீட்டு வேலைகள் செய்து பழக்கம் இல்லை. தெரியாத வேலைகளை எப்படிச் செய்வது என்று சொல்கிறார்கள் அதைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

தெரிந்த வேலைகள், தெரியாத வேலைகள் என்று எதுவும் இல்லை. இதற்குத் தனியான வகுப்பு ஏதும் போய் பெண்கள் படிச்சிட்டு வருவது இல்லை. அவுங்களுக்கு 4 கை, கால்கள் இல்லை. சமையல் செய்யத் தெரியா விட்டாலும் பெண்களோட சமையல் செய்வதற்கு உதவி செய்து கற்றுக் கொள்ளலாம்.

சமையல் செய்யும்போது பெண்களுக்கு உதவியாக வெங்காயம் வெட்டுவது, காய் வெட்டிக் கொடுப்பது, குழந்தைகளைப் பள்ளிக்குத் தயார் படுத்துவது, அவருக்குத் தேவையான மதிய உணவை டிபன் பாக்ஸில் எடுத்து வைத்துக்கொள்வது, அவருக்குத் தேவையான உணவை அவரே போட்டுச் சாப்பிட்டு அந்தத் தட்டைக் கழுவி வைப்பது, அவருடைய துணிகளை அவரே அயன் பண்ணி வைப்பது இந்த மாதிரியான வேலைகளைச் செய்யலாம்.

ஆனால், இந்த மாதிரியான வேலைகளைச் செய்யும்போது வெளி உலகத்துப் பார்வையில் தன்னை பொண்டாட்டிதாசன் என்று சொல்லி ஏளனம் செய்வார்கள் என்று ஒரு சில ஆண்கள் நினைக்கிறார்கள். இப்படி நினைக்கும் ஆண்கள் தங்களுடைய தாயையும், தன்னுடைய பெண் குழந்தைகளையும் அவர்களுடைய வலியை உணர்ந்தால் இந்த மாதிரியான வெளியுலகப் பார்வை அவர்களுக்குப் பெரிதாகத் தெரியாது.

இனிவரும் தலைமுறையான நம்மளுடைய குழந்தைகளுக்கு ஆண்களுக்கான வேலை, பெண்களுக்கான வேலைகள் என்று கற்றுத் தராமல், இருவருக்கும் வீட்டு வேலைகளைப் பாரபட்சமின்றி அனைத்தையும் கற்றுத்தரவேண்டும். அப்போது தான் சரியானதாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

**பெரியாரியலைப் பற்றிச் சொல்லுங்கள்?**

பெரியாரியலைப் பற்றித் தெரிந்து கொண்டது திருமணத்திற்குப் பிறகுதான். ஆனால், அதற்கு முன்பே சாதியைப் பற்றிப் பேசுவதும், பெண் அடிமைத்தனம் இவை இல்லாமல் இருக்க வேண்டும் என்று நினைத்தேன். அதுபோலத்தான் வாழ்ந்து கொண்டும் எந்த ஒரு விசயத்திற்கும் சுயமாக முடிவு எடுத்துக் கொண்டு இருந்தேன்.

பெரியாரியலைப் பற்றித் தெரிந்து கொண்டதற்குப் பிறகு சாதி, சடங்கு, சம்பிரதாயங்களில் இருந்து முழுமையாக வெளியேற வேண்டும் என்று நினைக்கிறேன். சடங்கு என்கிற பெயரில் தேவையில்லாத பணச்செலவுகள், உறவினர்களிடையே சின்ன, சின்ன மனஸ்தாபங்கள் ஏற்படுவதற்குக் காரணம் சடங்குகள். இவை தேவையில்லாதது என்று நினைத்தேன்.

அதனால், எங்களுடைய குழந்தைக்குத் தொட்டில் சீர், மொட்டை அடிப்பது போன்ற எந்த ஒரு சடங்கும் செய்யவில்லை. இனிவரும் காலங்களில் எந்த ஒரு சடங்குகளும் இல்லாமல்தான் குழந்தையை வளர்க்க வேண்டும் என்று நினைக்கிறேன். எங்களுடைய குழந்தையைப் பாலினபாகுபாடு இல்லாமல் சுதந்திரத்துடன் வாழ கற்றுக்கொடுப் போம்.

**தோழர் நாராயணமூர்த்தி**

என்னுடைய பெயர் நாராயணமூர்த்தி. நான் கோவை மாவட்டம் சூலூர் அருகே கண்ணம்பாளையம் கிராமத்தில் பிறந்து வளர்ந்தேன். அம்மா அருக்காணி. அப்பா வெள்ளிங்கிரி. என்னுடைய குடும்பம் பெரிய குடும்பம். என்னுடைய திருமணத்திற்குப் பிறகு துணைவியார் தீபாவுடன் பல்லடம் தெற்குப் பாளையத்தில் வசிக்கிறேன்.

**பெரியாரியல் கொள்கையை எப்போது ஏற்றுக்கொண்டீர்கள்? அதில் ஈடுபட காரணம் என்ன?**

எனக்கு பெரியாரியலை அறிமுகப் படுத்தியவர் என்னுடைய உறவினர் ஈரோட்டில் இருக்கிறார். அவருடைய பெயர் இராயல் ராமசாமி. அவர் திராவிடர் கழகத்தில் இருக்கிறார். அவர் மூலமாகத்தான் நான் பெரியாரியலைப் பற்றித் தெரிந்துகொண்டேன். அதற்கு முன்பு நான் சாதி, தீண்டாமையிலும், இந்து மத மூட நம்பிக்கையையும் பின்பற்றி வாழ்ந்து கொண்டு இருந்தேன். அதனால் நான் நிறைய பணச்செலவுகளை செய்தேன். பழனிக்குக் கண்ணம்பாளையத்தில் இருந்து காவடி எடுத்துக்கொண்டு பத்து வருடமாக பாதயாத்திரைக் கூட சென்றுள்ளேன்.

அந்த மாதிரியான ஒரு நேரத்தில்தான் ராமசாமி அண்ணன் சிறு சிறு புத்தகங்களை என்னிடம் கொடுத்துப் படிக்கச் சொன்னார். நானும் அதைப் படித்து நிறைய கேள்விகளை அவரிடம் கேட்டு விவாதம் செய்து அதற்கான விளக்கத்தையும் தெரிந்துக்கொண்டேன். அதன் பிறகு சாதி - தீண்டாமையில் இருந்து விடுபட வேண்டுமெனில் பெரியாரியல் வாழ்வே சரியான ஒரு பாதையாக இருக்கும் என்று நினைத்தேன். அதனால் 2007 இல் இருந்து த.பெ.தி.க. வில் இணைந்து செயல்படத் தொடங்கினேன்.

**உங்களுடைய திருமண வாழ்க்கை முறையைப் பற்றிச் சொல்லுங்கள்?**

என்னுடைய திருமணம் தாலி, சடங்கு மறுத்து 07.07.2013 இல் நடந்தது. தாலி, சடங்கு மறுத்துத் திருமணம் செய்தாலும் சாதி மறுப்பு திருமணம் செய்யமுடியவில்லை என்ற கவலை மனதில் இருந்தது. இதை அறிந்த தீபா என்னிடம்,

"நீங்கள் சாதிமறுப்புத் திருமணம்தான் செய்யவேண்டுமெனில் தாராளமாக என்னை விவாகரத்து செய்துவிட்டுப் போங்கள். பிடிக்காத ஒரு வாழ்க்கையை வாழவேண்டாம். மற்றவர்களின் முன்னிலையில் பிடித்த மாதிரி காட்டிக்கொண்டு நாம் குடும்ப வாழ்க்கையை நீண்ட நாள் தொடர முடியாது. உங்களுக்குப் பிடித்தமான ஒரு வாழ்க்கையை நீங்கள் தேர்ந்தெடுங்கள். நீங்கள் அப்படிச் செய்தாலும், எந்தக் காரணத்திற்காகவும் நான் உங்களைத் தேடி வரமாட்டேன். அதற்கான அவசியமும் எனக்குக் கிடையாது. ஏனென்றால் நான் வேலைக்குப் போகிறேன். நான் சம்பாதிக்கிறேன். நான் உங்களை நம்பித்தான் என்னுடைய வாழ்க்கையை நடத்த வேண்டிய கட்டாயமும் இல்லை என்று சொன்னார்."

அதற்கு நான், "உள்சாதியில் திருமணம் செய்தாலும் தாலி, சடங்கு மறுத்துத் திருமணம் செய்ததையே ஒரு வெற்றியாக நினைக்கிறேன். வேறு சாதியில் திருமணம் செய்தாலும் சடங்கு, சம்பிர

தாயங்களையும், மூடநம்பிக்கையையும் நம்பி வாழ்கிறவர்கள் நிறையப் பேர் இருக்கிறார்கள். நாம் அந்த மாதிரி இல்லாமல், பெரியாரியலின் வாழ்வான சாதி, பழக்கவழக்கங்களையும், சம்பிரதாயங் களையும் பின்பற்றாமல் வாழ்வோம்" என்று சொன்னேன்.

அதன்படி இன்று வரை இந்து மதத்தின் எந்தச் சடங்குகளும், பண்பாடுகளும் இல்லாமல் சிறப்பாக வாழ்ந்து வருகிறோம். காட்டாறு குழுவின் வகுப்புகள் மூலமாகத் தொடர்ந்து திராவிடர் பண்பாட்டு வாழ்வைக் கற்றுக்கொண்டு அதன்படி வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

**நீங்கள் உங்கள் துணைவியாருடன் இணைந்து வீட்டு வேலைகளில் பங்கெடுத்துச் செய்வதைப் பற்றிச் சொல்லுங்கள்?**

சுற்றுப்புறத்தில் இருக்கிறவர்கள் என்னை ஒரு பொம்பள மாதிரி வீட்டுவேலைகளைச் செய்கிறாயே என்று கிண்டல் செய்கிறவர்களும் உண்டு. பரவா யில்லை மனைவிக்கு உதவியாக இருக்கிறார் என்று பாராட்டுகிறவர்களும் உண்டு. யார் என்ன சொன்னாலும் அதைப்பற்றி எனக்குக் கவலை இல்லை. நான் பெரியாரியல் வாழ்வை ஏற்றுக் கொண்ட பிறகு பெண்விடுதலை பற்றி பயிற்சி வகுப்புகளில் கற்றுக்கொண்டேன்.

அடிமைத்தனத்திலும் முதல் அடிமைத்தனம் பெண் அடிமைத்தனம்தான். அதற்கு நான் என்னுடைய வீட்டிலிருந்து முயற்சி எடுக்கணும் என்று நினைத்தேன். அதற்காக வீட்டுவேலைகளைப் பங்கெடுத்துச் செய்கிறேன். பலபெண்கள் வீட்டிலும் வேலைசெய்துவிட்டு வேலைக்கும் போக வேண்டி யுள்ளது. மீண்டும் இரவு வீட்டுக்கு வந்ததும் மறு படியும் வீட்டுவேலைகளைச் செய்ய வேண்டி யுள்ளது.

ஒரு மிஷினைப்போல ஓய்வின்றி வேலை செய்கிறார்கள். வேலைக்குச் செல்வதால் வீட்டு வேலைகளைச் செய்துவிட்டு காலை உணவுகூடச் சாப்பிட நேரமில்லாமல் வேலைக்குப் போக வேண்டி யுள்ளது. இதனால் பெண்களுக்கு மனஉளைச்சல் ஏற்படுகிறது. இதை உணர்ந்த நான் எனது வீட்டில் வேலைகளைப் பகிர்ந்து செய்கிறேன். அதனால் நாங்கள் இருவரும் வேலைக்குச் செல்வதற்கு எளிதாக உள்ளது. பெண்விடுதலை என்று சொல்லிப் பேச்சளவில் மட்டுமில்லாமல் அதைச் செயல்படுத்த வேண்டும் என்று நினைக்கிறேன்.

**இன்று தெருவோரக் கடைகளில் தொடங்கி, ஃபைவ் ஸ்டார் ஹோட்டல்கள் வரை ஆண்கள் சமையல் செய்து கொண்டுதானே இருக்கிறார்கள்? இதில் என்ன பெரியாரியல் பெருமை?**

இன்றைக்கு ஃபைவ் ஸ்டார் ஹோட்டல் முதல் கிராமத்தில் உள்ள டீ ஸ்டால் வரை ஆண்கள் சமையல் கலைஞர்களாகவும், பணியாளர்களாவும் இருக்கிறார்கள். ஆனால், அவர்கள் அதைப் பணம் தரக்கூடிய ஒரு தொழிலாக மட்டுமே பார்க்கிறார்கள். அதே பணியைத் தன்னுடைய வீட்டிற்கு வந்து மனைவி குழந்தைகளுக்கு காலையில் எழுந்து சமைத்துத் தரும் மனப்பான்மை இன்றளவில் எந்த ஆணுக்கும் இல்லை.

இந்தப் பாகுபாட்டினைப் பற்றிப் பெரியார் சொல்வது என்னவென்றால், ஒரு மேல்சாதிக்கார னுக்குக் கீழ்சாதிக்காரன் அடிமையாக இருப்பான். அதே கீழ்சாதிக்காரனுக்கும் அடிமை உண்டென்றால் அது பெண்தான். தன் வீட்டு வேலைகளை அனைத்தும் செய்து கீழ்சாதிக்காரனைப் போல் அடிமையாகத் தான் வைத்து இருப்பார் என்று பெரியார் கூறுவார். அதுபோலத்தான் உள்ளது நமது ஆண்கள் சமூகத்தின் மனநிலை.

பெண்ணிற்குரிய கடமைகளாக இந்து மதம் சிலவற்றைக் கூறியுள்ளது. இந்து மதத்தின், மனுதர்ம சாஸ்திரம் அத்தியாயம் 9 சுலோகம் - 11 ன் படி,

வீட்டைச் சுத்தமாக வைத்திருக்க வேண்டியதும், தன்னையும் வீட்டையும் அலங்காரமாக லட்சுமிகரமாக வைத்திருக்க வேண்டியதும் - குழந்தைகளைப் பராமரிப்பது, களைத்து வரும் கணவனுக்கு உணவளித்துப் பணிவிடை செய்வதும் - சமையலும், சமையல் சாதனங்களும் நல்லபடி இருக்கச் செய்வதும் மனைவியின் கடமையே.

ஒருவன் ஏழையாக இருக்கலாம். அல்லது பணக்காரனாக இருக்கலாம். அவனுடைய இல்லம் என்பது குடிசையாக இருக்கலாம். பெரிய மாளிகையாக இருக்கலாம். எப்படி இருந்தாலும் அந்த இடத்திற்கு அவள் இல்லத்தரசி என்று கூறுகிறோம். வாயிற்படிக்கு உள்ளே மனைவியின் சாம்ராஜ்ஜியம் நடக்கும். உள்ளே எத்தனை வேலைக்காரர்கள் வேலை செய்தாலும் அவர்களை வழிநடத்துபவர் மனைவியாகவே இருக்கவேண்டும். மகாராணியாகவே இருந்தாலும் மனைவியின் கடமைகளை கணவனுக்குச் செய்யவேண்டும் என்று மனுதர்மம் சொல்கிறது. இந்த மனுதர்மச் சிந்தனையை ஒழிப்பது தான் பெரியாரியல்.

**உங்கள் இருவருக்கும் ஒன்றான ஒரு இலக்கு என்று எதாவது இருக்கிறதா?**

**2013 ஆம் ஆண்டு இந்து மத மனுதர்மத்தை எரிக்கும் போராட்டத்தில் பங்கேற்றவர்கள் நாங்கள். வெறும் காகிதத்தில் மட்டுமல்ல; வாழ்க்கையின் ஒவ்வொரு அசைவிலும் மனுவின் சமுதாயச் சட்டங்களை எதிர்த்து வாழ விரும்புகிறோம். நமது தோழர்களாவது, மனு வுக்கு எதிரான சமத்துவமான வாழ்க்கைக்கான போராட்டத்தை முதலில் அவரவர் வீடுகளில் இருந்து, சமையல் அறைகளிலிருந்து தொடங்க வேண்டும், தொடங்க வைக்க வேண்டும் என்பதே எங்கள் இருவரது ஆசை.**

# நூல் அறிமுகம்

இந்த நூல் ஆராய்ச்சிக் கட்டுரை என்ற பொருளடக்கத்தில் எழுதப் பெற்றுள்ளது. ஆசிரியர் மெர்வின் அவர்கள் இயேசு வரமாட்டார் என்பதற்கு ஆதாரமான உண்மை நிலையினைத் தெளிவுடன் படம் பிடித்துக் காட்டியுள்ளார். கிறிஸ்தவர்களின் வாழ்க்கை முறையில் இருக்கும் பழக்கங்களை சுட்டிக்காட்டி, தவறுகளைத் தோலுரித்துக் காட்டியுள்ளார். தனது உரையில் இந்தியாவிலே இதுமாதிரியான நூல் வருவது முதல் முறை எனப் பதிவிட்டுள்ளார். பொதுவாக பல்வேறு கிறிஸ்துவ சபைகள் தான் பாதிரியார்கள்குழு மூலமாக சுயசோதனை அடிப்படையில் அறிக்கைகளைத் தலைமை யிடத்தில் வாங்குவார்கள். ஆனால் இயேசு வர மாட்டார் என்னும் நூல் பொதுமக்களின் தளத்தில் இருந்து தங்களைத் தாங்களே பரிசோதித்துக் கொள்ள உதவும்.


இந்நூலில் பல்வேறு துணைத் தலைப்புகளில் இயேசுவரமாட்டார் என்பதற்கான உண்மை நிலையினைப் பதிவு செய்கின்றார். குறிப்பாக திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள கிறிஸ்தவர்கள் அவர்கள் சார்ந்துள்ள பல்வேறு சபைக் குழுக் களையும் ஆராய்ந்து இந்நூலில் பதிவு செய்துள்ளார்.

இயேசு முன்பு ஏன் வந்தார்? இப்பொழுது ஏன் வரமாட்டார்? பிதாவானவர் இயேசுவை அப் பொழுது மட்டும் மனித அவதாரம் எடுக்க வேண்டிய அவசியம் என்ன? உலகிலுள்ள எத்தனையோ வகுப்புப் பிரிவினர்கள் இருக்கும் பொழுது யூதர் பிரிவில் மட்டும் தோன்றியது ஏன்? என்ன காரணம்? இதற்கெல்லாம் விடை காண வேண்டிய அவசியத்தினை பகுத்தறிவோடு கேள்வி எழுப்பியுள்ளார்.

அவதாரங்களில் நமக்கு உடன்பாடு இல்லை. இயேசு வந்தபின் என்ன சொன்னாரோ அதன் படியே வாழ்ந்துள்ளார். சொல் ஒன்று செயல் வேறு ஒன்றாக அவர் நடந்துக் கொள்ளவே இல்லை. உன்னைப் போல் பிறரை நேசி என்ற உயர்ந்த பண்பாட்டை உலகெங்கும் பறை சாற்றினார் என்று அன்பு ஒன்றுக்காக தன்னுடைய வாழ்நாளை அர்ப்பணித் துள்ளதாகப் பதிவிட்டுள்ளார்.

இயேசு பூமியில் நடமாடிய முப்பத்திமூன்று ஆண்டுகள் முற்போக்கான கருத்துகளைக் கூறிய போதும் அன்று இருந்த மக்கள் எந்த நிலையில் செயல்பாடுகளில் இருந்தார்களோ அதைவிட மோசமான நிலையில் இன்று கிறிஸ்தவர்கள் இருப்பதைக் காண முடிகிறதாக எழுதியுள்ளார்.. பாவிகளை மீட்க வந்துள்ள இயேசு ஒரு முறை வந்து விட்ட போதும் ‘இயேசுவரப்போகின்றார்’ என்ற சொல்லாடலை பல்வேறு தரப்பினரும் எடுத்துக் கொண்டு, தங்களின் வளமான வாழ்க்கைக்கும் கிறிஸ்துவ மக்களின் மூடத்தனத்தினை தக்க வைக்கவும் பயன்படுத்துவதாக குற்றம் சாட்டு கின்றார்.

கிறிஸ்தவர்களும் பாஸ்டர்களும் செய்யும் அட்டூழியங்களைப் பதிவு செய்துள்ள ஆசிரியர், இயேசு, உன்னைப்போல பிறரை நேசி என்று கூறுகிறாரே தவிர, உன்னைப் போல உன்னையே நேசி என்று கூறவில்லை என அவர்களின் சுயநலப் போக்கினை கடுமையாகச் சாடியுள்ளார்.




மேலும் பிறமதத்தினரை எள்ளி நகையாடித் தாங்கள் மட்டும்தான் உன்னதமானவர்களாகக் காட்டிக் கொள்பவர்கள், வாய்க்கு வந்தபடி பேசுவது முறையல்ல என்று பதிவிடுகிறார். மற்ற மதத்தினர் பாவிகள் என்றும் அவர்கள் மனந்திரும்பி கிறிஸ்தவர் களாக மாற வேண்டும் என்கிறார்கள் “நீ உன் கண்ணி லிருக்கிற உதிரத்தை உணராமல் உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பைப் பார்க்கிறதென்ன” என்று இயேசு கேட்பதாகப் பதிவிட்டுள்ளார்.

பொதுவாகக் கிறிஸ்தவர்கள் கடமைக் கிறிஸ்தவர்களாகத் தான் உள்ளனர். சுயநலமே முக்கியமான நோக்கமாக மாறிப்போய் உள்ளது.

மனத்தின் எண்ணம் மாற வேண்டும். நல்ல எண்ணம் தோன்றாத பொழுது இவர்கள் எப்படி ஒற்றுமை யாக ஒரே கூட்டமாக இருப்பார்கள் என்ற கேள்வியை முன் வைக்கிறார்.

மேலும் குருட்டு நம்பிக்கை என்னும் சித்திரக்காரனால் அறியாமை என்னும் காகிதத்தில் பயனற்ற எழுதுகோலால் தீட்டப்பட்ட வாசகமே இயேசு வருவார் என்பது என்றும் - ஒரு இயேசுவை வணங்கும் மக்களிடையே இத்தனை பிரிவுகள் ஏன்? எதற்காக? எல்லாமே சுயநலம் தான் தங்களின் பெயர் பிரபலமாகவும் பணம் சம்பாதிக்கவும் வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் இவ்விதம் இருக்கின்றார்கள் என்றும் - போப்பின் பாவ மன்னிப்புச் சீட்டு என்ற பணம் பறிக்கும் அநியாயத்தை எதிர்த்து அவனியெங்கும் புரட்சி செய்து அறிவுக்கண்ணைத் திறந்த மார்ட்டின் லூதர் இருந்த போதே இயேசு வந்திருக்க வேண்டும் என்றும் - உயிருடன் பிறப்பது ஒருமுறைதான், உலகில் மறுபிறப்பு என்பது மாய்மாலத்தன்மையே தவிர வேறில்லை என்றும் அழுத்தமாகப் பதிவு செய்கின்றார்.

கிறிஸ்துவப் பெண்களின் நிலையினையும் பாலியல் துன்புறுத்தல்களையும் பதிவு செய்துள்ள ஆசிரியர் இவ்வாறாகப் பெண்ணை இழித்தும் பழித்தும் கூறுவதிலே காலத்தைக் கடத்திவிட்டு கட்டில்லறைக்கு துணைசேர்க்கும் காளையர்களின் மனது என்று மாறும்? எனப் பதிலிடுகிறார். “என்னுடைய வீடு ஜெபவீடாக இருக்கிறதென்று எழுதியிருக்கின்றது. நீங்களே அதைக் கள்ளர் குகையாக்கினீர்கள்” என்ற இயேசுவின் வார்த்தை இன்றளவும் உண்மையாக இருக்கின்றதென ஜெபக் கூடாரங்களையும் கோவில்களையும் சாடுகின்றார்.

எத்தனையோ குற்றங்களையும் குறைகளையும் உள்ளே வைத்துக்கொண்டு வெளிப்பார்வைக்கு நல்லவனாக நடித்து மற்றவர்களின் நியாயம் தீர்க்கும் திமிர் பிடித்தவர்களின் இடத்தை முதலில் பெறுபவர்கள் பாஸ்டர்கள்! பிரதர்கள் என எழுதியுள்ளார்.

அநீதியை எதிர்த்துப் போராடுவதும் இயேசு வின் ஆணைதான்; எதிர்ப்பு ஏற்படலாம் ஏளனம் கூறப்படலாம். ஆனால் இவைகளைக் கண்டு அசந்து போய்விடக்கூடாது. உண்மைக்கு உரைக்கல்லாய் இருக்கின்றோம் என்ற உணர்வுடன் செயலாற்ற வேண்டும் என்று ஒவ்வொரு கிறிஸ்தவர்களுக்கும் இந்த நூலின் மூலமாக அறைகூவல் விடுக்கிறார்.

பெரியாரியலாளர்கள் இயேசுவின் பிறப்பு இறப்பு உயிர்ப்பு போன்றவைகளில் உடன் பாடானவர்கள் இல்லை. ஆசிரியர் இந்த நூலில் அதிகமாகப் பாஸ்டர்கள், பாதிரியார்கள், இறைமக்கள் ஆகியோர்களின் செயல்பாடுகளைக் கோடிட்டு காட்டியுள்ள போதிலும் - அருட் சகோதரிகளின் நிலையினையும் அவர்களுக் குள்ளான இடையூறுகளையும் பதிவுசெய்திருந்தால் சிறப்பாக இருந்திருக்கும்.

**போப்பின் பாவ மன்னிப்புச் சீட்டு என்ற பணம் பறிக்கும் அநியாயத்தை எதிர்த்து அவனியெங்கும் புரட்சி செய்து அறிவுக்கண்ணைத் திறந்த மார்ட்டின் லூதர் இருந்தப்போதே இயேசு வந்திருக்க வேண்டும் என்றும்...**

அங்கொன்றும் இங்கொன்றுமாக செய்கின்ற தவறுகளை வைத்து கிறிஸ்தவர்களை மதிப்பிட வேண்டாம் என்றாலும் சமூகச் செயற்பாட்டாளர் களாகப் பொதுமக்களுக்காகச் செயல்படும் கிறிஸ்துவ ஆர்வலர்கள் மற்றும் அருட்பணியாளர் களின் எண்ணிக்கை சிறிதளவாகும்.

கத்தோலிக்கத் திருச்சபையில் நடக்கும் ஊழல்கள், பழமைவாத கருத்துக்களைத் திணித்தல், சாதியப் பாகுபாட்டுடன் செயல்படும் அருட் சகோதரர்களையும், தலைமைக்குருக்களையும் சுட்டிக் காட்டியிருந்தால் இந்த நூல் முழுமை பெற்றிருக்கும். கத்தோலிக்கத் திருச்சபையைக் காட்டிலும் ஏனைய பிரிவுகளில் சாதியப் பாகுபாடு குறைவே என்பது குறிப்பிடத்தக்கது.

ஆசிரியர் மெர்வின் அவர்கள் நூலில் பெண்களின் கற்பு நிலைப் பாதுகாப்பு குறித்தும் கூறப்பட்டுள்ள கருத்து ஏற்புடையதல்ல.

“கற்புக்காக காதலற்ற இடத்தை கட்டி அழுதுக் கொண்டிருக்க செய்யும்படியான நிர்பந்தக் கல்யாணங்கள் ஒழிய வேண்டும். கற்புக்காக புருஷனின் மிருகச்செயலை பொறுத்துக் கொண்டிருக்க வேண்டும் என்ற கொடுமை ஒழிய வேண்டும்.”

(தோழர் பெரியார் 08.01.1928 குடி அரசு)

கற்பு என்கின்ற பதமே பெண்களை ஆண் களுக்கு நிரந்தர அடிமைகளாக்குகின்ற தன்மையே தவிர வேறொன்றும் இல்லை. இயேசுவரமாட்டார் என்னும் இந்த நூல் ஒவ்வொரு கிறிஸ்தவர்களின் அகவாழ்க்கை முறையினைப் பதிவுசெய்யும் சுய சரிதை என்பது மிகையாகாது.

நூல் ஆசிரியர்: மெர்வின்,
911 இ முதல் மெயின்ரோடு, ஏரித்திட்டம்,
முகப்பேறு மேற்கு, சென்னை 600 037
கைப்பேசி: 93827 18678.

கிருபா நந்தினி
சூழலியல் ஆய்வாளர்

நாட்டில் நிலவும் தண்ணீர்ப் பிரச்சனைக் கான தீர்வு என்ற அடிப்படையில் நதிநீர் இணைப்பு என்பது பேசப்படுகிறது. இது உண்மையில் தீர்வு அல்ல. நதிநீர் இணைப்பு என்பது இயற்கைச் சூழலினை மாற்றி பெரிய சிக்கலாக உருவெடுக்கும். இதை அறியாமல் அரசியல் பேசுகிறார்கள். அறிவியல் பூர்வமாக ஆராயாமல், இயற்கை யாகச் சிந்திக்காமல் பேசிவருகிறார்கள்.

ஒரு சில இயற்கை ஆர்வலர்கள் மட்டுமே இயற்கையின் பாதிப்பையும் உணர்ந்து அறிவியல் பூர்வமாகச் சிந்தித்து இதற்கு எதிர்ப்பு தெரிவித்தாலும், மக்களிடையே முழுமை யான விழிப்புணர்வைக் கொண்டுப்போய்ச் சேர்க்கவில்லை.

**நோக்கம்:**

நதிநீர் இணைப்பின் முக்கிய நோக்கம் மழைக் காலங்களில் வெள்ள அபாயத்தைத் தடுத்து வறண்ட பகுதி களுக்கு அந்நீரைத் திசை திருப்பு வதாகும்.

**வரலாறு:**

இந்திய அரசின் தேசிய நீர்வள அமைச்சகத்தின் கீழ் செயல்படும் தேசிய நீர்வள மேம்பாட்டு ஆணையம் (National Water Development Agency) கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக இதுபற்றி ஆராய்ந்து வருகிறது. 1972 இல் மத்திய நீர்பாசனத்துறை அமைச்சராக இருந்த Dr.K.L.Row அவர்கள் முதன்முறையாக கங்கை - காவிரி இணைப்புத் திட்டத்தை முன்வைத்தார்.

**இயற்கை ஆர்வலர்கள் – சுற்றுச்சூழல் பாதுகாவலர்களின் விமர்சனம்**

ஒரு திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு முன்னும் பின்னும் ஒரு சில ஆய்வுகள் நிகழ்த்தி அதன் முடிவின் - அறிக்கையின் அடிப்படையில்தான் அத்திட்டத்தைச் செயல்படுத்தவேண்டும். முக்கியமாக, அணை கட்டுவதற்கு காற்றாலை, அணுமின்நிலையம் போன்றவற்றிக்கும் மதிப்பீடு அவசியம்.

படிப்பதற்கே இவ்வளவு குறிப்புகள் எனும் போது, இதை ஆராய்ந்து முடிவுகளை வெளியிட இன்னும் கடினம். இந்நிலையில், ஒரு Missed Call மட்டும் போதுமானதாக நினைத்து அதையும் செயல் படுத்திக் கொண்டிருக்கும் அதிபுத்திசாலித்தனமான செயல்பாடுகள். எதைத் திசைதிருப்ப இந்த ஆறுகளைத் திசை திருப்புவதாக விளம்பரம் செய்கிறார்கள்?




# திசைதிருப்பும் 'நதிநீர் இணைப்பு'

*"Environmental Impact Assessment"* "சுற்றுச்சூழல் பாதிப்பு மதிப்பீடு" என்பது தனித்துறையாக உள்ளது. மேலே குறிப்பிட்டதுபோல் நதிநீர் இணைப்புத் திட்டத்தையும் முதலில் இத்துறைக்கு அனுப்பி மதிப்பீட்டு அறிக்கையைப் பெறவேண்டும். இதில்

1. நீர்வாழ் உயிரினங்களான தாவரங்கள் மற்றும் விலங்குகளின் வகைகள் மற்றும் எண்ணிக்கை.
2. நீரின் இயற்பண்புகள் மற்றும் வேதியியல் பண்புகள்.
3. நீர் இயற்கையாகச் சென்று கொண்டிருக்கும் வழித்தடங்கள் மற்றும் பண்புகள்.
4. மாற்றியமைப்பதின் மூலம் ஏற்படும் விளைவுகள், அதுவும் பல வருடங்களுக்குப் பின்பு ஏற்படும் மாற்றங்கள்.
5. காடு, மலை, வயல், வாய்க்கால், மற்ற சிறு ஆறுகள் போன்றவற்றின் நிலை.
6. அக்காடு, மலைகளில் வாழும் உயிரினங்களின் நிலை.
7. தற்போது ஆற்றின் போக்கு செயற்கையாகத் திருப்பிவிடப்பட்ட பின் அதன் வழித்தடம் - பகுதிகளில் உள்ள மக்கள் தொகை, தேவைப்படும் நீர் இவை அனைத்தையும் நேரில் சென்று ஆராய்ந்து அறிக்கையை சமர்பிக்கவேண்டும். இதில் மிகவும் முக்கியமான ஒன்று குறிப்பிட்ட சதவீத பொதுமக்கள் எதிர்ப்பு தெரிவித்தால் இத்திட்டத்தை அமல் படுத்தக் கூடாது என்பது சட்டம்.

இந்த ஆய்வின் முடிவில் பிற்காலத்தில் இயற்கையின் மாறுபாடு மிகவும் எதிர்மறையாக இருந்தால் இத்திட்டத்தினைக் கைவிடவேண்டும்.

இவை அனைத்தையும் தாண்டி திட்டத்தை அமல்படுத்தினால் 6 மாதங்களுக்கு ஒருமுறை திரும்பவும் மேலே குறிப்பிட்ட அனைத்து மதிப்பீடுகளையும் ஆராய்ந்து சமர்பிக்கவேண்டும். இதில் ஏதேனும் இயற்கைக்கு எதிரான மாற்றங்கள் இருப்பின், குறிப்பிட்ட கால அவகாசத்திற்க்குள் இத்திட்டத்தினை நிறுத்தவேண்டும் அல்லது எதிர்கொள்ளும் பிரச்சனைக்கான தீர்வைத் தயார் செய்து அமல்படுத்தவேண்டும்.

படிப்பதற்கே இவ்வளவு குறிப்புகள் எனும் போது, இதை ஆராய்ந்து முடிவுகளை வெளியிட இன்னும் கடினம். இந்நிலையில், ஒரு *Missed Call* மட்டும் போதுமானதாக நினைத்து அதையும் செயல் படுத்திக் கொண்டிருக்கும் அதிபுத்திசாலித்தனமான செயல்பாடுகள். எதைத் திசைதிருப்ப இந்த ஆறுகளைத் திசை திருப்புவதாக விளம்பரம் செய் கிறார்கள்?

**திட்டம்:**

இத்திட்டம் மேற்கண்ட அதிபுத்திசாலிகளால் இரண்டு பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

1. இமாலய ஆறுகள் திட்டம். 2. தீபகற்ப ஆறுகள் திட்டம்.

1. இமாலய ஆறுகள் திட்டத்தில் கங்கை - பிரம்மபுத்திரா மற்றும் மகாநதியை இணைப்பது.

2. தீபகற்ப ஆறுகள் திட்டத்தின் மூலம் மகாநதி - கோதாவரி, தெற்கில் கிருஷ்ணா - காவேரி இணைப்பு.

மேலும் மேற்கு நோக்கிப் பாய்ந்து அரபிக் கடலில் கலக்கும் ஆறுகளை கிழக்கே வறண்ட பகுதிகளுக்கு திருப்பிவிடுவதுதான் இவர்களது திட்டம்.

கங்கை - புனித ஆற்றின் புனிதம் நாம் அனை வரும் அறிந்ததே. குடிப்பதற்கு மட்டுமல்ல; விவசாயம் மற்றும் எந்தச் செயல்களுக்கும் தகுதி யற்றதாக அரசுப் புள்ளிவிவரங்களே குறிப்பிடும் நிலையில் அதை மற்ற ஆறுகளுடன் கலந்தால் அனைத்து ஆறுகளிலும் அதே அசுத்தம் கலந்து இவை அனைத்தும் புனித ஆறாக மாறிவிடும்.

ஏற்கனவே இருக்கும் நீரைக் காட்டிலும் மேலும் இந்த நதிநீர் இணைப்பின் மூலம் மிகவும் துன்பப்படும் நிலைக்கு தள்ளப்பட்டுவிடுவோம். டெல்லி அரசு இந்த ஆண்டு தீபாவளிக்கு நவம்பர் முதல் நாள் வரை பட்டாசுகளுக்குத் தடை விதித் துள்ளது. கடந்த மாதம் நடந்த கணேஷ் சதுர்த்தி யினால் பல ஆறுகளின் குடிநீரைத் தகுதியற்றதாக மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் அறிவித்துள்ளது.

காடழிப்பு பல ஆண்டுகளாக பல மனிதர் களால் நிகழ்த்தப்பட்டு வருகிறது. நதிகள் இணைப் பின் மூலம் இவை அனைத்துப் பிரச்சனைகளும் கூடவே ஒன்றாக இணைந்து மிகப்பெரிய பிரச்சனை யாக உருவெடுக்கும் என்பதில் எந்த வித சந்தேகமும் இல்லை.

**தீர்வு:**

1. இப்படி ஒவ்வொன்றாக ஆராயாமல் செயற்கையாகச் செய்வதைவிட அறிவியல் பூர்வமாக ஆராய்ந்து இயற்கையுடன் இணைந்து செயல்படவேண்டும்.

2. மழைநீரைச் சேமிக்க மக்களுக்கு உதவித் தொகை வழங்கவேண்டும்.

3. முதலாளித்துவம் - இயற்கைச் சுரண்டல் இவை இரண்டும் ஒன்றுதான் என்ற காரல்மார்க்ஸ் - லெனின் கொள்கைகளை வலியுறுத்தி, மாணவர்களிடையே
இக் கருத்துக்களைக் கொண்டு செல்லவேண்டும்.

4. இதனால் அடிப்படை தேவை அன்றி வேறெந்த அநாவசிய ஆரம்பங்களைத் தவிர்த்தல் நிகழும்.

5. முதலாளித்துவம் அடிபடும். இயற்கையாகவே இயற்கை காப்பாற்றப்படும்.

தனது சுற்றுச்சூழலைத் தானே அழித்துக் கொள்ளும் ஒரே உயிரினம் மனிதன் மட்டும்தான் என்ற சார்லஸ் டார்வின் கூற்று உண்மையாக இருப்பினும், மாற்றவேண்டும். மாறியாக வேண்டும் என்பது என்னைப்போன்ற இயற்கை ஆராய்ச்சி யாளர்களின் விருப்பம்.

தோழர் பெரியார்

# பள்ளிப் படிப்பும் பரிட்சை முறையும்

படிப்பின் யோக்கியதைப் பற்றியும், பரிட்சையின் இரகசியங்கள் பற்றியும் நான் 1930க்கு முன்பாகவே 'குடிஅரசு' இதழில் எழுதி வந்திருக்கிறேன்.

ஆட்சி பார்ப்பனருடையதாகவும், பார்ப்பனர் ஆதிக்கத்தில் உள்ளதாகவும், அதனால் பார்ப்பனரே பயன் அனுபவிப்பவராகவும் இருந்து வந்ததால் அது இதுவரை கவனிக்கப்படாமலே இருந்து வந்தது. அந்த இரகசிய முறையை இன்று எல்லா மக்களுமே பின்பற்ற ஆரம்பித்து விட்டதால், இன்று அதை மாற்றவேண்டியது அவசியமாகிவிட்டது.

இன்றும்கூட பரிட்சைத் தாள்களைத் திருத்துவது பற்றிய இரகசியம்தான் திருத்தப் படலாமே ஒழிய, பரிட்சைத் தாள்கள் அச்சடிப் பதிலுள்ள இரகசியம், பரிட்சை கேள்விகளைத் தயாரிப்பதில் உள்ள இரகசியம் முதலியவற்றை எப்படித் திருத்த முடியும்? என்பது நமக்குப் புரியவில்லை.

முதலாவது கல்வியில் மார்க்கு எண்களைப் பார்த்துத் தகுதி, திறமை குறிப்பது பெரிய முட்டாள் தனமும், மிகப்பெரிய அயோக்கியத்தனமுமேயாகும். இது சம்பந்தமான நிருவாகிகளுக்கு வெட்கம், சற்றும் இல்லாததாலும், சிலருடைய அடிமைப் புத்தியாலும், தங்கள் பிள்ளை குட்டிகளுக்கும் இந்த முறை பயன்படவேண்டியதாலும், இதில் இன்னமும் பார்ப்பனர் ஆதிக்கம் இருப்பதாலும் மார்க்கின் மீது "தகுதி திறமை" வகுக்கும் அக்கிரமமும், அயோக்கியத்தனமும் நிகழ்ந்து வருகிறது.

மார்க்கினால் கெட்டிக்காரத்தனம், சோம் பேறித்தனம் கண்டுபிடிக்க முடியாது என்பது மாத்திர மல்லாமல், யோக்கியன் அயோக்கியன் என்பதையும், அறிவாளி மடையன் என்பதையும் கண்டுபிடிக்க முடியாது என்பதைக் கடுகளவு அறிவு உள்ளவனும் ஒப்புக்கொள்ளக்கூடிய விஷயம் என்பதோடு, இது மாபெரும் அனுபவ முடிவு என்பதையும் வலியுறுத்திக் கூறுவேன்.

மற்றும் இன்றைய அரசாங்கம் இந்த முறையையாவது யோக்கியமாய்ப் பின்பற்றுகிறதா என்றால்,அதுவும் இல்லை என்றே சொல்லுவேன். நீதியாவது இதற்கு இடம்கொடுக்கிறதா என்றால் அதுவும் சாதிப்பற்றுக் கண்ணால்தான், சுயநல வளர்ச்சிக் கண்ணால்தான் நீதி கண்டுப் பிடிக்கப் படுவதால் அதுவும் பயன்படாமல் போகிறது. சட்டம் செய்வதும் கடைந்தெடுத்த வகுப்புணர்ச்சி யுள்ள யோக்கியமற்றவர்களால் பெரிதும் செய்யப் படுகிறபடியால் அதுவும் மோசடியாகவே அமைந்து விடுகிறது.

இவ்வளவு தவறான "பாபமான" காரியங்கள் அவ்வளவும், நமது நாட்டில் ஆதிக்கம் பெறக் காரணம் சாதி அமைப்பு. அதுவும் ஒரு சிலரே "மேல்ஜாதி" களாகவும், வெகுபேர்கள் "கீழ்ஜாதி" யாகவும் மிக மிக அயோக்கியத்தனமான மதம், கடவுள், சாத்திரத் தருமங்களால் கற்பிக்கப்பட்டு விட்டபடியால், அந்த ஒரு சில மேல்சாதிகளும் மிகச் சுருங்கிய எண்ணிக்கையுள்ளவர்கள் ஆதலால் அக்கிரம வாழ்வு வாழ இந்த அயோக்கியத் தனங் களை, பாதகங்களை 105 டிகிரி வெயிலில் அய்ஸ் கிரீம் சாப்பிடுவது போல் செய்ய வேண்டியதாகிவிட்டது. அதிலும் மேல்ஜாதி அனுபவிப்புக்கு மானம், வெட்கம், யோக்கியம் ஆகியவை தேவை இல்லை. ஆதலால் நாட்டில் இவை சாதாரணமாய்ப் பரவ நேரிட்டுவிட்டது.

முதலாவது, பரிட்சை நற்சாட்சிப் பத்திரத்தில் மார்க்குப் போடுவதே பெரிதும் அயோக்கியத் தனத்திற்காகத்தான் என்று சொல்லுவேன். உலகில் அனேக முக்கியப் பரிட்சைகளுக்குக்கூட "பாஸ்", "ஃபெயில்"தான் போடப்படுகிறதே ஒழிய, மார்க்கு போடப் படுவதில்லை. மற்றும் அனேக அறிவைப் பொறுத்த காரியங்களுக்கு மாணவர்கள் பள்ளியின் பாட நடப்புகளை ஒழுங்காய்க் கவனித்து வந்தானா என்று பார்த்து திருத்தி, தகுதி ஆக்கப்பட்டு விடுகிறார்களே ஒழிய உட்கார வைத்து பரிட்சை பார்ப்பதில்லை.

இன்றும் அனேகக் காரியங்கள் அப்படியே நடைபெற்று வருகின்றன. எல்லாத் தொல்லைகளும், அயோக்கியத்தனமான காரியங்களும் மேல் ஜாதியார் என்று சொல்லப்பட்ட பிறவிச் சோம்பேறி, பிறவி வஞ்சகக் கூட்டம் சம்பந்தப்பட்ட காரியங்களின் "பரிட்சை" காரியங்களில்தான் கொலைபாதகங்கள் போல் நடைபெற்று வருகின்றன. மார்க்கு என்பது 100க்கு 99 பாகம் வெறும் ஞாபகசக்தியை அடிப்படையாய்க் கொண்டதாகும்.

அதிக மார்க்கு வாங்கியதால் மெடிக்கல் காலேஜ் வகுப்புக்குச் சேர்த்துக்கொள்ளப்பட்ட ஒரு மாணவன் டாக்டர் பரிட்சையில் தேறுவதற்கு அவனது படிப்பில் இந்த மார்க்குகள் வாங்கிய தன்மை எதற்குப் பயன்படக்கூடும்? வியாதிகளைக் கண்டுப்பிடிக்க, நாடிகளை அறிய, ரண சிகிச்சை செய்ய, மருந்துகளைத் தெரிந்தெடுக்க, நுட்பங்களை உணர, நோயாளியின் மனோபாவத்தைப் புரிந்துக் கொள்ள, மற்றும் பல விஷயங்களில் 100க்கு 60, 70 மார்க்கு வாங்கியது அந்த மாணவனுக்குப் பயன் படுமா? என்று கேட்கிறேன்.

சட்டத்தில் முதல்தரமாகத் தேறிய வக்கீல்கள் பலர் சோற்றுக்குத் திண்டாடுகிறார்கள்! பரிட்சகர் தயவில் அதுவும் 3ஆவது வகுப்பில் பாஸ் செய்த வக்கீல்கள் மாதம் ரூ.1000-5000 என்று கொள்ளை அடிக்கிறார்கள்.சிலர் வரவு-செலவு சரிக்கட்டக்கூட திண்டாடுகிறார்கள்.

ஏன் இவற்றைச் சொல்லுகிறேன் என்றால், இந்த நாடு ஒரு காட்டுமிராண்டி நாடு. மக்களோ சிறிதும் நாணயம், நேர்மை, யோக்கியம் பற்றிக் கவலையில்லாத பச்சை சுயநல ஆட்சி. மக்களாட்சியோ, மக்கள் நிலை பற்றிப் பொறுப்பு இல்லாத பதவி வேட்டைக்காரர்கள் ஆட்சி! இந்த நிலையில் சமுதாயம் மிக்க கீழான சாதி, மிகமிக லேசான சாதி என்ற பிரிவுகளுக்காளாகி, கீழான சாதி மேலும் மேலும் கீழ் மக்களாக வாழும்படியும், மேலான சாதி மிக மிக மேன்மக்களாக வாழும் படியான அமைப்பைக் கொண்ட மக்களாக ஆக்கப் பட்டு இருந்து வருகிறார்கள்.

இந்த நிலையில் உள்ள நாடும், மக்களும் உலகத்தில் உள்ள மற்ற நாடுகளைப் போலவும் மற்ற நாட்டு மக்களைப் போலவும் ஆக்கப்பட வேண்டு மானால், மேல்கண்ட மாதிரியான கொடுமைகளும், சூழ்ச்சிகளும் இருக்க நடைபெற விட்டோமே யானால், எப்படி மனித சமுதாயம் சமத்துவமடைய முடியும்? என்கின்ற கவலையால்தான் சொல்லு கிறேன்.

நம் நாட்டிற்குச் சுதந்திரம் என்கின்ற நிலை ஏற்பட்ட பிறகு, மேல் ஜாதிக்காரர்கள் என்பவர் களான ஒரு சிலர் கைக்குத்தானே ஆட்சி ஆதிக்கம் வர நேர்ந்ததே தவிர, பொதுமக்கள் கைக்கு ஆட்சி வர முடியவே இல்லை. "சுதந்திரம்" ஏற்பட்டு 20ஆண்டுகள் கடந்த பிறகும் "தகுதி, திறமை" என்பதும் - அந்தத் தகுதி, திறமை என்பதற்கு மேல் ஜாதிக்காரர் என்பவர்களே உரிமையாளர்களாக இருக்கமுடியும் என்கின்ற நிலை இருக்குமானால், அதிலும் இந்தத் தகுதி - திறமை என்பதற்கு மேலும் மேலும் நிபந்தனைகளைச் சுமத்திக்கொண்டே இருக்கவேண்டி இருக்குமானால், தகுதி, திறமை என்பது யோக்கியமானதாக, நாணயமானதாக இருக்கமுடியுமா?என்றுதான் சிந்தித்து வேதனைப் படுகிறேன்.

மேலும் வேதனைக்கு இடம் தரும் கொலை பாதகமான விஷயம் என்னவென்றால், இந்தப் பாழாய்ப் போக வேண்டிய நீதிமன்றங்கள் சட்டத்திற்கு வியாக்கியானம் என்ற பெயரை வைத்துக் கொண்டு பிற்பட்ட வகுப்பு மக்களுக்கு என்று ஒதுக்கி வைக்கப்பட்ட இடங்களை, "மோசடிக் கருத்தால் ஒதுக்கி வைக்கப்பட்டதாகும்" என்று தீர்ப்புக் கூறி அதை செல்லுபடியற்றதாக ஆக்கிவிடுகின்றன.

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு என்று அவர்களது எண்ணிக்கைச் சமமான அளவு விகிதம் சட்டத்தின் மூலமே ஒதுக்கி வைத்திருக்க, மற்றும் அதுபோலவே ஒதுக்கி வைக்க வேண்டிய அவசியமுள்ள, அதுவும் சட்டப்படி அவசியமுள்ள பிற்படுத்தப்பட்டுள்ள சமுதாயத்திற்கு அந்த மக்கள் விகிதப்படி ஒதுக்கி வைக்காமல், மிகக்குறைந்த அளவில் அரசாங்கம் ஒதுக்கி வைத்தாலும் அதையே "இது மோசடி" என்று நீதிமன்றம் அதுவும் மேல்நீதிமன்றம் தீர்ப்பளித்தால், அது அரசாங்கம் செய்தது மோசடியா? நீதிமன்றம் செய்தது மோசடியா? என்று தீர்ப்புக் கூறுவான்? கண்டிப்பாய் நீதிமன்றத் தைதானே - நீதியற்ற மோசக்காரர்களைக் கொண்டு அமைக்கப்பட்ட மோசடியான நீதிமன்றம் என்றுதானே சொல்லுவான். அரசாங்கமே அக்கிரம, அநியாய அரசாங்கம் என்றால், அய்கோர்ட் அதைவிட அக்கிரமமான அய்கோர்ட் என்று சொல்லும்படியாக ஏற்பட்டு வருகிறது.

அந்தத் தீர்ப்பு சொன்ன ஜட்ஜிடம் கடுகளவு நியாயப் புத்தி இருந்தாலும், அந்தப் புத்தியைப் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு அனுகூலமாகப் பயன்படுத்தி இருப்பார். தன் சுயநலம் காரணமாகவே ஒரு பெரிய சமுதாயத்திற்குக் கேடு செய்ய வேண்டிய தாகிவிட்டது. அது மாத்திரமா? பள்ளியில் சேர்க்கப்பட 40 மார்க்கு வேண்டுமென்றும், பிறகு 45 மார்க்கு வேண்டுமென்றும், பிறகு 50 மார்க் வேண்டுமென்றும், அரசாங்கமே கடும் நிபந்தனை வைத்தால் இதைப் போக்கிரித்தனம் என்பதல்லாமல் வேறு என்ன சொல்லமுடியும்?

அயோக்கியத்தனம் என்பதற்கு ஓர் அளவுகூட இல்லாமல், ஜில்லாவுக்கு இத்தனை வீதம் சேர்க்கப்பட வேண்டும் என்று அரசாங்கம் செய்த முடிவை, அய்கோர்ட்டு அது கூடாது என்று தீர்ப்பு செய்துவிட்டது! இந்த மாதிரிக் காரியங்களில் அரசாங்கத்தின் மேல் அய்கோர்ட்டுக்கு என்ன கவலை வந்தது? இதற்கு ஜாதிக் குறும்பு என்பதல்லாமல் வேறு என்ன சொல்ல முடியும்?

நாட்டிலே நூற்றுக்கு 90 பேர்கள் தற்குறிகளாக ஆயிரக்கணக்கான ஆண்டுகளாய் இருந்து வந்த நிலையையும், ஒரே ஜாதியாரே படித்தவர்களாக - பதவி ஆளராக இருந்த நிலைமையையும் மாற்ற ஆசைப்பட்டு எவ்வளவோ முயற்சியின் பயனாய் ஒரு சிறு மாறுதலை ஏற்படுத்தினால், அதையும் இந்த மாதிரி யோக்கியமும், நேர்மையும் அற்ற முறையில் பாழாக்கிக்கொண்டே வந்தால், அந்தக் கூட்டத்தை மக்கள் எப்படி வாழும்படி வைத்திருக்க முடியும்?

இன்றைய ஆட்சி பகுத்தறிவாளர் ஆட்சியோ, வெங்காய ஆட்சியோ, எப்படி இருந்தாலும், மனிதாபிமான ஆட்சியாய் இருந்து சமுதாயத்தில் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்கள் நலத்தையும், முன்னேற்றத்தையுமே முக்கியமாய்க் கொண்டு அவர்கள் மற்றவர்களுக்கும் சமமாய் வருவதற்கு ஏற்ற காரியங்களைச் செய்யவேண்டும் என்பதுதான் நம் விருப்பம்.

தாழ்த்தப்பட்ட வகுப்பையோ, பிற்படுத்தப் பட்ட வகுப்பையோ சேர்ந்த நீதிபதிகூட இன்று அய்கோர்ட்டில் இல்லை. அய்கோர்ட் தலைமை நீதிபதி மேல்ஜாதியைச் சேர்ந்தவராக ஆகி விட்டதால், மற்ற நீதிபதிகள் அவர் தயவுக்கு ஆக அவர் செய்யக்கூடியதற்கு மேலாகவே செய்து பயனடையப் பார்க்கிறார்கள்..இதனால் அய்க் கோர்ட்டுக்கு இருக்கும் சிறு மதிப்பும் மறைந்து போகுமே என்றுதான் பயப்படுகிறேன்.

தோழர் பெரியார், விடுதலை 16.03.1968

ஹரிஷ் கமுகக்குடி மாரிமுத்து
இலண்டன்

# பிரிட்டனில் வளரும் மதச்சார்பின்மை

பிரிட்டனில் மதச்சார்பின்மை வளர்ந்து வருகிறது என்று சமீபத்திய புள்ளி விவரம் ஒன்று தெரிவிக்கிறது. பிரிட்டன் அரசாங்கம் பத்து ஆண்டுக்கு ஒருமுறை மக்கள்தொகைப் புள்ளி விவரம் வெளியிடுகிறது. சென்ற முறை அரசாங்கத்தால் வெளியிடப்பட்ட புள்ளிவிவரத்தில், ஏறத்தாழ 25 சதவீதத்தினர் தங்களை "மதச்சார்பு அற்றவர்களாக" அதிகாரப்பூர்வமாகப் பதிவு செய்துள்ளார்கள்.

இந்தப் புள்ளிவிவரத்தினை நோக்குகையில் ஒவ்வொரு பத்து ஆண்டு அதிகாரப்பூர்வ அரசாங்க கணக்கின் படியே மதச்சார்பின்மையினர் எண்ணிக்கை வளர்ந்து வருகிறது. *(Reference : https://humanism.org.uk/campaigns/religion-and-belief-some-surveys-and-statistics/census-2011-results/)*

வேடிக்கை என்னவெனில் பிரிட்டன் ஒரு கிறிஸ்தவ நாடு. இதில் தற்போதைய வாடிக்கை என்னவெனில், ஒவ்வொரு பத்து ஆண்டும் கிறிஸ்தவர் என்று அடையாளப் படுத்திக்கொள்வதைக் காட்டிலும் தங்களை மதச்சார்பற்றவராக மாற்றிக் கொண்டு வரும் மனப்போக்கு அதிகரித்து வருகிறது.


*British Social Attitude Survey* என்ற தலைப்பில், சமீபத்தில் பல்லாயிரக்கணக்கான மக்களை பிரதிநிதித்துவப் படுத்தி ஒரு கணக்கெடுப்பை நடத்தி, புள்ளிவிவரத்தை வெளியிட்டுள்ளது ஒரு தன்னார்வத் தொண்டு அமைப்பு. இந்த அமைப்பினர் 1983 இல் இருந்தே இந்தக் கணக்கெடுப்பை நடத்திப் புள்ளிவிவரங்களைச் சேகரித்து, தொகுத்து வெளியிட்டு வருகின்றனர்.


அந்தப் புள்ளி விவரம் சொல்லும் சேதி இதுதான். பிரிட்டனில் தற்போது 53 சதவீத மக்கள் தங்களை மதச்சார்பு அற்றவராகக் கருதுகிறார்கள் என்பதுதான் வியப்பான செய்தி. *(Reference:https://humanism.org.uk/2017/07/05/53-of-britons-are-non-religious-says-latest-british-social-attitudes-survey/)*

குறிப்பாக, இளைஞர்கள் 18லிருந்து 25 வயது வரை உள்ளவர்களில் 71 சதவீதத்தினர் தங்களை மதச்சார்பு அற்றவர்களாகக் குறிக்கிறார்கள்.

*(Reference:https://humanism.org.uk/2017/09/04/latest-british-social-attitudes-reveals-71-of-young-adults-are-non-religious-just-3-are-church-of-england/)*

இந்தச் செய்தி கிறிஸ்தவ தேவாலயங்களை நிலை குலையச் செய்துள்ளது என்றே சொல்லலாம். ஒரு கிறிஸ்தவநாடு தன்னுள் பலரைக் கிறிஸ்தவராக அடையாளம் காட்டாமல் இருப்பது தேவாலயங்களுக்கு பேரிடிதான்.



இந்தச் செய்தியைப் பிரிட்டனில் வாழும் தமிழர்களோடு பொருத்திப் பார்ப்போம். பிரிட்டனில் வாழும் தமிழர்கள் எண்ணிக்கையில் மிக மிகச் சிறுபான்மையினரே. நூற்றுக்கு 2 விழுக்காட்டுக்கும் குறைவே. பெரும்பாலும் தங்களை ஹிந்துக்கள் (சைவர், வைணவர்) என்று நம்புகிறவர்கள். மேலும் தமிழர்களைக் கிறிஸ்தவர்களும், இஸ்லாமியரும், பகுத்தறிவாளருமாக வகுக்கலாம்.

**பிரிட்டன்னில் ஏன் மதச்சார்பின்மை வளர்கிறது?**

பிரிட்டனின் கல்வித்திட்டம் மாணவர்களுக்குச் சுதந்திர உணர்வோடு, கேள்வி கேட்கும் சூழலை ஏற்படுத்தித் தருகிறது. எதனையும் திணிக்கும் நோக்கில் செயல்படுவதில்லை. குறிப்பாக, தாங்கள் கிறிஸ்தவ நாடாக இருந்தாலும் கிறிஸ்தவ மதத்தைப் பள்ளி மாணவர்கள் மீது திணிப்பது இல்லை. மனப்பாடக் கல்வியைக் காட்டிலும், புரிந்துக்கொண்டு செயல்படும் கல்வியை ஊக்குவிக்கிறது. இயல்பாகவே இதன் மூலம் புரிந்துக்கொள்வது என்னவெனில், கேள்வி கேட்டு ஆராயும் மனப்பான்மை வளர வளர மூட நம்பிக்கைகள் தேயத்தானே செய்யும். அதாவது Inversely proportional.

அலுவலகச் சூழலில், யாரும் மதத்தை உள்ளே கொண்டு வருவதில்லை. அத்தோடு எந்த மதத்தினரையும் துவேஷத்துடன் பேசுவதும் கிடையாது, நடத்துவதும் கிடையாது. அனைவரையும் அன்போடே நடத்துகிறார்கள். அனைத்து மதம் பற்றியும் ஒரு புரிதல் இருக்கிறது. ஹிந்து மதம் என்றால் ஜாதிகள் இருக்கிற, மூடநம்பிக்கைகள் இருக்கிற மதம் என்ற புரிதல் பிரிட்டன் மக்களுக்கு இருக்கிறது. அதேவேளையில் தாங்கள் சார்ந்துள்ள கிறிஸ்தவ மதத்தில் உள்ள மூடநம்பிக்கைகளைக் கேள்வி கேட்பவர்களும் உண்டு.

**பிரிட்டனில் வாழும் தமிழருக்கு மதச்சார்பின்மை ஏன் அவசியம்?**

பிரிட்டனில் வாழும் தமிழர்களுக்குப் பெரும்பாலும் ஒரு அச்ச உணர்வு உள்ளது. இறை நம்பிக்கைக்கு உள்ள பல காரணங்களில் அச்ச உணர்வும் ஒன்று என்று தோன்றுகிறது. அச்சம் என்பது ஒரு இயற்கையான உணர்வு. யாருக்குத்தான் அச்சம் இல்லை. அச்சம் இல்லாமல் மனிதன் இருக்க முடியாது; ஆனாலும் 'அஞ்சுவது அஞ்சாமை பேதைமை' - எதற்கு அஞ்ச வேண்டுமோ அதற்கு அஞ்ச வேண்டும். அதை விடுத்து மூட நம்பிக்கைகளுக்கு அஞ்சுவது நேர விரயம், பொருள் விரயம், வீண் செயல்.

பிரிட்டன் தமிழர்களைப் பெரியவர்கள், இளையவர்கள் என இரண்டாக வகுத்துக் கொண்டால், இளையோருக்குக் கேள்வி கேட்கும் - ஆராயும் மனப்பாங்கு இருக்கிறது. அதே வேளையில் பெரியவர்களுக்கு ஹிந்து மத நம்பிக்கை நிறையவே இருக்கிறது. சொல்லப்போனால் பார்ப்பனர் அல்லாத தமிழர்களுக்குத் தாங்கள் மத ரீதியாக கோவிலில் இழிவுபடுத்தப் படுகிறோம் என்ற புரிதல்

**பிரிட்டனில் தற்போது 53 சதவீத மக்கள் குறிப்பாக, இளைஞர்கள் 18லிருந்து 25 வயது வரை உள்ளவர்களில் 71 சதவீதத்தினர் தங்களை மதச்சார்பு அற்றவர்களாகக் குறிக்கிறார்கள்**

**இந்தச் செய்தி கிறிஸ்தவ தேவாலயங்களை நிலை குலையச் செய்துள்ளது என்றே சொல்லலாம். ஒரு கிறிஸ்தவநாடு தன்னுள் பலரைக் கிறிஸ்தவராக அடையாளம் காட்டாமல் இருப்பது தேவாலயங்களுக்கு பேரிடிதான்.**

தமிழரால் கிறிஸ்தவ நாடான பிரிட்டன் பாராளுமன்றத்திற்குள் ஒரு நாடாளுமன்ற உறுப்பினராகச் செல்ல இயலும். கிறிஸ்தவப் பாதிரியார் ஆக இயலும். ஆனால் ஹிந்து மதத்தை ஏற்றுக் கொண்ட தமிழரால், தான் பொருள் கொடுத்து, பணம் கொடுத்துக் கட்டிய, பெரும் கோவிலில் மதக் குருமாராக அதாவது அர்ச்சகராக முடியாது. உயர் ஜாதிப் பார்ப்பனர் மட்டுமே அர்ச்சகர் ஆக முடியும். இதுதான் கள யதார்த்தம்.

மாணவர்கள் பயிலும் ஒரு பள்ளி அல்லது கல்லூரி என்று எடுத்துக் கொண்டால், 100 பேர் பயில்கிறார்கள் என்று எடுத்துக்கொண்டால், விகிதாச்சார அடிப்படையில் அதில் 2 பேர்தான் தமிழ் மாணவர்களாக இருக்க முடியும். தற்போதைய கள நிலவரப்படி, பிரிட்டனில் இளைஞர்களில் அதாவது 18 - 25 வயதுக்கு உட்பட்டவர்களில் 71 சதவீதத்தினர் மதச்சார்பு அற்றவர்களாக இருக்கிறார்கள்.


அப்படி இருக்கையில், இயற்கையாகவே அந்த 2 தமிழ் மாணவர்களைச் சுற்றி 71 பகுத்தறிவாளர்கள் இருக்கும் சூழல்தான். இப்படிப்பட்ட சூழலில் தமிழ்ப்பெற்றோர்களும், தங்கள் இளையோர் மேல் மூட நம்பிக்கைகளான நல்ல நேரம், கெட்ட நேரம், ராகு காலம், எமகண்டம், ஜோசியம், ஜாதகம், ஹோமம், பூஜை, புனஸ்காரம் என்று திணிப்பது இளையோருக்குச் செய்யும் சமூக அநீதியாகவே அமையும். பிரிட்டன் வாழ் தமிழ் இளைஞர்கள் மூட நம்பிக்கைகளின் பக்கம் செல்லாமல், கேள்வி கேட்டு ஆராயும் பக்கத்தில் இருப்பது, தன்னம்பிக்கை மற்றும் கல்வி வளர்ச்சிக்குப் பெரிய உந்துதலாக அமையும்.

ம.மதிவண்ணன்

# அயோத்தி தாசரின் பார்ப்பனீயச் சிந்தனைகள்

தமிழ்ச்சூழலில் தலித் இலக்கியமும் தலித் அரசியலும் ஓரளவு வேரூன்றி விட்ட நிலையில் சமீப காலமாகத் தலித் அரசியலில் ஒரு புதிய மாற்றம் மிகத் தீவிரமாக முன்வைக்கப் படுவதை வாசகர்கள் அவதானிக்கலாம். தலித் அரசியலில் அறிமுக நிலையில் முன்வைக்கப்பட்ட அம்பேத்கரிய, பெரியாரியச் சித்தாந்தங்களில், பெரியாரைக் காலி செய்துவிட்டு அவ்வெற்றிடத்தில் அயோத்திதாசப் பண்டிதரை முன்னிறுத்துவதுதான் அந்த மாற்றம்.

பெரியார் சிந்தனைகளில் தலித் அரசியலுக்கும் பங்களிப்பு செய்ய ஒன்றுமில்லையா? ஒரு சந்தர்ப்பத்தில் பேசிய பேச்சை மட்டுமே வைத்து பெரியாரை தலித்துகளுக்கு எதிராக நிறுத்திவிட முடியுமா? என்பது போன்ற கேள்விகள் ஒருபுறம் இருக்க, தோழர்கள் முன்னிறுத்தும் அயோத்திதாசர் அந்த இடத்துக்குத் தகுதியானவர் தானா என்பதைப் பரிசீலிப்பதும் அவசியமாகிறது. அதோடு விமர்சனப் பார்வையற்ற ஒரு வழிபாட்டுத் தொனியுடனேயே அயோத்தி தாசரை முன்வைக்கும் போக்கு தலித் அரசியலுக்கும், தலித் இலக்கியத்திற்கும் ஊறு விளைவிப்பதாகவே அமையும் என்ற புரிதலுடன், அயோத்தி தாசரிடம் வெளிப்படும் சாதியக்கூறுகள் முதலானவற்றை ஆய்வுக்குள்ளாக்கும் முயற்சியாகவே இந்தக் கட்டுரை.



தலித்துகளால் தங்கள் தலைவராய் ஏற்றுக் கொள்ளப்பட்ட அம்பேத்கர், அவர் பிறந்த மகர் சாதிக்காரர்களால் மட்டுமல்லாது இந்தியாவில் உள்ள அனைத்து தலித்துகளாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டவர். இந்தச் சிறிய சமூகத்தில் தன்னை ஒடுக்கப்பட்ட சாதித் தன்னிலையாக உணர்ந்த அம்பேத்கர், தன் விடுதலையை எல்லா ஒடுக்கப்பட்ட சாதிகளின் விடுதலையோடு சேர்த்துப் பார்த்தார். எனவேதான் ஒட்டு மொத்த தலித்து களின் விடுதலை குறித்தே அவர் சிந்தனை, பேச்சு, போராட்டம் ஆகியவை அமைந்திருந்தன.

மறுதலையாக அயோத்திதாசர் அவர் பிறந்த பறையர் சாதியினராலேயே கூட முழுவதுமாக ஏற்றுக் கொள்ளப்படவில்லை. அயோத்திதாசரும் தன்னை ஒடுக்கப்பட்ட தன்னிலையாக உணர்ந்தாலும் தன் விடுதலையைத் தன் சாதியின் முன்னேற்றத்தோடு தொடர்புடையதாகவே பார்த்தார். தான் பிறந்த பறையர் சாதி தான் உண்மையான பிராமணர் குலமாகும். வேஷ பிராமணர்களின் சதியால் யதார்த்த பிராமணர்களான பறையர்கள் வஞ்சிக்கப் பட்டுத் தாழ்நிலையிலிருக்கின்றனர் என்கிற விதமாக அவரது புரிதலும், பிரச்சாரமும் இருந்தது.



தமிழகத்தில் தாழ்த்தப்பட்ட சாதியாரின் எண்ணிக்கையில் பிரதானமானவை அருந்ததியர், பறையர், பள்ளர் ஆகிய சாதிகளாகும். இவை தவிரவும் சாதிய ரீதியில் ஒடுக்கப்பட்ட குறவர், கணியான், புரதை வண்ணார், இருளர், காட்டு நாய்க்கர் உள்ளிட்ட பிற சாதிகளையும் உள்ளடக்கியதே 'தலித்' என்ற சொல்லாடலாகும். இவர்களில் பள்ளர் சாதியைக் குறித்துப் பேசவே செய்யாமல் ஒரு விதப் புறக்கணிப்பை நிகழ்த்தும் அதே வேளையில், இதர தாழ்த்தப்பட்ட சாதிகளை மேலாதிக்கம் செலுத்தும் ஒரு வித மேட்டிமைப் பார்வையில்

கேவலப்படுத்துவதை தனது எழுத்துகளில் தொடர்ந்து செய்கிறார் அயோத்தி தாசர்.

அம்பேத்கரின் அட்டவணைச் சாதியார் என்ற விளிப்பு எல்லா தலித்துகளையும் உள்ளடக்குவதாக இருந்தது. தீண்டாமை இழிவுகளை நீக்க எல்லா ஒடுக்கப்பட்ட சாதியாரும் ஒன்றுபடுவதை வலியுறுத்துவது அம்பேத்கரின் சித்தாந்தம். அவருடைய முழக்கமே கற்பி, ஒன்றுசேர், புரட்சி செய் என்பது தான்.

அயோத்தி தாசரின் பூர்வீக திராவிடர்கள், சாதிபேதமற்ற திராவிடர்கள் என்கிற விளிப்பு பறையர்களை மட்டுமே உள்ளடக்குவதாக இருந்தது. அதோடு ஒடுக்கப்பட்ட சாதிகளின் இணைவை அவர் முன்னிறுத்தவில்லை என்பதோடு, அம் முயற்சிக்கு எதிரானவராகவும் இருந்தார் என்பது மிக முக்கியமானதாகும். சனவரி 6, 1909 நாளிட்ட, ‘இந்தியாவில் தாழ்த்தப்பட்ட ஜாதியோருக்கு நியமிக்கப்பட்ட சங்கம்’ என்ற தலைப்பிட்ட கட்டுரையில் அயோத்திதாசர் இவ்வாறு எழுதுகிறார்.

“இந்த டிசம்பர் மாதம் விடுமுறைக் காலத்தில் சில பெரியோர்கள் கூடி இந்தியாவில் தாழ்த்தப் பட்டுள்ள சாதியோரைச் சீர்திருத்த வேண்டும் என்று முடிவு செய்திருக்கிறார்கள்.

இவற்றுள் இயல்பாகவே அறிவின்றித் தாழ்ந்துள்ள சில வகுப்பாரும் உண்டு. சாதித் தலைவர்களின் விரோதத்தால் தாழ்த்தப்பட்டுள்ளவர்களும் நாளது வரையில் தாழ்த்தி வருகிறவற்றுள் தாழ்ந்தவர்களுமாகிய ஓர் வகுப்பாரும் உண்டு.

அவர்கள் யாரென்பிரேல் குறவர், வில்லியர், சக்கிலியர், மலமெடுக்கும் தோட்டிகள் இயல்பாகவே தாழ்ந்த நிலையிலுள்ளவர்கள்.

சாதித் தலைவர்களாகும் வேஷ பிராமணர்களால் பறையரென்றும், சாம்பாரென்றும் வலங்கை ரென்றும் கூறி அவர்களைச் சுத்த ஜலங்களை மொண்டு குடிக்க விடாமலும், வண்ணார்களை வஸ்திரமெடுக்க விடாமலும், அம்மட்டர்களை சவரஞ்செய்ய விடாமலும், அந்தஸ்தான உத்தியோகங்களில் பிரவேசிக்க விடாமலும், ஏதோ துரை மக்கள் கருணையால் ஓர் உத்தியோகத்தை பெற்றுக்கொண்ட போதிலும் அதனினின்று முன்னுக்கு ஏறவிடாமலும் பலவகை இடுக்கங்களைச் செய்து தாழ்த்திக் கொண்டே வருகிறார்கள். இவர்களைத் தாழ்ந்த வகுப்பார் என்று கூறலாகாது. சாதிபேதமுள்ள மற்றவர்களால் தாழ்த்தப்பட்ட வகுப்பார் என்று கூறல் வேண்டும்.

இவற்றுள் கூளங் குப்பைகளுடன் குணப்பெரும் பொருட்களையும் சேர குவித்து குப்பைக் குழி யென்பது போல கல்வியிலும், நாகரீகத்திலும், விவேகத்திலும், ஒற்றுமையிலும் மிகுந்து வேஷ பிராமணர்கள் கற்பனா கதைகளுக்கிணங்காமல் விரோதிகளாய் நின்ற திராவிட பௌத்தர்கள் யாவரையும் பறையர், சாம்பார், வலங்கையரென்று தாழ்த்திக் கொண்டதுமின்றி சக்கிலி, தோட்டி, குறவர், வில்லியர் இவர்கள் யாவரையும் ஐந்தாவது சாதியென்றும், பஞ்சம சாதியென நூதன பெயரிட்டு மேன்மக்களாம் பௌத்தர் களையும் அக்குப்பையில் சேர்த்து பஞ்சம சாதியென்று வகுத்திருக்கின்றார்கள்.”

(அயோத்தி தாசர் தொகுதி 1, ப.97)

கூளங்குப்பைகள் X குணப்பெரும் பொருட்கள்

இயல்பிலேயே தாழ்ந்துள்ள X தாழ்த்தப்பட்டவர்கள்

கல்வி, நாகரீகம், விவேகம், ஒற்றுமையற்ற தாழ்ந்த மக்கள் X இவைகளில் சிறந்த பறையர்கள்.

என்கிற விதமாக அயோத்திய தாசர் கட்டமைக்கும் இருமை எதிர்வுகளையும் அவற்றின் பின் ஒளிந்துள்ள பாசிசக் கூறுகளையும் தலித் அரசியலில் அக்கறையுள்ள தோழர்கள் கவனிக்க வேண்டும்.

தோட்டிகளின் குழந்தைகள் படிக்கும் கல்விச் சாலைகளுக்கும், பறைக்குழந்தைகள் படிக்கும் கல்விச் சாலைகளுக்கும் பஞ்சமர் பாடசாலையென்ற ஒரே பேரை வைத்து விட்டார்கள் என்று பதறிப் போகிறார் தலித் சிந்தனையாளர்.

“ஆயிரத்து ஐந்நூறு வருடகாலமாக இந்த திராவிட பௌத்தர்களைத் தலையெடுக்க விடாமல் தாழ்த்திப் பலவகை இடுக்கங்களைச் செய்து வந்த சத்துருக்களாகிய வேஷ பிராமணர்களுக்கு பருப்பில் நெய்யை விட்டது போலும், பாலில் பழம் விழுந்தது போலும் மென்மேலும் ஆனந்தம் பிறந்து தங்கள் வஞ்சகங்கள் யாவையும் சரிவர நிறைவேற்றி விடுவதற்காக தோட்டிகள் பிள்ளைகளுக்குக் கல்விச் சாலை வகுத்து அதையும் பஞ்சமர் பாடசாலை எனக் குறித்து விட்டார்கள்.

இவ்வகை கருத்து யாதெனில் இன்னுஞ் சில காலங்களுக்குப்பின் தோட்டிகள், பறையர்கள் யாவரும் ஒரு வகுப்பாரென்றுங் கூறி இன்னுந் தலையெடுக்க விடாமல் நாசஞ் செய்வதற்கேயாம்”

- அயோத்தி தாசர் தொகுதி 1, ப.138

சாதி பேதமற்ற திராவிடர்கள், சாதிபேதமற்ற திராவிடர்கள் என்று மூச்சுக்கு முந்நூறு முறை தங்களைச் சொல்லிக் கொள்ளும் சிந்தனையாளருக்கு சாதி பேதமென்பது எது என்ற சிந்தனையை மட்டும் யாராவது சொல்லிக் கொடுக்காமல் போய் விட்டார்களே என்ற குறைதான் நமக்கு. பறையர் சாதியின் உட் பிரிவுகளுள் உள்ள பேதங்களைத் தான் சாதிபேதம் சாதிபேதம் என்று கருதி இருக்கிறார் நம் சிந்தனையாளர்.

‘இயல்பாகவே தாழ்ந்த சாதியார்’ குறித்த பட்டியலை இன்னொரு இடத்திலும் தயார் செய்கிறார் தலித் சிந்தனையாளர் அயோத்தி தாசர்.

“சாதி பேதமற்ற திராவிடர்களைப்போல் பராய சாதியோர்களால் நசுங்கிக் குன்றாமல் அவர்கள் சார்பாய் நிற்கும் படுகர், தொதுவர், கோத்தர், குறும்பர், வில்லியர், குறவர் இவர்கள் மீது மிஷினெரிமார்கள் கருணை வைத்து கல்விப் பயிற்சி செய்து வந்த போதினும் கல்விவிருத்தியும், உத்தியோக விருத்தியும் இல்லாமலே மயங்கி நிற்கின்றார்கள். காரணம் இவர்கள் பூர்வம் நல்ல அந்தஸ்தில் இல்லாமல் தற்காலம் இருக்கும் நிலையிலேயே இருந்தவர்களாதலின் கருணை தங்கிய மிஷினெரியார்கள் யாது விருத்தி செய்யினும் முழு விருத்தியடையாமல் இயங்குகின்றார்கள்.

சாதிபேதமற்ற திராவிடர்களோ அத்தகைய திகைப்பின்றி எங்கு கல்வி விருத்தி கிடைக்கின்றதோ அங்கு விருத்தி பெற்றுச் சுகமடைகின்றார்கள்."

- அயோத்திதாசர் சிந்தனைகள் தொகுதி 1, ப.118

இந்தப் பட்டியலில் இயல்பாய்த் தாழ்ந்த வகுப்பினரின் பட்டியல் இன்னும் கொஞ்சம் பெரிதாய் இருப்பதை வாசகர்கள் கவனிக்கலாம். இயல்பாகத் தாழ்ந்த சாதியாய் இருப்பது என்பது எப்படி என்று நமக்கு விளங்கவில்லை. சரித்திரத்தின் பின்னோக்கிய பக்கங்களில் ஒன்றில் இந்த குறிப்பிட்ட சாதியோர் எல்லாம் ஒன்றாய் கூடி இன்று முதல் நாம் இயல்பாய்த் தாழ்ந்த சாதியராய் இருப்போம் என்று பிரதிக்ஞை எடுத்துக் கொண்டார்களா? அல்லது புத்த பகவான் தான் இவர்களை இயல்பாய் தாழ்ந்த சாதியாய் இருக்கக் கடவீர்கள் என்று அருளாசி அருளிப் போந்தாரா, பார்ப்பனீயம் வழங்கும் வருணாசிரம தர்மம் குறித்த வரையறைகளையும் பிரம்ம தோற்றுவாய் குறித்த கதைகளையும் அயோத்தி தாசர் ஏற்கவில்லை என்பதால் இத்தகைய கருதுகோள்களுக்கு நாம் வரலாம்.

பண்டைத் தமிழரின் ஐவகை நிலமும், அந்நிலத்தில் வாழும் மக்களைக் குறித்தும் நாம் அறிந்தபடி குறிஞ்சி நிலம் சார்ந்த மக்களாய் அறியப்படுபவர்கள் குறவர்கள்-குறத்தியர்கள் ஆவார்கள். நம் சிந்தனையாளரின் இயல்பாய்த் தாழ்ந்தோரின் பட்டியலில் தவறாது இடம் பெறும் பாக்கியத்தை இவர்கள் பெற்றதும் பெறும் பேறுதான் போங்கள்.

இத்தகைய குறவர்கள் குறித்த தம் அரிய கண்டுபிடிப்பை நம் சிந்தனையாளர் ஓரிடத்தில் வெளிப்படுத்துகிறார்.

"நூதன சாதி வேஷம் பூண்டுள்ள யாவரும் சாதிபேதமில்லாமல் வாழ்ந்திருந்தப் பூர்வகுடிகளைத் தாழ்ந்த சாதிகளெனக் கூறித் தாங்கள் தாழ்த்தி தலையெடுக்க விடாமற் செய்வதுடன் வந்து குடியேறும் அன்னிய தேசத்தாருக்குந் தாழ்ந்த சாதியோர் எனக்கூறி அவர்களாலும் இழிவு கூறச் செய்து மலமெடுக்குந் தோட்டிகளுக்கும், மலோபாதைக்குப் போனால் காலலம்பாது பூனையையும் பெருச்சாளியையும் பிடித்துத் தின்னும் குறவர் வில்லியருக்குங் கற்பித்து இவர்களைத் தாழ்ந்த சாதியோரெனக் கூறச் செய்து வரும் விரோத செய்கைகளையும் நாளுக்கு நாள் கண்டறிய முயன்ற எமக்கு..."

(11.1913 ப.469)

நம் தோழர்கள் முன்வைக்கும் தலித் சிந்தனையாளரின் தலித் உணர்வைக் கண்டு நாம் மெய் சிலிர்த்துப் போகாமல் இருக்க முடியாது. பெரியாரின் நம்மில் கீழ்த்தர மக்கள், சோறு, சீலை, காசுக்கு அலைபவர்கள் என்ற பிரயோகங்களை வைத்துக் கொண்டு அந்தக் குதி குதித்தவர்கள் அதே விதமாய் இந்தப் பிரயோகங்களுக்கும் குதிப்பார்கள் என்று எதிர்பார்க்கலாமா அல்லது பறைச் சிந்தனையாளர் குசு நாறாது, மணக்கும் என்பார்களா என்பதை அவர்களே தான் முடிவு செய்து கொள்ளட்டுமே.

அங்ஙனமே நம் சிந்தனையாளர் துவேஷங் கொள்ளும் இன்னொரு மக்கள் கூட்டம் சக்கிலியர்கள் ஆவார்கள். "இயல்பாய் தாழ்ந்த சாதியாரின்" பட்டியலில் இடம்பெறும் இவர்களை இழித்துப் பேசுவதில் வேறெந்த ஆதிக்கச் சாதிப் பாசிசச் சிந்தனையாளனும் பிச்சை கேட்க வேண்டும் போங்கள்!

இயல்பாய் தாழ்ந்த சாதியாருக்கான பொதுக் குணங்களான கல்வி நாகரீகம், விவேகம், ஒற்றுமை ஆகியவை அற்ற குப்பை கூளங்கள் என்ற நிரந்தரச் சான்றிதழ் அளித்ததோடு திருப்தி அடையாமல் பறையனாகிய நான் இழிந்தவனா என்று கேட்கும் போதெல்லாம் மேற்படி துர்பாக்கிய சாக்கியரென்னும் சக்கிலியரை நோக்கி கை நீட்டாமல் இருக்க முடியாது அவருக்கு.

"தாழ்ந்த சாதியோர் வாசஞ்செய்யும் இடத்தில் உயர்ந்த சாதிகள் போவதில் சாதி கெடும் என்பது அவரது அபிப்பிராயமாய் இருக்குமாயில் சக்கிலிப் பிணம், தோட்டிப் பிணங்களை அறுத்து சோதிப்பதை விட பறைச்சேரியின் வழியாகப் போவதால் சாதி கெடமாட்டாது".

(செப்.23 - 1908. ப.74)

தற்போது கிறிஸ்தவர்கள், பஞ்சமர்கள், மகமதியர்களென்றுக் குறிப்பிட்டு காப்பி வோட்டல் பலகைகளில் எழுதி வைத்துள்ள வைகள் சாதி சம்பந்தச் செயலாயின் மற்றைய குறவர், வில்லியர், சக்கிலியர், தோட்டிகளென்னும் நான்கு வகுப்பாரும் வரலாமோ, வரக் கூடாதோ விளங்கவில்லை. அவர்களும் வரக் கூடாதாயின் அந்நான்கு வகுப்புப் பெயர்களையும் பலகைகளில் எழுதி வைத்திருத்தல் வேண்டும்.

(ஆகஸ்டு - 14-1910. ப.273)

"............நமது அம்மட்டன் பறையர்களுக்கு சவரம் பண்ணக்கூடாது. நமது வண்ணான் பறையர்களுடைய வஸ்திரங்களை எடுத்து வெளுக்கப்படாது. டாக்டர் வேலையிலமர்ந்து, தோட்டிப் பிணமாயினும் சக்கிலிப் பிணமாயினும் நன்றாய் தொட்டு அறுக்கலாம். உறுப்புகளைச் சோதிக்கலாம். ஆயினும் பறையனை மட்டிலுந்தீண்டப்படாது...." (பிப்.5 - 1913, ப.452)

இவை தவிரவும் கம்மாளர், சக்கிலியர், பறையர் உறவு குறித்த ஒரு வாசகரின் கேள்வியையும் அதற்கான பண்டிதரின் பதிலையும் பார்ப்போம்.

**வினா:** பூர்வ பௌத்த சக்கிரவர்த்திகளின் வமிஷ வரிசையோரும் பௌத்த சிகாமணிகளுமாயிருந்து தற்காலம் பறையரென்று அழைக்கப் படுவோர்களுமாய் ஏழை மக்கள் விசுவ பிரம்ம குலத்தாரென்னும் கம்மாளரிடம் ஜலபானஞ் செய்யாது சாத முதலியது உண்ணாதுந் தங்களை விட கம்மாளர் கீழானவர்களென்றுக் கொண்டுள்ள வைராக்கியம் யாதுக்கு?

கோசிங்கிகள் என்றழைக்கப்படுஞ் சக்கிலியரை பறையரென்போர் மாமன் மைத்துனன் உறவாய் முறை கொண்டாடி, உண்பன, கொள்வன, கொடுப்பனவைகளில் சம்பந்தப்படர்மனிற்பதோ ஒருவருக்கொருவர் வீதிகளில் ஒருவருக்கொருவர் பாதரட்சை அணிந்து ஏகாது உறுதி செய்து கொண்டு இவ்விரு தரத்தாரில் யாரேனுந் தெரிந்தோ, தெரியாதோ வீதிகளில் பாதரட்சை அணிந்து ஏகினால் இருவகுப்பாரும் பஞ்சாய சபைக் கூட்டி தவறு செய்தவனிடம் அபராதம் முதலியவைகள் வாங்கி வருவதெற்றுக்கு? சி.முத்துக்குமாரசாமி, நாதமுனி, தீர்த்தகிரி வாத்தியாயர், ஜோலார்பதி)

**விடை:** ஜோலார்பதி உபாத்தியாயர்களே சற்று நோக்குவீர்களாக தாங்கள் வினவியுள்ள சங்கைகள் யாவும் மத்தியில், தோன்றி மறைந்த வைகளேயாம். அதாவது பிராமணர்களென் போருக்கும், கம்மாளர்களென்போருக்கும் சித்தூர் ஜில்லாவில் நேரிட்ட வழக்கில், கம்மாளர் ஜெயம் பெற்றபோது பிராமணர்களென்போர் பறையர்களென்று அழைக்கப்படுவோரை வலங்கையரெனத் தங்களுடன் சேர்த்துக் கொண்டு இவர்களுக்குக் கற்பித்த விரோதச் செயலால் அவ்வகை உண்பினையைத் தவிர்த்து வீண் விரோதிகளாகி விட்டார்களன்றி வேறில்லை. மற்றபடி இவர்கள் அவர்களுக்குத் தாழ்ந்தவர்களல்ல. அவர்கள் இவர்களுக்குத் தாழ்ந்தவர்களல்ல. பிராமணர்களென்போர் செய்த விரோதசெயல்களேயாம்.

வசிஷ்டரைச் சக்கிலிச்சு மகனென்று கூறியுள்ள ஒரு சரித்திரத்தைக் கொண்டும் விஸ்வாமித்திரர் பரம்பரையைக் கொண்டும் மைத்துனர் முறை கொண்டாடி வந்த சில சரித்திரங்களை ஒட்டிப் பேசிவந்த போதிலும் அவர்களது அசுத்த செயலை ஒட்டி உண்பிணையற்றிருப்பதுடன் வாசஞ் செய்யும் வீதிகளில் பாதரட்சை அணிந்து வரப்போகாதென்றுந் தடுத்து வந்தார்கள். (சனவரி 30,1912, ப.675)

கேள்விகளின் இரு பகுதிகளுக்கான பதில்களுக்கிடையே உள்ள வித்தியாசத்தை உணர முடிகிறதா? கேள்வியாளர் ஒருவருக்கொருவர் என்று இரு தரப்பாரையும் குறிப்பிட்டு கேட்பதற்குத் தந்திரமாய் சக்கிலியரை மாத்திரம் குறிப்பிட்டுப் பதில் சொல்வதை கவனியுங்கள்.

பறையர்கள் பூர்வ பௌத்தர்கள் என்று சொல்வதற்கான காரணங்கள் என்று அவர் காட்டும் அத்தனையும் அருந்ததியர்களுக்கும் பொருந்துபன வாயிருப்பதை ஏன் மறந்து போகிறார் என்பதும் முக்கியமான கேள்வி.

1500 வருடங்களுக்கு முன் பறையர்கள் நல்ல நிலையில் இருந்தார்கள் என்று துப்பறிந்து சொல்லும் பண்டிதருக்கு ஒரு நூற்றாண்டுகளுக்கு முன்பு வரை கூட படைத்தலைவர்களாக அருந்ததி யர்கள் இருந்த வரலாறு ஏன் வசதியாக மறந்து போகிறது. மதுரை வீரன், ஒண்டி வீரன், பொட்டிப் பகடை, முத்தன் பகடை, கந்தன் பகடை என்று மாவீரர்கள் பிறந்த மக்கள் கூட்டம் அது என்கிற அறிவு வெள்ளைக்காரர்களுக்கு உருவி விட்டுக் கொண்டிருந்ததால் இல்லாமல் போனதா? வெள்ளைக்காரர்கள் வரும் வரையிலும் இங்கு மலம் கழிக்க கக்கூஸ்கள் என்ற ஒரு தனி அமைப்பு இல்லா மலிருந்தும், அதுவரையில் மனித கழிவுகளை மனிதர் எடுக்கும் அவலம் இல்லாமல் இருந்ததும் உறைக்காமல், மனித இனம் தோன்றியது முதலே அருந்ததியர்கள் மலமெடுத்து வந்ததைப் போல் அத்தனை அருவருப்புடன் அவர்களைப் பார்க்கச் செய்வது எது?

அதோடு அம்மாமிகள் ஸ்ரீராம ஜெயம் எழுது வது மாதிரி பக்கத்துக்குப் பக்கம், வண்ணார்களை வஸ்திரமெடுக்க விடமாட்டேனென்கிறார்கள். அம்மட்டர்களை சவரம் செய்ய விடமாட்டேனென் கிறார்கள் என்று புகார் மனு எழுதிக் கொண்டே போகிறவருக்கு அவர்கள் மட்டும் வண்ணார் களாகவும், அம்பட்டர்களாகவும் ஏன் இருக்க வேண்டும் என்கிற கேள்வி மட்டும் ஏன் ஒரு போது எழவேயில்லை?

தூய்மை X அசுத்தம் என்கிற விதமான எதிர்வுகளைக் கட்டமைத்து மற்றதைத் தீட்டு என்று ஒதுக்கி வைப்பது பார்ப்பனீயத்தின் கூறு.

கல்வியறிவில்லாமை, நாகரீகமில்லாமை என்ற காரணங்களினால் மனிதர்களில் சேர்த்தியில்லா தவர்கள் என்று காரணம் சொல்லிக் கருப்பர்களை ஒடுக்கியது வெள்ளையரின் நிறவெறிச் சித்தாந்தம். இவ்விரண்டு விதமான பார்வைகளுடனும் பிற தலித் சாதியினரை கேவலப்படுத்தும் போக்கை அயோத்தி தாசரிடம் நாம் காணலாம்.

இவ்வாறு, பார்ப்பனீயமும், பாசிசமும் இணைந்த பார்வையே ஏனைய தலித் சாதிகள் மீதான அயோத்தி தாசரின் பார்வை என்பதை நிறுவலாம். மற்றப்படி அவர் தலித்துகளுக்கான சிந்தனையாளர் அல்ல என்பதை நிறுவ அவர் எந்த இடத்திலும் பறையர் தவிர்த்த பிற தலித் மக்களுக் காக ஒரு வரியும் எழுதவில்லை என்கிற உண்மையே போதுமான ஒன்றாகும்.

இவ்வளவு விமர்சனங்களிருக்கையில் அயோத்திதாசரைப் பெரிய ஒளிவட்டத்துடன் முன்னிறுத்தும் தோழர்கள் உண்மையில் அயோத்தி தாசரைப் படித்திருக்கிறார்களா? படித்திருந்தால் இந்த கேள்விகள் எல்லாம் அவர்களுக்கு எழ வில்லையா? எழுந்தால் அவை குறித்த விமர்சனங் களை எங்கேனும் முன்வைத்திருக்கிறார்களா? குறைந்தபட்சம் புத்தமித்திரன் போன்றவர்கள் முன்வைத்த விமர்சனங்களுக்குப் பிறகும் ஏன் வாய்திறக்க மறுக்கிறார்கள்? என்ற கேள்விகளுடன் இப்போதைக்கு நிறுத்தி கொள்ளலாம். இதற்காக வாவது வாய் திறப்பார்கள் என்ற நம்பிக்கையுடன்.

நன்றி: புதியதடம்,
ஜீலை - செப்டம்பர் 2003.

**கா.சு.நாகராசன்**
சுயமரியாதை - சமதர்ம இயக்கம்

# சூழ்ச்சி ஒழிய, மயக்கம் தெளிய!



பெரியார் பிற்படுத்தப்பட்ட மக்களின் தலைவர், அவர் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக எதுவும் செய்யவில்லை. பெரியார் "ஒரு கன்னடர்". அவர் தமிழர்களுக்காக எதுவும் செய்யவில்லை திராவிடர் என்று பேசிப்பேசி தமிழர் அல்லாதவரின் ஆதிக்கம் நிலைப்பெற காரணமானவர். இப்படி இரண்டு வகையான குற்றசாட்டுகள் அல்லது அவதூறுகள் "விமர்சனம்" எனும் பேரில் திட்டமிட்டு பரப்பப் படுகின்றன.

இவற்றிற்குத் தந்தை பெரியாரே பதிலளித்து விட்டார். பெரியார் இயக்கங்களும் பெரியார் தொண்டர்கள் மட்டுமல்லாது பல சமூக ஆய்வாளர்களும் பல கட்டங்களில் இவற்றிக்கான பதில்களைக் கொடுத்து விட்டனர். இருந்தபோதிலும் இந்த விமர்சன அவதூறுகள் வேறுவேறு வடிவங்களில் புது புது அவதாரங்களுடன் வந்து கொண்டே இருப்பதால் தினமும் நாம் பங்கிற்கு இதுபற்றி ஏதாவது பேசினால் என்ன? என்று தோன்றிய போதிலும்,

இந்த அவதூறுகளின் பின்னணியில் உள்ள சூழ்ச்சிகளை அம்பலப்படுத்துவதும், இந்தச் சூழ்ச்சிகளின் உண்மையறியாமாலும், இதிலே மயங்கிக் கொண்டிருக்கும் அப்பாவி இளைஞர்கள் கூட்டத்தை தெளிவிப்பதும் ஆன கடமைகள் நமக்கும் இருக்கிறது என்று கருதியதாலும் இதை எழுத நேர்ந்திருக்கிறது என்பதை முதலிலேயே தெரிவித்துக் கொள்கிறோம்.

எது, எப்படியோ பெரியாருக்கு எதிராக இன உணர்ச்சி கொண்ட தமிழ் இளைஞர்களையும், விடுதலை உணர்ச்சிகொண்ட தலித் இளைஞர்களையம் முன்னிறுத்தும் இந்தக் கருத்துப் போர் இன்னும் கொஞ்சம் வலுவாகத் தொடர வேண்டுமே என்கிற எதிர்பார்ப்பில் காத்திருக்கிறது ஆரியப் பார்ப்பனக் கூட்டம். அதற்கு நாம் இடங்கொடுத்து விடக்கூடது என்கிற கவலையும் பெரியார் தொண்டர்களுக்கு இருப்பதாலேயே பல நேரங்களில் பலவற்றைக் கடந்து போக நேர்ந்திருக்கிறதே அன்றி பதிலளிக்க முடியாமால் இல்லை என்பதை தெரிவிக்கும் வகையிலும் இதை எழுத நேர்ந்து விட்டது.

1973 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 24 ஆம் நாளோடு பெரியாரின் பெரும்பணி பெரும்பயணம் முடிவுக்கு வந்து விட்டது. இன்னும் சரியாகச் சொல்லப் போனால் டிசம்பர் 19 ஆம் நாள் சென்னை தியாகராய நகரில் பேசிய கூட்டம் பெரியாரின் கடைசிக்கூட்டம். நியாயமாக 1973 டிசம்பர் 19 ஆம் நாளோடு பெரியாரின் நெடிய உழைப்பு நிரந்தர ஓய்வை எட்டிவிட்டது. ஒருமனிதரின் சுவாசம் நின்றுபோய் 45 ஆண்டுகள் கடந்த பின்னும் அவர் இன்றும் விவாதப்பெருளாக இருக்கிறார் என்றால் அது தான் பெரியாரின் உழைப்புக்குக் கிடைத்திருக்கிற பெரு மரியாதை. அது ஒருபுறம் இருக்கட்டும்

பெரியாரின் எதிபர்ப்பின் எல்லை எது என்று பார்த்தால் பெரியார் எதிர்ப்பின் பிண்ணனியை உணர்ந்து கொள்வது எளிது. பெரியாரை தமிழர் இல்லை என்பவர்கள், கையோடு பார்ப் பனர்களை தமிழர்கள் என்று பாராட்டுகிறார்கள். பெரியாரைத் தலித் விரோதியாகச் சித்தரிப்பவர்கள். பரர்ப்பனர்களை நல்லவர்கள் என்று சான்று உரைக்கின்றனர். பார்ப்பனர் அல்லாத பிற்படுத்தப் பட்ட சமூக மக்களும், தாழ்த்தப்பட்ட சமூக மக்களும் இணைந்து எழுவதுதான் சமூகநீதியின் வெற்றியாக முடியும் என்கிற பெரியாரின் எதர்த்தமான உண்மை கணிசமான வெற்றியை ஈட்டியுள்ள தழிகத்தில், பிற்படுத்தப்பட்ட சமூகத்தையும், தாழ்த்தப்பட்ட சமூகத்தையம் நிரந்தரமாகப் பிரித்துவைக்கப் பார்ப்பனர்கள் செய்கிற சூழ்ச்சியே பெரியாருக்கும் அம்பேத்கருக்கும் இடை வெளியை ஏற்படுத்தும் முயற்சி.

இந்தச் சூழ்ச்சியான முயற்சிக்கு முட்டுக் கொடுக்கவே தலித் மக்களுக்குப் பெரியார் என்ன செய்தார்? என்கிற வினாவைத் தலித் இயக்கங்களின் பேரால் எழுப்புகிறது பாரப்பனியம். இந்தச் சூழ்ச்சிக்கு மெத்த படித்த மருத்துவர்களே! இரையாகி வருகிறபோது நம்முடைய திரைப்பட இயக்குநர் தோழர் இரஞ்சித் போன்றவர்கள் கொஞ்சம் மயக்கத்தில் சார்ந்திருப்பது வியப்பில்லை தான் என்றாலும்

சேரிகளில் பெரியார் கொண்டாப்படும் அளவு ஊர்களுக்குள் அம்பேத்கர் கொண்டாடப் படுகிறாரா? என்ற தோழர் இரஞ்சித்தின் கேள்வியை அப்படியே கடந்து போவது சரியான அணுகு முறையாக இருக்காது என்கிற கவலையும், இதற்கு யாரேனும் மறுப்பெழுத மாட்டார்களா? என்ற எதிர்ப் பார்ப்பும் எழுந்துள்ளது.

இந்த நேரத்தில் செப்டம்பர் மாத 'காட்டாறு' இதழ் "சுய ஜாதித் துரோகிகளின் தலைவர் பெரியார்" எனும் தலைப்பில் ஓர் அருமையான பதிவையே பதிலாகப் பதிந்திருந்தது. வரலாற்று ஆதாரங்களாடு நிறுவப்பட்டிருந்தது. தோழர் அதி அசுரனின் பதிவு பலரது மயக்கங்களை தெளி விக்கும் பலரது சூழ்ச்சிகளை அம்பலப் படுத்தும், என்பதில் அய்யமில்லை. அதை மேலும் பரப்ப வேண்டும் என்றே நாங்கள் முடிவு செய்திருக்கிறோம். இந்தக் கட்டுரை குறித்து 08.10.2017 ஞாயிறன்று தமிழ்நாடு மாணவர் மன்றம் பூந்சோலையில் நான்கு மணிநேரம் விவாத்தை நடத்தியிருக்கிறார்கள். அதில் பல கருத்துக்கள் விவாதிக்கப்பட்டன.

ஜாதீய ஒடுக்குமுறைக்கு எதிராக கோபப் பட்டே தோழர் இரஞ்சித் அந்த வினாவைத் தொடுத் திருக்கக் கூடும் என்று நாம் கருதுகிறோம். தோழர் இரஞ்சித் போன்ற பல இளைஞர்கள் இப்படியான பல கேள்விகளை எழுப்பும்படியான சமூகச்சூழல் களால் தூண்டப்படுகிறார்கள். இப்படித் தூண்டப் படும் இளைஞர்கள் பலரும் பெரியார் காலத்திய சமூகச் சூழலையோ, பெரியாரையோ படித்தறியா தவர்கள். அதனால் அவர்கள் எளிதாக இப்படிக் கேள்விகளை முன்வைத்து விட்டு நகர்ந்து விடுகிறார்கள். இவர்களைத் தெளிவுப்படுத்த வேண்டிய பொறுப்பு, பார்ப்பனீயத்திற்கு எதிராகப் பார்ப்பனர் அல்லாத மக்களை அணிதிரட்ட வேண்டியப் பொறுப்பு பெரியார்- அம்பேத்கர் தொண்டர்களுக்கே இருக்கிறது.

அதேநேரத்தில் பெரியார் இயக்கங்களின் வீச்சில் காலத்திற்கேற்ற மாற்றங்களை இன்னும் கூடுதலாக எதிர்பார்க்கிறது இந்த சமூகம். பிற் போக்குகளை விதைத்து பிரிவினைகளையும் வன் முறைகளையும் அறுவடை செய்கிற ஜாதி மதவாத இயக்கங்கள் எல்லாம் இன்றைக்கு காலச் சூழல்களுக் கேற்ற அறிவியல் மாற்றங்களில் ஒளிர்ந்து கொண்டிருக்கும் போது முற்போக்கையும் பகுத்தறி வையும் கொள்கையால் கொண்ட இயக்கங்களின் வளர்ச்சியில் செயல்பாடுகளில் புதிய புதிய மாற்றங் களை வேண்டுகிற உரிமை அந்த சமூகத்திற்கு இருக்கிறது என்றே நாங்கள் கருதுகிறோம்.

பெரியார் தமிழருக்கு என்றோ, தாழ்த்தப் பட்டோருக்கு என்றோ தனித்தனியே பேசிய தலைவ ரில்லை. மானமும் அறிவும் மனிதருக்கு அழகு என்று தான் சொன்னார். அவர் மனித சமூக முன்னேற் றத்தை வளர்ச்சியும் உயர்வும் சமத்துவமாக இருக்க வேண்டும் என்று எதிர்ப்பார்த்தவர்.

ஆக, நேரிடையாக பெரியார் யாருக்கும் எதிரானவர் அல்ல. மனித சமத்துவத்திற்கு எதிரான வர்கள் தாமாகவே பெரியாரின் எதிரிகளாகப் போனார்கள் அவ்வாளவுதான். மனிதநேயத்தின் எதிரிகளும் அறிவுக்குள்ளர்களும் பெரியாரை எதிரி யாக் கருதினார்கள். எதிரியாகச் சித்தரிக்கின்றனர்.

இந்த இந்திய இந்துச் சமூக அமைப்பே சமத்துவத்திற்கு எதிரானது என்பதால் பெரியார் இந்த அமைப்பையே எதிர்த்தார். இந்த அமைப்பை எதிர்க்கத் துணியாதவர்களும் எதிர்க்கத் தெரியாத வர்களும்தான் இங்கு பெரும்பான்மையாக இருக்கின்றனர். இவர்கள் அனைவரும் ஏதோ ஒரு வகையில் இந்த சமூக அமைப்பின் சிக்கல்களுக்குள் அவலங்களுக்குள் இழிவுகளுக்குள் சிக்கி மூழ்கி முச்சுத் திணறுகிறார்கள்.

தங்கள் துன்பத்திற்கும் அவமாத்திற்கும் இழிவுக்கும் இந்த சமூக அமைப்புதான் காரணம் என்று பலருக்கும் தெரிவதில்லை. தெரிந்த சிலருக்கு அதை வெளிச் சொல்லி இதிலிருந்து வெளியேறும் துணிச்சல் இருப்பதில்லை.

புத்தருக்குப் பிந்திய இரண்டாயிரம் ஆண்டு கால இடைவெளியில் மிக துணிச்சலாக இந்த சமூக அமைப்பின் ஆணி வேரை அசைத்து அதன் அசிங் கங்களை அம்பலப்படுத்திய தலைவர்கள் இரண்டே இரண்டு பேர்தான். ஒருவர் தந்தை பெரியார் இன் னொருவர் புரட்சியாளர் அம்பேத்கர். புத்தருக்கும் பெரியாருக்கும் இடைப்பட்ட காலத்தில் பலர் பார்ப்பன எதிர்ப்பைப் பேசினார்கள், எழுதினர்கள். பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்ற வள்ளு வரின் வாக்கு மூலம் கூட நால்வருண வேத கருத்துக்கு மறுப்புத்தானே தவிர வேறு அல்ல. சித்தர்களின் தத்துவங்கள் பார்ப்பனீயத்திற்கு எதிரானவை. ஆனால் இவையெல்லாம் வெகுமக்களின் கவனத் தைத் திருப்பாத காரணத்தால் பார்ப்பனர்கள் தங்கள் எதிர்ப்பாளர்களை எளிதாக அழித்தொழித்தனர்.

பார்ப்பனச் சூழ்ச்சி வலைகளை அறுத்து திருக்குறளை எடுத்து வந்து மக்கள் மன்றத்தில் போட்டு, தமிழனின் ஈராயிரம் ஆண்டு முந்திய அறிவை பாருங்கள் என்று உலத்தின் முன்னால் திருக் குறளின் பெருமையை புகழை உயர்த்தி காட்டிய பெரியார்... தமிழர் விரோதி?

சாதிப் படிநிலையில் கடைசியாக இருக்கிற தாழ்த்தப்பட்ட மக்களின் ஒடுக்கு முறைக்கு எதிராக **"பறையன் பட்டம் போகாமல் சூத்திர பட்டம் போகாது"** என்று பிற்படுத்தப்பட்ட இடைநிலை சாதித் தலைவர்களை எச்சரித்த பெரியார்.

"சாதியை அழித்தொழிக்கும் வழி" என்கிற புரட்சியாளரின் கருத்துக்களை முதன்முதலில் தமிழில் மொழிபெயர்த்து நூலாக வெளியிட்டு மக்களிடையே பரப்பிய பெரியார் இங்கே... தாழ்த்தப்பட்டோரின் எதிரி?

புரட்சியாளர்கள் அம்பேத்கரும் சரி, தந்தை பெரியாரும் சரி, சமூக சமத்துவத்திற்கு எதிரான இந்தச் சமூக அமைப்பை அடியோடு வெறுத்தனர். இந்த அமைப்பின் அடிக்கட்டுமானத்தின் மீது தங்கள் தாக்குதலைத் தொடுத்தனர். இருவரும் இருவேறு பகுதிகளில் இருவேறு தளங்களில் நின்றவர்கள். குறிப்பாக, புரட்சியாளர் அம்பேத்கர் வடமாநிலத்தைச் சேர்ந்தவர். ஒடுக்கப்பட்ட சமூகத்தில் பிறந்து கடுமையான ஒடுக்குமுறைகளைச் சந்தித்து, அதனிடையே நிகரற்ற தமது கல்வி அறிவால் இந்த சனாதான சமூகத்தின் மீது தமது அறிவுச் சாட்டையை சுழற்றிப் போரடினார். தந்தை பெரியார் தென்னகத்தில் பிறந்தவர். பெரிய படிப்புகள் படிக்காதவர். ஆனால் சமூக அமைப்பில் ஆதிக்க ஜாதியில் பிறந்த பெரும் பணக்காரராக வளர்ந்தவர். பல பட்டங்களும் பதவிகளும் அவரைத் தேடி வந்தன. பிறகு அனைத்தையும் துறந்து சமூக வெளியில் பயணித்த தலைவர்.

இந்த இரண்டு பேருடைய வாழ்வியல் அமைப்புகள் வேறு வேறானாவை. இரண்டு பேருடைய தொடக்கால சமூக பங்களிப்புகள் வேறு வேறானவை. ஆனால், இருவருடைய பயணமும் ஒரு புள்ளியில் வந்து சந்தித்துக் கொண்டது. அவர்கள் காலத்திலேயே இருவருடைய சிந்தனை, எண்ணம், எதிர்பார்ப்பு, லட்சியம் எல்லாம் ஒன்றாகி இன்றைக்கும் அவை இணைகோடுகளைகப் பயணிக்கின்றன. இந்த மண்ணில் 'சமத்துவ சமூகம்' ஒன்று மலரும் என்றால் அதன் அடியுரமாக பெரியர் - அம்பேத்கர் ஆகியோரது தத்துவங்களே இருக்குமே தவிர, வேறு ஒன்றும் இருக்கமுடியாது.

அப்படிபட்ட இந்த இரண்டு தத்துவத் தலைவர்களைப் பற்றிப் பேசுகிறபோது இருவருக்கும் இடையில் ஒரு வர்ணாசிரம வேறுபாடு இருப்பது போல் சுட்டிக் காட்டுவதும் அதன் மூலம் பெரியாரைத் தனிமைப்படுத்த முயல்வதும் ஆன செயல்கள் யாருக்கு நன்மை விளைவிக்கும்? அது யாருக்கு எதிராக அமையும்? என்கிற சாதாரண அறிவு கூட இல்லாமல் பேசுவதை எந்த வகையிலும் சமாதானம் செய்ய முடியாது என்பதுதான் உண்மை.

புரட்சியாளர் அம்பேத்கர், "நான் இந்துவாகப் பிறந்துவிட்டேன்! ஆனால், இந்துவாகச் சாக மாட்டேன்!" என்று இந்துச் சனாதானத்தின் முகத்தில் அறைந்து சொன்னார். சொன்னபடி இலட்சக்கணக்கான மக்களோடு இந்து மதத்திலிருந்து வெளியேறி புத்தநெறியில் கலந்து விட்டார். அம்பேத்கரின் இந்த புரட்சிகர நடவடிக்கை இன்று 60 ஆண்டுகளை கடந்து விட்டது. நாடு முழுவதும் அம்பேத்கர் இயக்கங்கள், லட்சக்கணக்கான அம்பேத்கர் பின்பற்றாளர்கள் நாள்தோறும் தோன்றிய வண்ணம் இருக்கிறார்கள். மகிழ்ச்சி! ஆனால், எத்தனை சேரிகள் இன்று சனாதானத்திலிருந்து வெளியேறி புத்த நெறியை பின்பற்றுகின்றன? இது சிந்தனைக்கான கேள்வியே தவிர யாரையும் சங்கடப்படுத்த அல்ல!

ஆனால், ஆரியப் பார்ப்பன மேலாதிக்கத்தை நிலைநிறுத்தவும் வேதகால சனாதானத்தைப் பாதுக் காக்கவுமே நிறுவப்பட்ட பார்ப்பன ஆர்.எஸ்.எஸ். இன்றைக்கு புரட்சியாளர் அம்பேத்கரின் பிறந்த நாளை கொண்டாடுகிறது! சென்னை அய்.அய்.டி. யில் அம்பேத்கர் பெரியார் வாசகர் வட்டம் குறித்த பிரச்சனையில் "அம்பேத்கரை ஒப்புக் கொள்வோம்! ஈவேராவை ஏற்க மாட்டோம்" என இந்துத்துவ சக்திகள் வெளிப்படையாகவே பேசின. கலவரப் பிள்ளையார் ஊர்வலங்களின் விளம்பரங்களில் தலைவர்களின் வரிசையில் புரட்சியாளர் அம்பேத்கரின் படத்தை துணிச்சலாகப் பயன்படுத்து கின்றனர்.

> **பிற்படுத்தப்பட்ட சமூகத்தையும், தாழ்த்தப்பட்ட சமூகத்தையம் நிரந்தரமாகப் பிரித்துவைக்கப் பார்ப்பனர்கள் செய்கிற சூழ்ச்சியே பெரியாருக்கும் அம்பேத்கருக்கும் இடை வெளியை ஏற்படுத்தும் முயற்சி.**
>
> **....பார்ப்பனீயத்திற்கு எதிராகப் பார்ப்பனர் அல்லாத மக்களை அணிதிரட்ட வேண்டியப் பொறுப்பு பெரியார்- அம்பேத்கர் தொண்டர்களுக்கே இருக்கிறது.**

இவையெல்லாம் சொல்ல வருகிற சேதி என்ன? புத்தரைப் போல மகாவீரரைப் போல புரட்சியாளர் அம்பேத்கரையும் விழுங்கப் முயற்சிக்கிறது பார்ப்பனீயம் என்பதுதானே! அம்பேத்கரின் பின்பற்றாளர்கள் என்போர் இதற்காக ஆற்றிய எதிர்வினை என்ன?

"இந்து மதத்தின் எந்த கடவுளையும் நான் வணங்கவும் மாட்டேன், இந்து மதத்தின் எந்தவொரு சடங்கையும் நான் பின்பற்றவும் மாட்டேன்" என்பதை அறிவிக்கும் புரட்சியாளரின் 22 கட்டளைகளை மக்களிடையே கொண்டு சேர்த்த இயக்கங்கள் எத்தனை? குறைந்த பட்சம் தலித் மக்களிடையே இந்து மத எதிர்ப்புணர்ச்சிகளைப் பதியச் செய்த தலித் இயக்கங்கள் எத்தனை? அப்படி ஒரு முயற்சி நடந்திருக்குமானால் இந்நேரம் சேரிகளிலிருக்கும் மதுரைவீரன், வீரமாத்தி கோவில்களில் விநாயகனுக்கு பதிலாக குறைந்தபட்சம் புத்தராவது இருந்திருப்பாரே! மதுரைவீரனுக்கு இந்து முறைப்படி கும்பாபிசேகம் நடக்காமலாவது இருந்திருக்குமே!

தலித் விடுதலைக்கு பெரியார் என்ன செய்தார்? என்று கேட்கும் போராளி தலித்துகள் இவை குறித்தெல்லாம் சிந்தித்தார்களா? எந்தவொரு பெரியாரிஸ்டாவது இதுவரை பொதுவெளியில் இப்படி கேள்வி கேட்டிருப்பார்களா? இல்லையே! காரணம் என்ன? பெரியரிஸ்டுகளும் தலித் இயக்கங்களும் இப்படியான விமர்சனங்களில் தங்கள் உழைப்பை, நேரத்தை, சிந்தனையை செலவழித்துக் கொண்டுத் திரிய வேண்டுமே தவிர, தவறியும் இருவரும் ஒன்றாகச் சேர்ந்து தங்கள் பொது எதிரி பார்ப்பான் தான் என்று எதிர்ப்பை ஓரிடத்தில் குவித்துவிடக்கூடது என்கிற பெருங்கவலையில் இருக்கும் பார்ப்பனர்களுக்கு இடமளித்து விடக் கூடது என்பதால் தான்!

பிற்படுத்தப்பட்டவர்களும், தாழ்த்தப் பட்டவர்களும் பெரியாரிஸ்டுகள் என்போரும், அம்பேத்கரிஸ்டுகள் என்போரும் இணைந்து எழ வேண்டியவர்களே தவிர பிரிந்து விழுந்துவிடக் கூடாதவர்கள் என்கிற எண்ணமும் சிந்தனையும் தான்! இதை ஏன் அம்பேத்கர் பெயரைப் பயன்படுத்திக்கெண்டு பெரியாரை விமர்சிப்பவர்கள் உணர்வதில்லை?

இப்படியே கொஞ்சம் திரும்பிப் பார்த்தோமேயானால் அம்பேத்கரை ஏற்றுக் கொள்வதாகச் சொல்லி பிறந்த நாள் கொண்டாடும் பார்ப்பன சக்திகள் பெரியாரை எதன் அடிப்படையிலும் நெருங்கவே தயங்குகிறார்கள் ஏன்? பெரியார் இன்றைக்கும் பார்ப்பன வர்ணாசிரம தர்மிகளின் எதிரியாகவே அடையாங்காணப்படுகிறார்.

பெரியாருக்கும் அம்பேத்கருக்கும் இந்திய சனாதான சமூகத்தில் சமூகநீதிக்கான தேரோடும் தண்டவாளங்கள். பெரியாரையும் அம்பேத்கரையும் பிரித்துப் போடும் எந்தவொரு சூழ்ச்சிக்கும் எந்தவொரு பெரியாரிஸ்டும் இடம் கொடுத்ததே இல்லை. ஆனால், அம்பேத்கரின் பெயரை படத்தை வைத்துக் கொண்டு சாதி அடையாளத்தையும் பத்திரப் படுத்திக் கொண்டு, தலித் இயக்கங்களுக்கும் ஒளிந்து கொண்டு பெரியாரை விமர்சனம் செய்து கொண்டிருக்கிற பார்ப்பன அடிமைகள் பலர் இன்றைக்கும் இருக்கிறார்கள். இவர்கள் தலித் விடுதலைக்கும் சாதி ஒழிப்புக்குமே எதிரானவர்கள். தலித் இயக்கம் அல்லாது தலித் அடையாளம் தாங்கியவாறு பெரியாரை விமர்சிக்கின்றனர் அப்பட்டமான தலித் விரோதிகள் என்றே நாங்கள் பகிரங்கமாகவே குற்றஞ்சாட்டுகிறோம்!

இன்றைக்கு இந்து - இந்தியச் சமூகத்தில் வேறெந்த தேசிய இனங்களைக் காட்டிலும் தமிழரின் கல்வி - சமூக - அரசியல் பொருளாதர நிலை மேம்பட்டதாகவே இருக்கிறது. இந்தியாவின் வேறெந்த மாநிலங்களைவிட தமிழ்நாட்டு தாழ்த்தப் பட்டோர் மேம்பட்டவர்களாகவே இருக்கிறார்கள். இந்த மாற்றம் பெரியாரால் உண்டானது.

இந்தியாவின் வேறெந்த மாநிலங்களை விட, தமிழ்நாட்டில்தான் பட்டிதொட்டி எங்கும் அம்பேத்கர் கொண்டடப்படுகிறார். தமிழ்நாட்டின் மூலை முடுக்கெல்லாம் அம்பேத்கரைப் போற்றாத இயக்கங்கள் இல்லை. சாதி - ஒழிப்பு, மதவாத எதிர்ப்பு, இன உரிமை, பெண் விடுதலை என எந்தத் தளத்தில் இயங்குகிற இயக்கமாக இருந்தாலும் அங்கே பெரியாரோடு, அம்பேத்கர் கட்டாயம் இருப்பார். காரணம் பெரியாரிஸ்டுகள்.

பெரியாரை நேருக்கு நேர் எதிர்க்கொள்ள துணிவில்லாத பார்ப்பனீயம் தமிழர் - திராவிடர் சிக்கலை உருவாக்குகிறது .பெரியாரையும் அம்பேத்கரையும் பிரித்துப் போட முயற்சிக்கும் பார்ப்பனீயம் பெரியாரைத் தலித் விரோதியாவும் காட்ட துடிக்கிறது. இந்தச் சூழ்ச்சிக்கு சுயநலத்தோடு இரையானவர்கள் பெரியாரை, சமூகநீதியை இகழ்ந்து எதிரியாகக் காட்டி பார்ப்பனர்களின் தயவைப் பெற்று வளமடைகிறார்கள், வாழ்வில் செழிப்படைகிறார்கள்.

இந்தச் சுயநல சூழ்ச்சிக்காரர்களின் ஏமாற்று வித்தையில் தோழர் இரஞ்சித் போன்ற இளைஞர்கள் மயங்கிவிடக்கூடாது. மாறாக, தங்களின் இழிவுக்குக் காரணம் யார் என்பது பெரியார் அம்பேத்கர் பார்வையில் அடையாளங்கண்டு எதிர்க்கிற களத்துக்கு வரவேண்டும்.

பார்ப்பனர் அல்லாத மக்களின் குறிப்பாக பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களின் ஒற்றுமையில் தான் உண்மையான சமூகநீதி இருக்கிறது. பெரியார் அம்பேத்கர் தத்துவங்கள் இரு தத்துவத் தலைவர்களின் வாழ்க்கை முறை ஆகியவற்றிலிருந்து நாம் கற்றுக் கொள்வதற்கு ஏராளம் இருக்கிறது.

தந்தை பெரியாரின் பெரும்பணியில் பெரியாரிஸ்டுகளின் தொடர்பினால் எந்த இடத்திலும் தாழ்த்தப்பட்ட சமூகத்திற்கோ, புரட்சியாளர் அம்பேத்கருக்கோ எதிராக எந்தவொரு நிலைப்பாடும் இல்லை. ஆனால், தலித் என்கிற அடையாளத்தோடு பெரியாருக்கு எதிரான தீண்டமையை யாரும் கையலெடுக்காதீர்கள் என்கிற வேண்டுகோளையே இந்த ஆய்வுக் கட்டுரையின் வாயிலாக முன்வைக்கிறோம், மறுப்பு இருப்பின் வரவேற்கிறோம்!

தொகுப்பு: பிரபாகரன் அழகர்சாமி

# தமிழ்நாட்டிற்கு நவோதயா பள்ளிகள் வேண்டாம், ஏன்?



1986ஆம் ஆண்டு, அப்போதைய இந்திய பிரதமர் இராஜிவ் காந்தியின் ஆட்சிக்காலத்தில், மத்திய அரசால் கொண்டுவரப்பட்ட திட்டம்தான் ஜவகர் நவோதயா வித்யாலயா பள்ளிகள் என்பவை. மாவட்டத்திற்கு ஒரு நவோதயா பள்ளிக்கூடம் அமைக்கப்படவேண்டும் என்பது தேசிய கல்விக்கொள்கையின் (1986) திட்டமாகும். ஆறாம் வகுப்பு முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரையிலான கல்வி இந்த பள்ளிக்கூடங்களில் வழங்கப்படும்.

மத்திய அரசின் பாடத்திட்டமான சிபிஎஸ்ஈ பாடத்திட்டத்தினை இந்தப் பள்ளிகள் பயிற்றுவிக்கும். இந்தப் பள்ளிக்கூடங்கள் முழுக்க உண்டு-உறைவிடப்பள்ளிகளாக மட்டுமே செயல்படும். பள்ளியின் 75 சத இடங்கள் அந்தந்த மாவட்டத்தைச் சேர்ந்த கிராமப்புற மாணவர்களுக்கு ஒதுக்கப் படுவதாக சொல்லப்படுகிறது. மேலும், பட்டியல் வகுப்பினருக்கான இடஒதுக்கீடும் மாணவர் சேர்க்கையில் பின்பற்றப்படுகிறது. மூன்றில் ஒரு பங்கு இடங்கள் பெண் குழந்தைகளுக்கு ஒதுக்கப் படுக்கின்றன. பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு இதுவரை எந்த இடஒதுக்கீடும் இல்லை.

இந்தத் திட்டம் துவங்கப்பட்டபோது, தமிழ் நாடு, மேற்கு வங்கம் ஆகிய மாநிலங்கள் மட்டும் இதனை ஏற்கவில்லை. இந்தப் பள்ளிக்கூடங்களில் பொதுவாக மும்மொழிக் கொள்கை பின்பற்றப் படுகிறது. தவிர, 8 ஆம் வகுப்புக்கு மேல் ஆங்கிலம் அல்லது இந்தி மொழியில்தான் பாடங்கள் கற்பிக்கப்படும். இந்த நிலையில் சில ஆண்டுகளுக்கு முன்பாக மேற்கு வங்கம் இந்த பள்ளிக்கூடங்களை நடத்துவதற்கு அனுமதி அளித்தது. ஆனால், தமிழகத்தில் தற்போதுவரை இதற்கான அனுமதி வழங்கப்படவில்லை.

இந்நிலையில், ‘குமரி மகா சபா’ என்ற அமைப்பு சென்னை உயர் நீதிமன்றத்தின் மதுரைக் கிளையில் வழக்கு ஒன்றைத் தொடர்ந்தது. இந்தியாவின் பிற மாநிலங்களைப் போல, தமிழ்நாட்டிலும் நவோதயா பள்ளிக்கூடங்களைத் திறக்க அனுமதிக்க வேண்டும் என அந்த மனுவில் கோரப்பட்டிருந்தது. மதுரை உயர்நீதிமன்றக் கிளையில் தொடர்ந்து விசாரிக்கப் பட்டு வந்த இந்த வழக்கில் செப்டம்பர் 12 ஆம் தேதி தீர்ப்பளித்த மதுரை உயர்நீதிமன்றக் கிளையின் நீதிபதிகள், நவோதயா பள்ளிக்கூடங்களைத் தொடங்குவதற்கு உள்கட்டமைப்பு வசதிகளை அளிப்பது குறித்து 8 வாரங்களில் முடிவெடுக்க வேண்டுமென உத்தரவிட்டனர்.

மத்தியில் பாஜக ஆட்சி அமைந்த பிறகு, தமிழ்நாட்டு பாஜகவினர் பல முறை, தமிழ்நாட்டில் நவோதயா பள்ளிகள் தொடங்க அனுமதிக்க வேண்டும் என்கிற கருத்தை வெளிப்படுத்தி வந்தனர். அவர்களின் அந்த செயல்திட்டத்தின் ஒரு பகுதியாகதான், இப்போது சென்னை உயர்நீதிமன்றத்தில் ஒரு இந்துத்துவ அமைப்பின் பெயரில் வழக்கு தொடர்ந்து இந்தத் தீர்ப்பினை பெற்றிருக்கின்றனர்.

1986 ஆம் ஆண்டில் இந்தத் திட்டம் அறிவிக்கப்பட்டது முதலே தமிழ்நாட்டில் அதற்குப் பெரும் எதிர்ப்பு வெடித்துக் கிளம்பியது. திராவிடர்

கழகம் இந்த திட்டத்தை எதிர்த்தது. மிகப்பெரிய அளவில், திருச்சியில் ஒரு மாநாட்டை (10.6.1986) நடத்தியது. கல்வி நெறிக்காவலர் என்று போற்றப்படுகிற நெ.து.சுந்தரவடிவேல் அம்மாநாட்டுக்குத் தலைமை வகித்தார். நெ.து.சு அந்த மாநாட்டில் பேசிய உரையினை ஒரு சிறு நூலாகவும் திராவிடர் கழகம் வெளியிட்டது. இப்போது மீண்டும் அந்த முக்கியமான சிறுநூலை மறுபதிப்பு செய்து வெளியிட்டிருக்கிறது திராவிடர் கழகம்.

### நவோதயா பள்ளிகளை தமிழகம் ஏற்க மறுப்பதற்கான காரணங்கள் என்னென்ன ?

தமிழகத்தின் தனிச்சிறப்பான இருமொழிக் கொள்கை என்பது, தாய் மொழி தமிழ், தொடர்பு மொழி ஆங்கிலம் ஆகிய இரு மொழிகள் மட்டுமே பள்ளிகளில் கற்பிக்கப்படும் என்பதாகும். இன்று வரையில் இந்த சட்டம் தொடர்கிறது. மாநிலங்களின் அதிகாரப் பட்டியலில் இருந்த கல்வி பொதுப் பட்டியலுக்குப் போனதும் தமிழே இல்லாமல் இந்தி, ஆங்கிலம் மட்டுமே கற்பிக்கப்படுகிற பள்ளிகளும் தமிழகத்தில் நுழைந்தன. மாநில அங்கீகாரம் அளிக்கும் பள்ளிகளில் மட்டும் இந்தி தடுக்கப்பட்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாகத்தான் நவோதயா பள்ளிகள் தமிழகத்துக்குள் நுழையக்கூடாது என்ற ஒரு முடிவும் எடுக்கப்பட்டது. நவோதயா பள்ளி என்பது முழுக்க முழுக்க மத்திய அரசுப் பள்ளி அல்ல. மாநில அரசின் பங்களிப்புடன் செயல்படுகிற பள்ளியாகும்.

தமிழ்நாட்டில் நவோதயா பள்ளிக்கூடங்களைத் திறக்க அனுமதிக்கப்போவதில்லையென கடந்த தி.மு.க. ஆட்சிக்காலத்தில் அமைச்சரவைத் தீர்மானமே நிறைவேற்றப்பட்டது. அந்தக் காலகட்டத்தில் பள்ளிக் கல்வித் துறை அமைச்சராக இருந்த தங்கம் தென்னரசு விடம் இந்த விவகாரம் குறித்துக் கேட்டபோது, “அங்கு இந்தி வழியில் பாடங்கள் நடத்தப்படும் என்பது மட்டும் பிரச்சனையில்லை. இதற்கான கட்டமைப்பை மாநில அரசு உருவாக்கித்தர வேண்டியிருக்கிறது. இந்தப் பள்ளிக் கூடத்திற்காக ஒவ்வொரு மாவட்டத்திலும் 30 ஏக்கர் நிலத்தை அரசு தர வேண்டியிருக்கிறது. நம்முடைய அரசுப் பள்ளிக் கூடங்களே அவ்வளவு பெரிய நிலத்தில் இல்லாத போது நாம் எதற்கு அவர்கள் வழியில் பாடம் நடத்துவதற்கு நிலம் தர வேண்டும்?" என்று கேள்வியெழுப்பினார்.

14 வயதுக்குட்பட்ட அனைவருக்கும் கல்வி என்று இந்திய அரசமைப்புச் சட்டம் 45 ஆம் பிரிவு உத்தரவாதம் அளிக்கிறது. எத்தனையோ பத்தாண்டு கள் பறந்தும் அந்நிலை எட்டப்படவில்லை. இந்த சூழ்நிலையில் அரண்மனைக் கல்வித் திட்டம் என்பது ஓர் உயர்ஜாதி மேல்தட்டு மனப்பான்மையே!

கேந்திரிய வித்யாலயாவில் படிக்கும் ஒவ்வொரு மாணவனுக்கும் ஆண்டு ஒன்றுக்குச் செலவழிக்கப் படும் தொகை 27,150 ரூபாய். நவோதயா பள்ளியில் படிக்கும் ஒவ்வொரு மாணவனுக்கும் மத்திய அரசு செலவு செய்யும் தொகையோ ரூ.85,000. அரசு பள்ளியில் படிக்கும் மாணவனுக்கு ஒன்றுமுதல் 8 ஆம் வகுப்புவரை ரூ.3,000; 9 முதல் 12 ஆம் வகுப்புவரை அரசு செலவழிக்கும் தொகை ரூ.4,000. தமிழக அரசு அனைத்து தரப்பினருக்கும் சமமான கல்வியினை வழங்கவேண்டும் என்ற கொள்கை முடிவுடன் தொடந்து செயல்பட்டுக்கொண்டிருக்கும்போது, நவோதயா பள்ளிகள் என்கிற பெயரில் பெரிய ஏற்றத்தாழ்வுகளை கல்வியில் புகுத்துவது சரியாகுமா?

நவோதயா பள்ளிகளை நாம் எதிர்ப்பதற்கு இன்னொரு, மிக முக்கியமான காரணம், பள்ளியின் மாணவர் சேர்க்கை முறையாகும். 6ஆம் வகுப்பில் மாணவர்களை சேர்ப்பதற்கு, சி.பி.எஸ்.ஈ. நிறுவனம் நுழைவுத் தேர்வினை நடத்தி, அதில் தேர்ச்சி பெறு கிறவர்களைதான் பள்ளியில் சேர்க்கப்படுவார்கள். என்னதான், கிராமப்புற ஏழை மாணவர்களுக்காகவே இந்த பள்ளிகள் ஏற்படுத்தப்படுகின்றன என்று சொல்லப்பட்டாலும், 6ஆம் வகுப்பில் சேருவதற்கே நுழைவுத்தேர்வு என்பது மாணவர்கள் வடிகட்டி தரம் பிரிக்கும் வேலையல்லாமல் வேறு என்ன?

விண்ணப்பிக்கின்றவர்களில், 5 சதவீத மாணவர் கள்கூட இந்த பள்ளியில் சேர்த்துக்கொள்ளப் படுவதில்லை என்பதுதான் மற்ற மாநிலங்களில் நாம் பார்க்கும் எதார்த்தமாக இருக்கிறது. ஒரு வகுப்பில் 80 மாணவர்கள் வீதம், 6 முதல் 12 வகுப்பு வரை மொத்தம் 560 மாணவர்கள் மட்டுமே ஒரு மாவட்டத்திற்கு படிப்பதற்காக உருவாக்கப்படுபவைதான் இந்த பள்ளிகள்.

தமிழ்நாட்டில் காமராசர் ஆட்சிக் காலத்தில் கல்வி நீரோடையை நாடெங்கும் பாயவிட்டு, தி.மு.க. ஆட்சியில், சென்னைப் பல்கலைக்கழகத் துணை வேந்தராக இரண்டு முறை இருந்த, (ஏற்கெனவே மத்திய அரசின் கல்வி ஆலோசகராகவும் இருந்த) கல்வி நெறிக்காவலர் என்றழைக்கப்பட்ட திரு. நெ.து.சுந்தர வடிவேலு அவர்கள் நவோதயா பள்ளிகள் குறித்து திராவிடர் கழக மாநாட்டில் பேசிய உரையின் ஒரு சிறு பகுதி இது:

“கட்டடம் இல்லாத பள்ளிகளுக்கு கட்டடங்கள் ஏற்பாடு செய்வதும், ஆசிரியர் போதாத பள்ளிகளுக்குப் போதிய ஆசிரியர்களைச் சேர்த்தும், ஆசிரியருக்கு 70- 80 பிள்ளைகள் ஏற்பு விழுக்காட்டை 30 - 40 என்று குறைத்தும், பிற பொருள் வசதிகளைச் செய்தும் முன்னுரிமை தர வேண்டும். குடிசை வாழ்வோர்களிடம் போய், ‘உங்களுக்கு எடுத்துக் காட்டாக உங்கள் பகுதியில் அரண்மனை கட்டு கிறோம். பெரிய மனிதர்களைக் குடியேற்றுகிறோம். அதற்கு ஒப்புதல் தாருங்கள் என்ற கேட்பது போல் இத்திட்டம் இருக்கிறது. மாடல் பள்ளிகள் (நவோதயா) அமைந்தால் யார் யார் பயன் பெறுவர்? மேட்டுக் குடியினர் நன்மை பெறுவார்கள்? உயர் ஜாதியினர் எனக் கருதப்படுவோர் செல்வந்தர், பெரிய அதிகாரிகள், அரசியல் செல்வாக்கு உடையவர்கள் ஆகியோரின் பிள்ளைகள்தான் பயன்பெறுவார்கள்”

டாக்டர் கோல்டி எம். ஜார்ஜ்
தமிழில்:-யாழ்மொழி



# துர்கா பூஜையை எதிர்த்து பழங்குடி மக்கள் வழக்கு!

துர்கா பூஜையும், தசராவும் இந்தியாவின் பார்ப்பனிய இந்துக்களுக்கு வேண்டுமானால் கொண்டாட்டத்திற்குரிய ஒரு நாளாக இருக்கலாம். ஆனால் பழங்குடி மக்களுக்கு அல்ல! ஏனெனில் அது அவர்களின் முன்னோர்கள் - கடவுள் கொல்லப் பட்ட நாளாகும். அக்கொலையே கொண்டாடப் படுகிறது. ஆனால் இனி மேலும் அது நடைபெறாது. மஹிசாசுரவதம் கொண்டாடுபவர்களின் முகத்தில் அறைந்தாற் போல் அவர்கள் மீது ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்திய வரலாற்றில் முதல் முறையாக, கலாச்சாரரீதியாக பழங்குடி மக்கள் 'மஹிசாசுரவதம்' கொண்டாடுவதை எதிர்த்து வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

கேன்கர் (Kanker) மாவட்டத்தில் உள்ள பகன்ஜோரில் (Pakhanjore), துர்கா பூஜை கொண்டாடுவது தங்கள் முன்னோரான மஹிசாசுரனை அவமதிக்கும் என்பதால், அதனை அனுமதிக்கக் கூடாதென்று பழங்குடிகள் அதிகாரிகளை எச்சரித்தனர். ஆனால் அந்த எச்சரிக்கை பலனளிக் காத நிலையில், 'பழங்குடிகள் - மண்ணின் மைந்தர் கள்' அமைப்பின் உறுப்பினர்கள் மஹிசாசுரன் மீதான அவமதிப்புக்கு எதிராக எஃப்.ஐ.ஆர் ஒன்றைப் பதிவு செய்துள்ளனர்.

கேன்கர் மாவட்ட எஸ்.சி - எஸ்.டி குழுவின் துணைத்தலைவர் லோகேஷ் சோரி தான் இந்த வழக்கைப் பதிவு செய்துள்ளார். அவர் 153 (A), 295 (A) மற்றும் 298 ஆகிய பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளார். பகன்ஜோரில் துர்கா பூஜை கொண்டாட்டக் குழு உறுப்பினர்கள் மீது எஃப்.ஐ.ஆர். பதிவானதை மாவட்ட ஆட்சியர் எம்.எல்.கோட்வானி உறுதி செய்துள்ளார். குற்றம் சாட்டப் பட்டவர்கள் தற்போது தப்பிச் சென்று விட்டனர் என்றும், அவர்களது மொபைல் எண்களை வைத்து அவர்களைத் தேடி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

கடந்த ஒரு வருடமாக பழங்குடி மக்கள் ஒன்றாகக் கூடி, உண்மையான வரலாறைப் பற்றித் தாங்கள் கற்றதையும், புரிந்துக்கொண்டதையும் பரிமாறிக் கொண்டனர். அதனையொட்டி, இந்த ஆண்டு அவர்கள் உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும் என முடிவு செய்தனர். முதல் செய்தி ராய்கார் பகுதியிலிருந்து வந்தது. அது, 10 பஞ்சாயத்துகளில் துர்கா பூஜை கொண்டாடக் கூடாதென்றும், இராவணனின் உருவ பொம்மையை எரிக்கக் கூடாதென்றும் பழங்குடிச் சமூகத்தினரால் நிறைவேற்றப்பட்ட தீர்மானமாகும்.

இந்த 10 பஞ்சாயத்துகளின் தலைவர்களும் ராய்காரில் உள்ள காவல் நிலையத்திற்கு ஒன்றாகச் சென்று மனு கொடுத்தனர். ராஜநாந்த்கான் மாவட்டத்திலுள்ள மொஹ்லா மன்பூர்-இல், 'சர்வ ஆதிவாசி முல்னிவாசி சமாஜ்' சார்பாக சத்தீஸ்கர் ஆளுநருக்கு மனு கொடுக்கப்பட்டது. டவுண்டி-லோகாரா பகுதியின் முன்னாள் எம்.எல்.ஏ. ஜனக் லால் தாக்கூர் உட்பட 20 பேர் கையொப்பமிப்பட்ட அந்த மனுவில் உள்ளவை:-

“பழங்குடி - மண்ணின் மைந்தர்களாகிய நாங்கள், இந்து மதத்தின் பழக்கவழக்கங்களையும் சடங்கு களையும் பின்பற்றுவதில்லை. எங்களுக்கென்று ஓர் பண்பாடும், கலாச்சாரமும் உள்ளது. அதன் படி, இராவணனும், மஹிசாசுரனும் எங்கள் மூதாதையர்கள். எனவே, நாங்கள் அவர்களை வணங்குகிறோம். இருப்பினும், இந்து மத வேதங்களில் அவர்களை இராட்சதர்களாக (அரக்கர்களாக) விவரித்து, காலங்காலமாக அவமதித்து வருகின்றனர். ஆகையால், ஆதிவாசி மூல்னிவாசிகளின் உணர்வுகளைக் கருத்தில் கொண்டு, இராவணனின் உருவ பொம்மையை எரிப்பதையும், மஹிசாசுரனை அவமதிப்பதையும் பட்டியலிடப்பட்ட பகுதிகளில் (Scheduled areas), உடனடியாகத் தடை செய்யும் படி நாங்கள் கேட்டுக் கொள்கிறோம். இந்திய அரசியலமைப்புச் சட்டத்திலுள்ள எமது உரிமைகளை உறுதிப்படுத்துவதற்கு இது அவசியமானதாகும்.” என்று குறிப்பிட்டிருந்தனர்.

சுக்மா மாவட்டத்தில், அனைத்து கிராமங் களின் தலைவர்கள் சார்பாக ஒன்றியத் தலைவர் மஞ்சுகாவாசி ஒரு மனு அளித்துள்ளார். தங்க ளுக்குள் விரிவான விவாதத்திற்குப் பிறகு தான் அம் மனுவை அளித்துள்ளனர். அம்மனுவில்,

“நாங்கள் இந்தியாவின் பழங்குடி மக்கள். மண்ணின் மைந்தர்கள். எங்கள் நம்பிக்கையானது, இயற்கை வழி பாடு மற்றும் மூதாதையர் வழிபாட்டை அடிப்படை யாகக் கொண்டது. நாங்கள் இந்தப் பாரம்பரியத்தைத் தொடர்ந்து பின்பற்றுகிறோம். இந்தியா ஒரு மதச்சார் பற்ற தேசமாக இருப்பதால், அனைத்து சமய, கலாச்சாரம் மற்றும் பாரம்பரியங்களைச் சேர்ந்த மக்கள் இங்கே வாழ்கின்றனர். ஆனால் பழங்குடிகள் இந்துக்கள் அல்ல. இது நாட்டின் உச்ச நீதிமன்றத்தால் உறுதி செய்யப்பட்டுள்ளது. பழங்குடி மக்கள் இந்துக்கள் அல்ல என்பதால், அச்சமூகத்தின் முன்னோர்களான இராவணன், கும்பகர்ணன் மற்றும் மஹிசாசுரனை எரிப்பதென்பது அவர்களை அவமதிக் கும் செயலாகும். ஒரு சமூகத்தின் மதம் மற்றும் நம்பிக்கைகளை அவமதிக்கும் செயல்கள் இந்திய அரசியலமைப்புச் சட்டதில் தடை செய்யப்பட்டுள்ளது. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில், பத்தாம் பாகத்தின் கீழ் உள்ள பிரிவு 244-இன் படி, ஐந்தாவது அட்டவணையில் பழங்குடிகளுக்குச் சிறப்பு உரிமைகள் வழங்கப்பட்டுள்ளன. மற்றவர்கள் இராட்சதர்கள் (அரக்கன்) எனக் குறிப்பிடும் இராவணன், கும்பகர்ணன் மற்றும் மஹிசாசுரன் ஆகியோரைத்தான் பட்டியலிடப்பட்ட பகுதிகளில் வாழும் மக்கள் வழிபடுகின்றனர். இந்துக்கள் எங்கள் மூதாதையர்களை எரித்துக் கொல்வதென்பது எங்கள் சமுதாயத்தின் கலாச்சாரத்தைக் காயப்படுத்தும் செயல் மட்டுமல்ல. அது தேசத்துரோக செயல் ஆகும். ஐந்தாவது அட்டவணையின் படி, SC / ST சட்டம் மற்றும் பிரிவு 124 ஏ ஆகியவற்றின் கீழ் இச்செயலை எதிர்த்து நடவடிக்கை எடுக்கலாம். அத்தகைய குற்றத்தை ஆதரிக்கும் அதிகாரிகளைப் பணி நீக்கம் செய்யவும் விதிகள் உள்ளன. ஆகையால் பழங்குடிகளின் கலாச்சார பூமியில் எங்கள் மூதாதையர் களை எரிக்க அனுமதியளிக்க வேண்டாம் என்று உங்களிடம் கேட்டுக் கொள்கிறோம்.” என்று குறிப்பிட்டிருந்தனர்.

பழங்குடி மக்கள் தங்கள் கடவுளை வெளிப் படையாக வணங்க முடியாத நிலையில், ஒரு பெரிய வெற்றி இது. ஜாஞ்கிர்-சம்பாவில் உள்ள ரோக்டா கிராமத்தில் பழங்குடிகள் மற்றும் தாழ்த்தப்பட்ட மக்கள் வழிபடுவதற்கு மஹிசாசுர சன்னதி உள்ளது. பல்வேறு தருணங்களில் பயத்தினால் பழங்குடி மக்கள், தங்கள் எண்ணங்களை வெளிப் படுத்து வதில்லை. அசுரப் பாரம்பரியம் மற்றும் கலாச் சாரத்தைப் பின்பற்றுபவர்கள் என்று ஆதிக்க ஜாதி யினரால் உடனடியாக அடையாளம் காணப் படுவதால், தங்கள் சமூகத்தினர் மீது ஏற்படும் விளைவுகளை எண்ணி அஞ்சுவர். அரசு நிறுவனங் கள் அவர்களை அரக்கர்களாகக் (குற்றவாளிகள்) கருதித் தாழ்வாக எண்ணிப் புறந்தள்ளி விடும் என்ற அச்சத்தால் தங்கள் வரலாறு மற்றும் கலாச்சாரம் பற்றி வெளிப்படுத்தாமல் இருந்தனர்.

### அசுரர்கள் யார்?

ஆனந்த் நீலகண்டன் என்பவர் ‘அசுரா(Asura)’ என்ற புத்தகத்தைத் துணிச்சலாக எழுதினார். அதில், அசுரர்களின் கண்ணோட்டத்தில், குறிப்பாக ராவணன் மற்றும் பத்ராவின் கண்ணோட்டத்தில், ஓர் வேறுபட்ட உலகில் வாசகர்களைப் பயணிக்கச் செய்திருப்பார். அதன் மூலம், இராமாயணத்தை வாசிக்கும் முறையைத் தலைகீழாக மாற்றி யமைத்தார். இரண்டு வருடங்களுக்கு முன், “இராவணாயணா (Ravanayana)” என்ற ஆவணப் படத்தைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன். அப் படத்தில், இலங்கை அரசர் இராவணனின் கண்ணோட்டத்திலிருந்து இராமாயணத்தின் கதையை இயக்குனர் சொல்லியிருப்பார். இந்தியா எந்த விதமான அறிவியல் அடிப்படையும் இல்லாத புராணங்களின் பூமியாகும். மஹிசாசுர வதம் மற்றும் இராவணவதம் போன்ற பண்டிகைகள் இந்துப் புராணங்களின் ஒரு பகுதியாகும். அவற்றை எந்த அறிவியல் ஆதாரங்களுமின்றி இந்திய மக்கள் குருட்டுத்தனமாகக் கொண்டாடுகின்றனர்.

‘எருமை அரக்கன்’ என்றழைக்கப்படும் மஹிசாசுரன் கொலையை நினைவூட்டும் வகையில், ஒவ்வொரு ஆண்டும் இந்தியா முழுவதும் துர்கா பூஜை மிக ஆடம்பரமாகக் கொண்டாடப்படுகிறது. ‘பத்துத் தலை அரக்கன்’ என்றழைக்கப்படும் இராவணன், மஹிசாசுரவதத்தின் மூன்றாவது நாளில் கொல்லப்பட்டார். இராவணனை வீழ்த்தி, இராமன் வெற்றி பெற்றதைப் போற்றும் வகையில் தான் தசரா பண்டிகை கொண்டாடப்படுகிறது.

புராணக்கதைகள் எதுவாக இருந்த போதிலும், அனைத்திற்கும் ஒரு எதிர் கதை உண்டு. இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலுள்ள பல சமூகத்தினர், குறிப்பாக பழங்குடி மக்கள், தாழ்த்தப்பட்ட மற்றும் சில பிற்படுத்தப்பட்ட சமூகத்தினர் மஹிசாசுரன் மற்றும் இராவணனை அவர்களின் மூதாதையர் களாகவும் கடவுளாகவும் கருதுகின்றனர். இந்தியாவின் பல பகுதிகளில் , அவர்களைப் பற்றிப் பல நாட்டுப்புறக் கதைகள், இசை, பாடல்கள், ஓவியங்கள், நாடகங்கள் போன்றவை பிரபலமாக உள்ளன.

ஒரு மானுடவியலாளராக, ஏறத்தாழ 20 ஆண்டுகளாக, பல பழங்குடியினரின் கலாச்சாரம் பற்றிப் படித்து வருகிறேன். பொதுவாக இக்கதைகள் அனைத்துமே, நன்மைக்கும் தீமைக்கும் இடையிலான போட்டியாகவே இருக்கும். அதன் அடிப்படையில் இரண்டு முக்கிய கேள்விகள் உள்ளன. முதலாவது, எது நன்மை? எது தீமை? என்பதைத் தீர்மானிக்கின்றவன் யார்? இரண்டாவது, ஏன் ஆரியர்கள் அனைவருக்கும் திராவிட இனத் தலைவர்களும், மக்களும் தீமையின் முக்கிய மையங்களாக இருந்துள்ளனர்? பல ஆதிவாசி மற்றும் திராவிட சமூகங்கள் "நன்மை-தீமை" பற்றிய இக்கருத்தியலை நிராகரித்துத் தங்களுக்கான கதைகளைக் கொண்டுள்ளனர்.

ஒரு சமூக விஞ்ஞானி என்ற முறையில், அந்த இனக்குழுக்களின் வாழ்க்கை முறை மற்றும் நம்பிக்கைகளின் முக்கியத்துவம் பற்றியும், அதன் பல்வேறு நுணுக்கங்களைப் பற்றியும் எனக்குத் தெரியும். அவை இந்திய சமுதாயத்தில் பரவி / ஊடுருவியுள்ள முக்கியமான நம்பிக்கைகள் மற்றும் சிந்தனைகளுக்கு எதிரானது. இந்துமதப் புராணக் கதைகளில், மஹிசாசுரன் மற்றும் இராவணன் அரக்கர்களாகச் சித்தரிக்கப்படுகின்றனர்.

அதே சமயம் அவர்கள் பழங்கால பழங்குடிக் கதைகளில், பாதுகாவலர்களாகவும் போராளிகளாகவும் சித்தரிக்கப்படுகின்றனர். பழங்குடிகளின் கதைகளை ஏற்க வேண்டும் என்று கட்டாயமில்லை. எனினும், அவற்றைக் கண்டிக்கவோ, நிராகரிக்கவோ யாருக்கும் உரிமையில்லை. பல சமூகங்கள் மஹிசாசுரன் மற்றும் இராவணனை வணங்குகின்றன. இந்தியாவிலும், உலகின் பல பகுதிகளிலும் இந்த தெய்வங்களுக்கென நூற்றுக்கணக்கான கோயில்கள் உள்ளன. இப்படியிருக்கும் போது, சிலர் நாட்டிற்கே பொது மதம் மற்றும் நம்பிக்கைகளைப் பரப்ப முயல்வது வேடிக்கையாக உள்ளது. இந்த சூழ்நிலையில் இந்த விவாதம் இன்னும் முக்கியமானது.

**சத்தீஸ்கரில் எதிர்கலாச்சார அமைப்புகளுக்கான தளம்:**

சத்தீஸ்கர் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலுள்ள பழங்குடி மக்கள், இராவணன் உருவ பொம்மையை எரிப்பது தங்கள் மத உணர்வுகளைக் காயப்படுத்துமென்பதால் அதனை அனுமதிக்கக் கூடாது என்று அரசை எச்சரித்தனர். சத்தீஸ்கரில் முதல் முறையாக பழங்குடிகள் அரசுக்கெதிராக இப்படியொரு தைரியமான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

இது 2014-லிலேயே தொடங்கிவிட்டது. 2014 அக்டோபரில் சத்தீஸ்கர் மாநிலத்தின் ராஜ்நந்த்கான் மாவட்டத்தின் மன்பூரில், விவேக் குமார் என்னும் சமூக ஆர்வலர், வாட்ஸ்அப் குழுவில் மஹிசாசுர வதத்திற்கு எதிராக ஒரு கருத்தைப் பதிவு செய்தார். இது ஃபார்வர்டு பிரஸ் அலுவலகம் மூடப்பட்டு ரெய்டு செய்யப்பட்ட போது நடந்தது. பா.ஜ.க. பதவியேற்றதால், ஆதிக்க ஜாதியினரின் வலிமையைப் பயன்படுத்தி வலதுசாரி சங்பரிவார், அவருக்கு எதிராக எஃப்.ஐ.ஆர். பதிவு செய்தது. இந்து உணர்வுகளை அவமதித்ததற்காகவும், சவர்ணாஸ்களுக்கும் கீழ் ஜாதிகளுக்கும் இடையே பிளவை உருவாக்குவதாகவும் கூறி குற்றம் சாட்டப்பட்டார். அவர் கைது செய்யப்படவில்லை. அதனால், இந்து அமைப்புகள் பல பேரணிகளையும், வேலை நிறுத்த போராட்டங்களையும் நடத்தினர். பல ஆதிவாசிகள், தலித் மற்றும் பிற்படுத்தப் பட்டோரின் வீடுகள் சூறையாடப்பட்டன. இறுதியாக அவர் கைது செய்யப்பட்டு பல மாதங்கள் சிறையில் அடைக்கப்பட்டார். அதே சமயம், ஆயிரக்கணக்கான ஆதிவாசிகள், தலித்துகள் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் அவருக்கு ஆதரவாகக் குரல் கொடுத்தனர்.

2016 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம், முங்கலியில், துர்கா தெய்வத்தை ஃபேஸ்புக் பதிவின் மூலம் அவமதித்தாகக் கூறி, விஜய் கந்தேகார் கைது செய்யப்பட்டார். உண்மையில் அவர் வாட்ஸ்அப், ஃபேஸ்புக் மற்றும் பிற சமூக ஊடகங்களில் பரவிய ஒரு பதிவை காப்பி, பேஸ்ட் மட்டுமே செய்திருந்தார். இச்சம்பவம் முங்கலியில் ஜாதிக் கலவரத்தை உருவாக்கியது. நான்கு மாதங்கள் சிறையில் இருந்தபின், அவர் சண்டிகர் உயர் நீதிமன்றத்தில் இருந்து நிபந்தனை ஜாமீன் பெற்றார். அவர் முங்கலி மாவட்டத்திற்குள் நுழையத் தடை விதிக்கப்பட்டது. அவர் ஆபத்தான குற்றவியல் நோக்கம் கொண்ட ஒரு நபரென அடையாளப்படுத்தப்பட்டார்.

அதே சமயத்தில், ஆதிவாசி மகாசபையின் தேசியத் தலைவர் மற்றும் சுக்மா பகுதி சி.பி.ஐ தலைவரான மனீஷ் குஞ்சம் அவர்கள், "நான் மஹிசாசுரன் மற்றும் இராவணனின் மகன். அவர்கள் எனது முன்னோர்கள. பழங்குடியினரின் பண்பாட்டின்படி எங்கள் மூதாதையர்கள் தான் எங்களுக்குக் கடவுள். ஒவ்வொரு ஆண்டும் எங்கள் கடவுளைக் கொல்வதை நிறுத்துங்கள்" என்று ஒரு பொது அறிக்கையை வெளியிட்டார். இது ஆதிவாசித் தலைவரிடமிருந்து வந்த ஒரு தைரியமான அறிக்கையாகும். அதனால், ஜக்தல்பூரில் சி.பி.ஐ மாவட்ட அலுவலகத்தில் செய்தியாளர் கூட்டத்தை நடத்திக் கொண்டிருந்த போது அவர் இந்து அமைப்புகளால் அவர் தாக்கப்பட்டார்.

இந்நிகழ்வுகளில் மிகவும் குறிப்பிடத்தக்கது என்னவென்றால், ஆதிவாசிகள் மற்றும் தலித்துகள் மத்தியில் சமுதாயத்தின் கலாச்சாரம், வரலாறு மற்றும் நெறிமுறைகள் பற்றி பல்வேறு விவாதங்களைத் தோற்றுவித்தது. தலித் முக்தி மோர்ச்சாவைச் சேர்ந்த பிந்தம்பார் நிர்ராலா, "இந்து தேவர்கள் அனைவரும் நல்லவர்களும் அல்ல! அசுரர்கள் அனைவரும் கெட்டவர்களும் அல்ல! இராவணன் பல திறமைகள் வாய்க்கப் பெற்ற ஓர் அரசர். திறமையான, நல்ல ஆட்சியாளர்! மக்களிடம் அன்பாக இருந்த மனிதர்! 10 வீரர்களுக்கு இணையான, வலிமை வாய்ந்தவர்! வீணை இசையில் வல்லவர்! இதனால் தான் இலங்கை அவரது

ஆட்சியில் செழிப்பாக இருந்தது. அவரது ஆட்சியில் வறுமையோ பஞ்சமோ இல்லை!" என்று கூறினார்.

பல கிராமங்களில் மக்கள், குறிப்பாக தாழ்த்தப் பட்ட மற்றும் பழங்குடி மக்கள் துர்கா பூஜை மற்றும் தசராவை இனி கொண்டாடப் போவதில்லை என்று தீர்மானித்தார்கள். இதற்கு இணையாக, சமூக அமைப்புகள், "மஹிசாசுரன் யார்? ராவணன் யார்? ஒவ்வொரு வருடமும் ஏன் அவர்கள் கொல்லப் படுகிறார்கள்?" போன்ற கேள்விகளைப் பற்றிய விவாதங்களில் ஈடுபட்டன. குறிப்பாக இளைஞர்கள் இந்த கேள்விகளை மூத்தவர்கள், தலைவர்கள், ஆய்வாளர்கள் மற்றும் பிற நபர்களிடம் எழுப்பத் தொடங்கினர். இந்த இளைஞர்களும், பெண்களும் தங்கள் சொந்த வரலாற்றை பார்ப்பனரல்லாத கண்ணோட்டத்தைக் கொண்டு படிக்கத் தொடங் கினர். அவர்கள் மஹிசாசுரன் மற்றும் இராவணன் யார் என்று ஆராயத் தொடங்கினர்.

அத்தேடலில், அசுரர்கள் தங்களின் மூதாதையர்கள் என்றும், ஆரியப் படையெடுப்பிற்கு எதிராகத் துணிச்சலான போராட்டங்களைக் மேற் கொண்டவர்கள் என்றும் அறிந்துக் கொண்டனர். ஆரியப் படையெடுப்பிற்கு எதிராகப் போராடியவர் கள்தான் உண்மையில் தங்கள் சமுதாயத்தின் சுதந்திரப் போராளிகள்; அவர்கள் வானத்தில் நட்சத்திரமாக மாறிவிட்டனர் என்ற கோட் பாட்டையும் அறிந்தனர். இந்த நம்பிக்கைகளின் படி, அந்த மூதாதையர்கள் தான் அவர்களுக்குக் கடவுள்! அவர்களைத் தான் காலங்காலமாக அரக்கர்கள், பேய்கள் மற்றும் தீய சக்தியென சித்தரிக்கின்றனர். ஆனால், அவர்கள் உண்மையில் ஆரிய மற்றும் மற்ற படையெடுப்புகளை எதிர்த்துப் போராடிய நல்லவர்கள் ஆவர். இந்தியாவின் வடக்கிலிருந்து தெற்கு வரை பல பகுதிகளில் இன்று வரை அவர்கள் வணங்கப்பட்டு வருவதற்கு இதுவே முக்கியக் காரணமாகும்.

தலித் முக்தி மோர்ச்சாவின் தலைவர் டிக்ரி பிரசாத் சௌஹான்,

"இந்துத்துவத்தின் கலாச்சார ஏகாதிபத்தியம் நம் மக்களை குருடாக்கிக் கொண்டிருக்கிறது. எனவே, நமது மூதாதையர்களைக் கொன்ற கொலைகாரர்களை வழிபட்டு வரும் இந்த அடிமைத்தனத்தை நாம் உடைக்க வேண்டும். கொல்லப்பட்ட , ஏகலைவன், மஹிசாசுரண், இராவணன், சம்பூகன், பாலி, ஹோலிகா ஆகிய அனைவரும் நம் கடவுள் / மூதாதையர்கள். எனவே இவற்றை முழுமையாக நிறுத்த வேண்டும். மண்ணின் மைந்தர்களுக்கு அவர்களின் உண்மையான வரலாறு என்ன? என்று உறுதியாகத் தெரிய வேண்டும்", என்று கூறினார்.

ஆதிவாசி அறிஞர் பிரியங்கா சாண்டில்யா,

"பழங்குடிகளாகிய நாங்கள் எவ்வளவு காலம் இந்து மதத்தின் அடிமைகளாகவே இருப்பது? இன்னும் எவ்வளவு காலத்திற்கு எங்கள் அசுர குலப் பழங்குடியினர் நவராத்திரியின் போது துர்காவின் கோபத்தைக் கண்டு அஞ்சி வாழ்வது? நாங்கள் ஆரியப் படையெடுப்பாளர்களின் மதத்தின் வழித்தோன்றல்கள் அல்ல என்பதை உறுதிப்படுத்த வேண்டிய நேரம் இது. நாங்கள் பழங்குடி மக்கள். எங்களுக்கு எந்த இந்துக் கடவுளும் சொந்தமல்ல. மாறாக அரக்கர்களாகச் சித்தரிக்கப்படுபவர்கள் தான் எங்களின் உண்மையான கடவுள். ஏனெனில் அவர்கள் தான் எங்கள் சுதந்திரப் போராளிகள் மற்றும் எம் இனப் பாதுகாவலர்கள்! படையெடுத்து வந்தவர்களைக் கடுமையான அச்சுறுத்தலுக் குள்ளாக்கினர். அதனால் தான், அவர்கள் இராட்சதர்கள் என முத்திரை குத்தப்பட்டனர்", என்று கூறினார்.

**பழங்குடி மக்கள் இந்துக்கள் அல்ல என்பதால், அச்சமூகத்தின் முன்னோர்களான இராவணன், கும்பகர்ணன் மற்றும் மஹிசாசுரனை எரிப்பதென்பது அவர்களை அவமதிக்கும் செயலாகும்.**

**மற்றவர்கள் இராட்சதர்கள் (அரக்கன்) எனக் குறிப்பிடும் இராவணன், கும்பகர்ணன் மற்றும் மஹிசாசுரன் ஆகியோரைத்தான் பட்டியலிடப்பட்ட பகுதிகளில் வாழும் மக்கள் வழிபடுகின்றனர். இந்துக்கள் எங்கள் மூதாதையர்களை எரித்துக் கொல்வதென்பது எங்கள் சமுதாயத்தின் கலாச்சாரத்தைக் காயப்படுத்தும் செயல் மட்டுமல்ல. அது தேசத்துரோக செயல் ஆகும்.**

கடந்த சில ஆண்டுகளாக, பல்கலைக்கழக அளவில் பல மாணவர்களும், இளைஞர்களும்

துர்கா பூஜை நாளை 'மஹிசாசுரர் வீரவணக்க தினமாக' அனுசரித்து வருகின்றனர். இதைத் தொடர்ந்து, இந்திய பாராளுமன்றம் உட்பட நாடெங்கிலும் கொலைகள் போற்றப்படுவதையும், சில சமுகக் குழுக்கள் இழிவுபடுத்தப்படுவதையும் மய்யமாகக் கொண்டு பல விவாதங்கள் நடைபெற்றன. இருப்பினும் கிராம அளவில் உருவாகியுள்ள இந்த எதிர்/ மாற்று கலாச்சார இயக்கமானது புதிய முன்னேற்றமாகும். சத்தீஸ்கரில் உருவகியுள்ள இந்த முயற்சியானது நம் இனக் கலாச்சாரத்தைப் புதுப்பிக்கும். பார்ப்பனியப் பிடியிலிருந்து நம் கடவுள்களைக் காப்பாற்றும்.

**மஹிசாசுரனின் இறப்பு பற்றிய கதைகள்:**

14 ஆம் நூற்றாண்டில், தினஜ்பூர் இராஜ்பாரி என்ற இடத்தில் (தற்பொது அது பங்களாதேஷ்) துர்கா பூஜை முதன்முதலில் கொண்டாடப்பட்டது. பின், அது ஒரு 'நில உரிமையாளரின் பண்டிகை' என்ற நிலையிலிருந்து சமூகப் பண்டிகையாக மாற்றப்பட்டுள்ளது. அனைவருக்குமான பண்டிகையாக மாற்றப்பட்ட போதும் உயர் ஜாதி பார்ப்பனர்களும், கயஸ்தர்களும் ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர். தலித்துகள் மற்றும் பிற ஜாதி மக்களைப் பெரும்பாலும் அவ்விழாக்களில் அனுமதிப்பதில்லை.

அக்டோபர் 2, 2014 அன்று வெளியிடப்பட்ட இந்துஸ்தான் டைம்ஸ் ராஞ்சி பதிப்பின் அறிக்கை ஒன்றை மேற்கோள் காட்டி மாலதி அசூர் அவர்கள், "தேவர்கள் அதிகாரத்தின் மேல் தீவிர விருப்பம் உள்ளவர்கள். யாரேனும் அவர்களை எதிர்த்துச் சவால் விட்டால், அவர்களைப் பேய்கள் / அரக்கர்கள் என முத்திரை குத்தினர். எங்கள் மூதாதையர்கள் எப்போதும் அவர்களுக்கு சவாலாக இருந்துள்ளனர். அதனால் தான், அவர்களும் பேய்கள் / அரக்கர்கள் என முத்திரை குத்தப்பட்டார்கள். தேவர்கள் அசுரர்களைப் படுகொலை செய்தது பழங்கால உண்மையாக இருக்கலாம். நம் உண்மையான வரலாற்றை மறக்கச் செய்ய சவணர்களுக்கு இது வசதியாக இருந்திருக்கும். ஜார்கண்டில் உள்ள அசுர் பழங்குடியினர், துர்கா பூஜையன்று பகல் நேரத்தில் தங்கள் வீடுகளைப் பூட்டிக் கொண்டு வெளியே வரமாட்டார்கள். தங்கள் மன்னர் மஹிசாசுரனின் மரணத்திற்காக இரவில் வெளியே வந்து துயரப்படுவார்கள். பகல் நேரத்தில் வெளியே வந்தால், தேவர்கள் அவர்களைக் கொன்று விடுவார்கள் என்று அவர்கள் பயப்படுகிறார்கள் என்று இந்துஸ்தான் டைம்ஸ்-இன் அறிக்கை கூறுகிறது", என்று கூறினார்.

வங்காளத்திலுள்ள அசுரர்களும், ஹரியானாவில் இராவணனை வழிபடுபவர்களும் நவராத்திரியைத் துக்கமாக அனுசரிக்கின்றனர். உலகமே அவர்களுடைய தெய்வத்தின் படுகொலையைக் கொண்டாடும் போது, அவர்களுக்கோ அது துயரக் காலமாகும். வறுமை, மோசமான பயிர்கள், தொற்று நோய்கள் போன்றவற்றிலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ள பந்தேல்கந்திலுள்ள (மத்தியப் பிரதேசம் மற்றும் உத்திரப் பிரதேசம்) தலித்துகள் மஹிசா சுரரை வணங்குகின்றனர். ஹரியானா, தெலுங்கானா, ஜார்கண்ட், வங்காளம், மகாராஷ்டிரா, ஆந்திரப் பிரதேசம், கர்நாடகா மற்றும் தமிழ்நாடு போன்ற பகுதிகளிலும் இதே போன்ற நம்பிக்கைகள் உள்ளன.

ஒரு சுதந்திர தேசத்தின் இரண்டாம் நிலை குடிமக்களாக இதுவரை இருந்த பழங்குடி மக்களின் கண்ணோட்டத்திலிருந்து வரலாற்றை மறுபடியும் வாசிப்பதை நோக்கமாகக் கொண்டவையே இம் முயற்சிகள். இவ்வாறு வரலாற்றைத் தலைகீழ் மாற்றத்தோடு வாசிப்பதென்பது நம் பழங்குடி தத்துவத்தைப் புரிந்துக் கொள்வதற்கு மட்டுமல்லாமல், இதுநாள் வரை இந்தியக் கலாச்சாரம் என்ற பெயரில் பெருமைப்படுத்தப்பட்டிருக்கும் மனிதத் தன்மையற்ற வரலாற்றையும், கலாச்சாரத்தையும் புரிந்துக் கொள்வதற்கும் இன்றியமையாததாக இருக்கும். வரலாறு எப்போதும் வெற்றி பெற்றவர்களின் கண்ணோட்டத்தில் இருந்து தான் விவரிக்கப்படுகிறது. வருந்தத்தக்க வகையில் தோல்வி அடைந்தவர்கள் எப்போதும் வில்லன்களாக முன்வைக்கப்படுகிறார்கள். எனவே தான், உண்மையான வரலாற்றைக் கண்டறிந்து கற்றுக் கொள்வதற்கு அறிஞர்கள், அறிவுஜீவிகள் மற்றும் எழுத்தாளர்கள் முயல்கிறார்கள்.



கவிக்கண்ணன் குருசாமி

# வரலாற்றில் மறைக்கப்பட்ட தலித் அறிவியலாளர்

இவரைப் பற்றி ஒரு சில வரிகளில் சொல்லி விட முடியாது. காரணம் இவரின் புகழ் மிகப் பெரியது. இவருக்கு நம் அரசு செய்த துரோகங்களும் மிகப் பெரியது. இவரைப்பற்றி விளக்குகிறேன். இந்தியர்களின் வளர்ச்சிக்கு உதவிய இந்தியத் திட்டக் குழுவிற்கு வித்திட்டவர். விஞ்ஞானி. இந்தியப் பாராளுமன்றத்திற்குச் சென்ற ஒரு மனிதர். சர். சி.வி. ராமன் அவர்களுடன் நோபல் பரிசுக்குப் பரிந் துரைக்கப்பட்டவர்.


இவரின் பெயர் 7 முறை நோபல் பரிசுக்குப் பரிந்துரைக்கபட்டது. கல்லூரிக் காலத்தில், ஆங்கிலேய கவர்னருக்கு எதிராகப் பேசிய சுதந்திரப் போராட்ட வீரர். இவரின் ஆசிரியர் இந்தியாவின் தலைசிறந்த அறிவியல் பிதாமகனான ஜெகதீஷ் சந்திர போஸ். இவரது நண்பன் ரேடியோவிற்கு முதல் வடிவம் கொடுத்த சத்தியேந்திர நாத் போஸ்.

அதே போன்று ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் அவர்களின் சார்பியல் கேட்பாட்டை இலத்தீன் மொழியில் இருந்து ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். இவரது சாஹா சமன்பாடு குவாண்டம் இயற்பியலில் புகழ் பெற்றது. இப்படிப்பட்ட தலை சிறந்த விஞ்ஞானிக்கு நாம் செய்த துரோகங்கள் என்ன தெரியுமா?

மேக்நாத் சாஹாவின் புகழ் பெற்ற ‘சாஹா சமன்பாடு’ பற்றி எந்தப் பாடப் புத்தகத்திலும் இல்லை.. ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் மதித்த அறிவியல் அறிஞரைப் பற்றி நம்முள் பலருக்குத் தெரியாது என்பது தான் உண்மை. இவர் ஒரு தலித் என்பதால் இவரின் கருத்துகள் பல இடத்தில் மறுக்கப் பட்டுள்ளது. இவர் ஆங்கிலய அரசுக்கு எதிராகப் போராடியதால் இவருக்கு அரசுப் பதவி புறக்கணிக்கப்பட்டது.

மேலும் இவர் ஆங்கிலய அரசுக்கு எதிராகப் போராடியதால் இவருக்கு நோபல் பரிசு புறக்கணிக் கப்பட்டது. இப்படிப்பட்ட உலகப் புகழ் பெற்ற சாஹாவின் பிறந்த தினத்தைக் கொண்டாட ஆட்களே இல்லை என்பது அதனினும் கொடுமை. மிகப்பெரும் துரேகம். நம் அனைவருக்கும் ஒரு கடமை உள்ளது. அது அந்தப் புகழ் பெற்ற அறிவியலாளர் மேக்நாத் சாஹாவின் பெருமைகளை உலகிற்கு எடுத்துச் சொல்ல வேண்டியது ஆகும்.

**இந்திய அறிவியலில் இந்த அக்டோபர் 6 ம் நாளுக்கு ஒரு தனி இடம் உண்டு. காரனம் இந்திய அறிவியலில் முன்னோடியாகக் கருதபட்ட ஒரு மனிதரின் பிறந்த தினம் இன்று. இவர் பெயர் மேக்நாத் சாஹா.**



மேக்நாத் சாஹா



அதி அசுரன்

# புத்த ஒளி விழா: பண்பாட்டு மயக்கம்

பாரம்பரிய மீட்பு, பண்பாட்டு மீட்பு என்ற சொற்களைக் கேட்டாலேயே நமக்கு அச்சம் வந்துவிடுகிறது. அந்த அச்சங்களை உறுதிப்படுத்தும் விதமாகவே அவை தொடர்பான செயல்பாடுகளும் அமைந்து வருகின்றன. இதுவரை பெரும்பாலும் தமிழ்ப்பண்பாட்டு மீட்பு, தமிழ்ப் பாரம்பரிய மீட்பு என்ற சொற்களைத் தான் கேட்டிருப்போம். தற்போது புதிதாக பௌத்தப் பாரம்பரிய மீட்பு, பௌத்தப் பண்பாட்டு மீட்பு என்ற முழக்கங்கள் எழுகின்றன.

நமது காலத்தில், தோழர் அம்பேத்கர் அடையாளங்காட்டிய ‘நவயான புத்தம்’ மட்டுமே பார்ப்பன ஆதிக்கப் பண்பாட்டுக்கு எதிராக எழுந்த பௌத்தப் புரட்சி. அந்த நவயானப் புத்தத்தின் பண்பாடுகளை நாம் வரவேற்கலாம். பொத்தாம் பொதுவாக பௌத்த மதம் - பௌத்தப் பண்பாடு என்பதில் நமக்கு உடன்பாடில்லை.

தோழர் பெரியார், தோழர் அம்பேத்கர் ஆகியோரின் பண்பாட்டுப் பார்வைகளுக்கு எதிராக - தீபாவளி, விஜயதசமி போன்ற இந்துப் பண்டிகைகளை பௌத்த விழாக்களாக முன்னெடுக்கும் போக்கு தமிழ்நாட்டில் தொடங்கியுள்ளது. அதற்கு அவர்கள் கூறும் விளக்கங்கள் என்னவெனில்,

## தீபாவளி – புத்த ஒளிவிழா

“...எள்ளிலிருந்து எண்ணெய் எடுத்து, அதை மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வர புத்த மடப்பள்ளிகள் மேற்கொண்ட முயற்சியே ‘தீபவதி’ திருநாள் ஆகும். தீபம் ஏற்றி, நல்லெண்ணெய் தேய்த்துக் குளித்துக் கொண்டாடும் நாளாக இப்பண்டிகை இருந்ததாக அயோத்திதாசப் பண்டிதரின் நூலில் படிக்க நேர்ந்தது.”

“திராவிட இயக்கமும், கம்யூனிச இயக்கங்களும் செய்யத் தவறிய விசயங்கள் இத்தகைய வாழ்க்கையை கொண்டாடும் பண்டிகைகளுக்கும் மக்களின் உணர்வுகளுக்கும் முக்கியத்துவம் தராதது. கொள்கைகள் கோட்பாடுகளுடன் வாழ்வியலுக்கான கொண்டாட்டத்தை இணைத்திருந்தால் நாம் இன்னும் வலுவாக பெரிய ஜனநாயக சக்தியாக வளர்ந்திருக்க முடியும். விரைப்பாக கருப்பு சட்டையோடோ, நீல சட்டையோடோ சிவப்பு சட்டையோடோ சிரிக்க மறந்த மனநிலை பண்டிகைகள் போன்ற மனித வாழ்க்கையின் கொண்டாட்டங்களை புறம்தள்ளிவிட்டு சமூகநீதியை விரும்பும் மக்களுக்கு இறுகிய சூழலை உருவாக்கினால் அது மனித சமூகத்திற்கானது அல்ல.” என்று கூறுகின்றனர். இவை பற்றி ஒவ்வொன்றாகப் பார்ப்போம்.

## புத்தருக்கும் முன்பே எள் நெய்

இந்தியத் துணைக்கண்டப் பகுதியில் எள் பயிரிடுவது, எள் பயன்பாடு, எள்ளில் இருந்து எண்ணெய் எடுப்பது எல்லாமே கி.மு. 3500 முதல் 3050 ஆம் ஆண்டுகளிலேயே இருந்திருக்கிறது என்று தாவரவியல் ஆய்வாளர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர். Economic Botany என்ற சர்வதேச அளவிலான அறிவியல் ஏட்டில் *April 1986, Volume 40, Issue 2* இதழில் *“Evidence for cultivation of sesame in the ancient world”* என்ற தலைப்பில் *Dorothea Bedigian, Jack R. Harlan* ஆகிய இரண்டு ஆய்வாளர்கள் எழுதியுள்ள விரிவான ஆய்வுக் கட்டுரையில், சிந்துச்சமவெளிக் காலத்திலேயே மொகன் ஜ தாரோ, ஹரப்பா

நாகரிகங்களில் எள், எள் நெய் பயன்பாடு இருந்ததை உறுதி செய்கின்றனர்.

அந்த ஆய்வு மட்டுமல்ல, இலண்டனில் உள்ள *UCL Institute of Archaeology, Centre for Applied Archaeology* இன் *Dorian Q Fuller* என்ற அறிவியலாளரின் ஆய்வுக் கட்டுரைகளும் அவற்றை உறுதி செய்கின்றன. இன்னும் ஏராளமான ஆய்வுகள் அகில உலக அறிவியல் ஏடுகளில் வெளியாகி உள்ளன.

எள், எள் நெய் இவற்றின் பயன்பாடு தொடங்கிய காலம் கி.மு. 3000 ங்களில் என்கின்றன ஆய்வுகள். புத்தரின் வாழ்க்கையானது கி.மு 543 - கி.மு 483 வரை உள்ள காலம். அதாவது, கி.மு. 3000 த்திற்குப் பிறகு ஏறத்தாழ 2400 ஆண்டுகளுக்குப் பிறகு தோன்றியவர் தான் புத்தர். அந்தத் தலைவரின் கொள்கைவழித் தோன்றல்கள் தான் பௌத்தர்கள். அந்த பௌத்தர்கள் தான் எள் நெய்யைக் கண்டுபிடித்தனர் என்று கூறுவது அறிவியல் அடிப்படையில் தவறு. முகநூலில் வந்த புத்தஒளி விழா பற்றிய அறிவிப்பிலேயே, எ.பி.நாகராசன் என்பவர் எள் பயிரிடுவது தொடர்பான ஆய்வுகளை முன்வைத்து மேற்கண்ட தகவலை மறுத்துள்ளார்.

## பௌத்த விழா அல்ல; சமணர்களின் விழா

அடுத்து, தீபாவளி என்பது புத்தர்களின் விழா என்பதும் தவறான தகவல். அறிஞர் மயிலை சீனி.வேங்கடசாமி அவர்கள் எழுதிய, ‘சமணமும் தமிழும்’ நூலில் இருந்து...

> “தீபாவளி சமணரிடமிருந்து இந்துக்கள் பெற்றுக் கொண்ட பண்டிகை... அறிவொளியாகத் திகழ்ந்த மகாவீரரை மக்கள் நினைவு கூர்ந்து வழிபடும் பொருட்டு அவர் இயற்கை எய்திய நாளில் வீடுதோறும் விளக்குகளை ஏற்றி வைத்து விழாக் கொண்டாடும்படி ஏற்பாடு செய்யப்பட்டது...இந்த விழா (தீபம் = விளக்கு, ஆவலி = வரிசை; தீபாவலி) மகாவீரர் விடியற் காலையில் இயற்கை எய்தியபடியால் தீபாவளி என்ற பெயரில் விடியற்காலையில் கொண்டாடப்படுகிறது.
> சமண சமயம் வீழ்ச்சி அடைந்த பிறகு சமணர்கள் பெருவாரியாக இந்து மதத்தில் சேர்ந்தனர். சேர்ந்த பிறகும் அவர்கள் வழக்கமாக இந்தப் பண்டிகையைக் கொண்டாடி வந்தனர். இந்த வழக்கத்தை நீக்க முடியாத ஆரியர்கள் இதைத் தாமும் ஏற்றுக் கொள்ள வேண்டிய தாயிற்று.”

அறிஞர் டாக்டர் மா.இராசமாணிக்கனார் எழுதிய, ‘தமிழர் நாகரிகமும், பண்பாடும்’ நூலில் இருந்து...

> “சமண சமயத்தைச் சேர்ந்த மார்வாரிகள், குஜராத்திகள் முதலியோர் இன்றும் தீபாவளியை மிகச் சிறப்பாகக் கொண்டாடி வருவதற்கு இது ஏற்ற சான்றாகும்.”

ஆக, தீபாவளி என்பது பௌத்தர்களின் விழா அல்ல; சமணர்களின் விழா. இரண்டு மதத்திற்கும் இடையே அவை உருவான காலத்திலேயே பெரும் வேறுபாடுகளும், மோதல்களும் ஏராளமாக நடந்துள்ளன. இரண்டு மதங்களும் ஒன்றல்ல. இப்படி சமணத்தின் விழாவை - இந்து மத விழாவாக மாறிய விழாவை வலிந்து பௌத்தர்களின் விழா என்று கொண்டாட முனைவது எதற்காக எனப் புரியவில்லை.

## மகிசாசுரன் – நரகாசுரன் விழாக்கள்

பௌத்தம் உருவாகிய வட மாநிலங்களிலேயே - அசோகர் ஆண்ட நாடுகளிலேயே விஜய தசமிக்கும், துர்காபூஜைகளுக்கும் மாற்றாக இராவணன் விழா, மகிசாசுரன் விழா என்ற பெயரில் மாற்று விழாக்கள் முன்னெடுக்கப்படுகின்றன. இந்து வேத மதம் நம் மீது திணித்துள்ள அனைத்துப் பண்பாடுகளையும் - பெரும்பான்மை மக்களை இழிவுபடுத்தும் வழி பாட்டு முறைகளையும், விழாக்களையும் எதிர்த்து, மாற்று விழாக்களை முன்வைக்கின்றனர்.

இராவணன், மகிசாசுரன், நரகாசுரன் என்பவர்களும் கற்பனைகள் என்றுதான் நாமும் பார்க்கிறோம். ஆனால், துர்காவுக்கு பூஜை என்றால் அதற்கு எதிராக மகிசாசுரனுக்கு வழிபாடு. நரகாசுரனைக் கொன்றதற்கு பார்ப்பனர்கள் விழா எடுக்கலாம் என்றால், கொல்லப்பட்ட நரகாசுரனுக்கு நாம் விழா எடுக்கலாம். இராவணனைக் கொல்வது பார்ப்பனப் பண்பாடு என்றால், இராமனைக் கொல்வது திராவிடர் பண்பாடு என்பவை போன்ற எதிர்வினைகள் தான் சரியான மாற்று விழாக்களாக இருக்க முடியும்.

அதே சமயம் இராவணன் விழா, மகிசாசுரன் விழா, நரகாசுரன் வீரவணக்க விழா, திராவிடர் விழா என்பவை போன்ற பெயர்களில் அதே தீபாவளி நாளில், நாமும் புத்தாடை உடுத்துவது, விருந்து நடத்துவது போன்ற விழா நடவடிக்கைகளைச் செய்தால் அவையும் சரியான மாற்றுப் பண்பாடாக இருக்கமுடியாது. அது பற்றி விளக்கமாக அறிய, தோழர் பெரியார் அறிமுகப்படுத்திய விழாக்களையும், நடத்திய விழாக்களையும் கவனிக்க வேண்டும்.

## புத்தர் பிறந்தநாள் விழா

புத்தரைப் பின்பற்றுவதாகக் கூறிக்கொள் பவர்கள் விஜயதசமியையும், தீபாவளியையும் மீட்க வேண்டும் என்று இன்று பேசி வருகிறார்கள். தோழர்களே, புத்த மதத்தில் இணையாத தோழர் பெரியார், புத்தர் விழாவை எப்படிக் கொண்டாடுகிறார் என்று பாருங்கள்.

> “புத்த ஜெயந்தி கொண்டாட பொம்மை தயாரித்துக் கொள்ளுங்கள் - சூத்திரர்களே! பஞ்சமர்களே! -
> (தோழர் பெரியார், 09.05.1953, விடுதலை)

என்று புத்தர் விழாவை விநாயக சிலை உடைப்புப் போராட்டமாகக் கொண்டாட அழைப்பு விடுக் கிறார். அதை விளக்கி ஏராளமான பொதுக் கூட்டங்களையும் நடத்துகிறார். அறிவித்தபடி 1953 ஆம் ஆண்டு புத்தர் பிறந்தநாளை விநாயகர் சிலை உடைப்புப் போராட்டமாக எழுச்சியுடன் நடத்தியும் காட்டினார்.

> “மே மாதம் 27 ம் தேதி புத்தர் நாள் என்பதாகக் கொண்டாட வேண்டும் என்றிருந்தோம். அதற்கு ஆக சர்க்கார் விடுமுறையும் விட்டார்கள். ‘புத்தர் நாள்’ தான் இந்த ஆரியக் கடவுள்கள் உடைப்புத் துவக்கத்திற்கு சரியான நாள் என்பதாக நாம் முடிவு செய்து முதலாவதாக எந்தச் சாமியை உடைப்பது என்று யோசித்து, எதற்கும் முதல் சாமியாக இழுத்துப்

போட்டுக் கொள்கிறார்களே, அந்தச் சாமியாகி கணபதி உருவத்தை முதலாவதாக உடைப்பது என்று முடிவு கொண்டு மே மாதம் 27 ம் தேதியன்று உடைத்தோம்.

இந்தக் காரியமும், எப்படி ரயிலில் உள்ள இந்தி எழுத்துக்களை 500 க்கு மேற்பட்ட ஊர்களில் 1000 க் கணக்கிலே, ஒருமித்து அழிக்கப்பட்டதோ அதைப் போலவே, இந்த விநாயகர் உடைப்பு ரயில் இல்லாத ஊர்களிலும் சேர்ந்து உடைக்கப்பட்டது! தமிழ்நாட்டின் எல்லா பாகங்களிலும், மூலைமுடுக்குகளிலும்கூட விநாயகர் உருவங்கள் செய்யப்பட்டு உடைக்கப் பட்டன.

*(05.07.1953 அன்று திருச்சியில் நடந்த ‘திராவிட நாடு பிரிவினை நாள்’ கூட்டத்தில் பெரியார் உரை 11.07.1953 விடுதலை)*

*புத்த மதத்தில் இணையாதவரே, புத்தரின் பிறந்தநாள் விழாவை புரட்சிகரமாகக் கொண்டாடி இருக்கிறார் என்றால், புத்தத்தை ஏற்றவர்கள் அதைவிட ஒரு அடியாவது முன்னோக்கி நகர வேண்டுமே அல்லாமல், இந்துப் பண்டிகைகளுக்கு, புத்தச்சாயம் பூசிக்கொண்டிருப்பது புத்தருக்கே எதிரானது அல்லவா?*

### பெரியார் பார்வையில் விழாக்கள்

*திராவிடர் இயக்கங்கள் விழாக்களுக்கு எதிரானவை. மக்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளாதவை. செய்யத் தவறியவை என்றெல்லாம் கூறப்படும் கருத்துக்களைப் பற்றிப் பார்ப்போம். திராவிடர் இயக்கங்களின் தலைவர் தோழர் பெரியார் விழாக்களைப் பற்றிக் கூறுவதைப் படியுங்கள்.*

“மக்களுக்கு, விழா முக்கியமான தேவையாகும். விழாவை முன்னிட்டு மக்களுக்கு மகிழ்ச்சி, ஓய்வு, மக்களுடன் அளவளாவுதல், கவலையற்ற கொண் டாட்டம் கொள்ளுதல், அன்பு, ஆசைப் பரிமாற்றம், சுயேச்சையான களியாட்டம் முதலியவைகளை அனுபவிக்க முடிகின்றது. இவைகளை ஏற்படுத்து வதால்தான் இவற்றை விழா என்று கூறுகிறோம்.”

*- பெரியார் - விடுதலை - 30.01.1959*

*பொங்கல்விழாவை தமிழர் விழா எனக் கொண்டாடுகிறோம். இந்தப் பொங்கல் விழாவை தமிழ்நாட்டில் வெகுஜன மக்களிடம் பரவலாகக் கொண்டு சென்றது திராவிடர் இயக்கம். இந்து மதப் பண்பாட்டிற்கு எதிரான பண்பாட்டுப் புரட்சியாக இந்த விழாவை பரப்பியது திராவிடர் இயக்கம். அதே சமயம் இந்த விழாவை பண்பாட்டு ஆயுதமாகக் கையிலெடுத்த பெரியாரே பொங்கல்தான் மிகச்சரியான தமிழர் விழா என்ற நோக்கில் இதைக் கையிலெடுக்கவில்லை. அவரே பொங்கல் குறித்து கூறிய விமர்சனம் என்னவென்றால்,*

“அரசாங்க விடுமுறைக்கு உரிய பண்டிகைகள் போகி, பொங்கல், மாட்டுப் பொங்கல், மகா சிவராத்திரி, தமிழ் வருடப்பிறப்பு, ஆவணி அவிட்டம், கோகுலாஷ்டமி, சரசுவதி பூசை, பிள்ளையார் சதுர்த்தி, தீபாவளி. விடுமுறை இல்லாத பண்டிகைகள் கார்த்திகை தீபம், பங்குனி உத்திரம், தைப்பூசம் இந்தப் படியாக இன்னும் பல உள. இவைகளில் தமிழனுக்கு, தமிழ்ச் சமுதாயத்திற்கு, தமிழன் பண்பிற்கு, தமிழன் வரலாற்று நடப்புக்கு, தமிழனின் அறிவு ஆராய்ச்சிப் பொருத்தத் திற்கு - ஏற்றவாறு விழா அல்லது பண்டிகை என்பதாக எதையாவது சொல்ல முடிகிறதா?

...இப்படிப்பட்ட நிலையில், தமிழர் விழா (பண்டிகை) என்பதாக நான் எதைச் சொல்ல முடியும்? ஏதாவது ஒன்று வேண்டுமே? அதை நாம் கற்பிப்பது என்பதும், எளிதில் ஆகக்கூடியவை அல்லவே என்று கருதிப் பொங்கல் பண்டிகை என்பதைத் தமிழன் விழாவாகக் கொண்டாடலாம் என்று முப்பதுஆண்டுகளுக்கு முன் நான் கூறினேன். *- பெரியார் - விடுதலை - 30.01.1959*

### மே நாள் விழா

*பொங்கல் விழா மீது பெரியாருக்கு விமர்சனம் இருந்தாலும், விழா என்று ஒன்று வேண்டுமே என்று பொங்கல் கொண்டாடச் சொல்கிறார். ஆனால், எந்த விமர்சனமும் இல்லாமல் மற்றொரு முக்கிய விழாவைக் கொண்டாட அறைகூவல் விடுத்தார். அது மே நாள் விழா.*

**இவற்றை எல்லாம் விட்டுவிட்டு, புத்தர், அசோகர் பெயரால், இந்து மத விழாக்களுக்குப் புத்துயிர் ஊட்டுவது - புது வடிவம் கொடுப்பது - போன்றவை அந்தத் தலைவர்களின் நோக்கங்களுக்கு எதிராகவே அமையும்.**



“மே தினத்தை நாம் ஒரு பெரிய பண்டிகை போல் கொண்டாட வேண்டும். ஏனெனில் நமது பண்டிகைகளில் அனேகம் இம்மாதிரி வெற்றிகளை ஞாபகப்படுத்துவதேயாகும். தீபாவளி, ஸ்ரீராம நவமி முதலிய பண்டிகைகள் எல்லாம் இந்நாட்டில் ஆரியர்கள் திராவிட மக்களை வென்ற நாள்களையும்

வென்ற தன்மைகளையும் கொண்டாடுவதைத் தவிர வேறொன்றுமே முக்கியமாய் இல்லை. இதெல்லாம் தெரிந்த பலர் கூடி இப்பண்டிகைகளைக் கொண்டாடுவது இன்னாட்டில் மக்கள் உற்சாகத்திற்கு வேறு மார்க்கம் இல்லாததே ஒழிய மற்றபடி மதம், பக்தி, சுயமரியாதை அற்ற தன்மை என்பவைகளே அல்ல.

பெண்களையும் வேலை ஆள்களையும் சிறிதுகூட ஓய்வில்லாமல் அடிமை போல் நடத்துகிறோம். அவர்களுக்கு பண்டிகை, உற்சவம் ஆகியவைகள் தான் சிறிது ஓய்வும் சந்தோஷமும் கொடுக்கின்றன.

தண்டவாளப் பெட்டியில் வைத்துப் பூட்டி வைப்பதுபோல் பெண் ஜாதிகளைப் பூட்டி வைக்கும் சிப்பாய்களெல்லாம் உற்சவம் பண்டிகை என்றால் சிறிதாவது தாராளமாய் வெளியில்விட சம்மதிக்கிறார்கள். உற்சவங்களில் அவர்கள் நிலை எப்படி ஆனாலும் கவலைப்படுவதில்லை. கண்ணெதிரிலேயே நசுக்கப்படுவதையும், கசக்கப் படுவதையும் பார்த்துக்கூட சகிக்கிறார்கள். ஆதலால் நம் பெண்களுக்கும், தொழிலாளிகளுக்கும் எவ்வளவு தான் நாம் பகுத்தறிவையும், சுயமரியாதைக் கொள்கை களையும் போதித்தாலும் உற்சவமும், பண்டிகையும் அவர்களை விட்டு விலகவே முடியாது. எனவே நாம் இப்படிப்பட்ட பண்டிகைகள் சிலதை கொண்டாட ஏற்பாடு செய்தோமேயானால் மத சம்மந்தமான பண்டிகை, உற்சவம் ஆகியவைகளை மக்கள் கைவிடுவதற்கு அனுகூலமாயிருக்கும்.''

*- 01.05.1935 ஆம் நாள் காரைக்குடியில் நடைபெற்ற மே நாள் விழாக் கொண்டாட்டத்தில் தலைமையேற்று ஆற்றிய முடிவுரை. குடி அரசு - சொற்பொழிவு -12.05.1935*

அறிவித்தது மட்டுமல்ல; மே தின விழாவைத் தானே தலைமை ஏற்றும் நடத்தியுள்ளார். திருத்துறைப்பூண்டியில் தஞ்சை மாவட்ட சுயமரியாதை 5 வது மாநாடு 21.03.1936 இல் நடைபெற்றது. அந்த மாநாட்டில் தோழர் பெரியார், அரசின் அடக்குமுறைகள் காரணமாகப் பொது வுடைமைப் பிரச்சாரத்தை நிறுத்திக்கொள்வதாக அறிவித்தார். ஆனால், அந்த அறிவிப்பைக் கொடுத்த 30 நாட்களுக்குள் 19.04.1936 குடி அரசு ஏட்டில், "மே தினத்தைக் கொண்டாடுங்கள்" என்று அறிக்கை வெளியிட்டார். பிரிட்டிஷ் அரசின் அடக்கு முறைகளையும் மீறி மே தினக் கொண்டாட்டங் களை நடத்தினார்.

## காதலர் நாள் விழா

இவ்வாறு அரசியல் தளங்களில் கடுமையான போராட்டங்களை நடத்திக் கொண்டிருந்த சூழலிலும் கூட பண்பாட்டுத்தளத்தில் மாற்று விழாக்களை அறிமுகப்படுத்தி நடத்திக்காட்டினார். பொங்கலோ, மே தினமோ இரண்டும் பெரியார் காலத்தில் கொண்டாடப்பட்டிருக்கலாம். இன்றைய திராவிட இயக்கங்கள் அப்படி இல்லை என்றும் குற்றம் சுமத்தலாம். அதுவும் சரியான பார்வை அல்ல. பெரியார் காலத்தில் இல்லாத 'காதலர் நாள் விழா' இக்காலத் திராவிடர் இயக்கங்களால் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன.

மக்கள் கொண்டாடும் விழாக்களில் தமிழர்களுக்கு ஓரளவு ஒத்துப்போதும் என்ற அடிப்படையில் அன்று பொங்கல் முன்னெடுக்கப் பட்டது. அந்தப் பொங்கல் விழா கூட இன்று இந்துக்களின் பண்டிகையாக மாறிவிட்டது. இந்துப்பண்டிகைகளை மீட்பது என்று தொடங்கினால் அது மீண்டும் இந்து மதத்தால் செரிக்கப்பட்டு விடும் என்பதற்கு பொங்கல் ஒரு சான்றாக அமைந்து விட்டது.

இப்போது தீபாவளியையும், விஜயதசமி யையும் பௌத்தத்தின் பெயரால் மீட்க முனைந்தால், மீண்டும் முட்டுச்சந்திற்கே வந்து நிற்போம். அப்படியனால் மாற்று விழா வேண்டாமா? என்றால், அதற்குத்தான் அனைத்து மதத்தினரும் பங்கேற்கும் காதலர் நாளும், மே தினமும் இருக்கின்றன.

தமிழ்நாட்டில், இந்துத்துவம், தமிழ்த்தேசியம், பொதுவுடைமை, சிறுபான்மையினர் நலன் எனப் பல்வேறு தத்துவத் தளங்களில் இயங்கும் அனைத்து முற்போக்குப் போராளிகளுக்கும் 'காதலர்நாள்' என்றால் கசப்பாக இருக்கிறது. மேற்கண்ட அனை வரும் ஒரே குரலில் காதலர் நாளை எதிர்க்கின்றனர். காதலர் நாள் என்பது நுகர்வு வெறியை வளர்க்கிறது - நம்நாட்டின் சுதேசிப் பண்டிகை அல்ல; கிறித்தவப் பண்டிகை - இந்த விழா சாதி ஒழிப்புக்குப் பயன்படாது என்றெல்லாம் முட்டுக்கட்டைகளைப் போடுகிறார்கள் முற்போக்குவாதிகள்.

இன்று பெரும்பான்மை இளைஞர்களால் கொண்டாடப்படும் 'காதலர் நாளை' ஒரு மாபெரும் மக்கள் விழாவாக மாற்றுவதில் நமக்கென்ன தடை? அனைத்து இந்துமத வெறி அமைப்புகளும், சில இஸ்லாமிய அமைப்புகளும் காதலர் நாளில் இளைஞர்கள் மீது கடும் எதிர்ப்புகளை ஏவிவருகின்றனர். இந்தச்சூழலில், திராவிடர் இயக்கங்களும், தலித் அமைப்புகளும், பொதுவுடைமை இயக்கங்களும் - காதலர் நாள் விழாவையும், மே நாள் விழாவையும் மாபெரும் மக்கள் விழாக்களாக முன்னெடுக்க வேண்டியது அவசியம். ஜாதி மறுப்புப் பண்பாட்டுப் புரட்சிக்காக உழைத்த தலைவர்களின் பிறந்த நாட்களை கட்சி விழாக்கள் என்ற நிலையிலிருந்து, மக்கள் விழாக்களாக மாற்றிக் கொண்டாட வேண்டியது அவசியம்.

இவற்றை எல்லாம் விட்டுவிட்டு, புத்தர், அசோகர் பெயரால், இந்து மத விழாக்களுக்குப் புத்துயிர் ஊட்டுவது - புது வடிவம் கொடுப்பது - புத்தச்சாயம் பூசுவது போன்றவை அந்தத் தலைவர்களின் நோக்கங்களுக்கு எதிராகவே அமையும். பார்ப்பன - பார்ப்பனிய ஆதிக்கங்களை நிலை நிறுத்தவே பயன்படும்.

# மத்திய அரசுக் கல்வி நிறுவனத்தில் பெருமாள் கோவில்

சென்னைக்கு அருகே ஸ்ரீபெரும்புதூரில் மத்திய இளைஞர் மற்றும் விளையட்டு துறை அமைச்சகத்துக்குச் சொந்தமான இராஜிவ் காந்தி தேசிய இளைஞர் மேம்பாட்டு நிறுவனம் RGNIYD இயங்குகிறது. இந்தக் கல்வி நிறுவனத்தில் 21 மாநிலத்தை சார்ந்த 180 மாணவர்கள் பயில்கின்றனர்.

**கோவில் உருவான கதை:**

1. சென்ற ஆண்டு கல்லூரி வாகன நிறுத்தம் அமைப்பதற்காக கல்லூரின் ஒரு பகுதி சுத்தம் செய்யபட்டது. அப்போது அங்கு ஒரு பெருமாள் சிலை கண்டுபிடிக்கப்பட்டதாகவும், அந்தச் சிலை இந்தக் கல்வி நிறுவனம் தொடங்கப்படுவதற்கு முன்பே இங்கு இருந்தது என்றும் கதை கட்டப்பட்டது.

2. அதன் பின்னர் இந்தச் சிலை பற்றிய எந்தக் கருத்தும் பதிவு செய்ய படவில்லை. ஆனால் இந்த ஆண்டு (2017) செப்டம்பர் 4 ஆம் தேதி இரவோடு இரவாக ஒரு சிறிய கோவில் கட்டபட்டது.

3. செப்டம்பர் 5 காலை 7.30 ல் இருந்து 8;30 மணி வரை பூஜை செய்து அந்தக் கோவிலைத் திறந்து வைத்தனர்.

4. செப்டம்பர் 5 அன்று பல மாணவர்கள் மாணவர் நல முதல்வரிடம் கூறிய போது அவரின் பதில் ''இதனால் உங்களுக்கு என்ன பிரச்சணை'' மற்றும் இந்த கோவில் கல்லூரி பணத்தில் கட்டவில்லை. இது இங்கு உள்ள ஆசிரியர்களின் பணத்தில் கட்டபட்டது என்று கூறினர்.

5. அதன் பின்னர் இன்று வரை இந்த கோவிலில் தினமும் காலை பூஜையும் .படையல் நிகழ்வுகளும் நடந்தவண்ணம் உள்ளன. இந்தப் பூஜைக்குப் பார்ப்பனர் ஒருவர் தினசரி வருகிறார். மற்றும் இங்கு வேலை பார்க்கும் ஊழியர்கள் அனைவரும் கலந்துக்கொள்ளக் கட்டாயப்படுத்தப் படுகின்றனர்.

2013-ல் இதே இடத்தில் ஒரு புத்தர் சிலை இருந்தது அப்போது இந்த சிலை மத உணர்வுகளை தூண்டுவதாக கூறி அகற்றப்பட்டது. அது போன்று முன்னால் ஒவ்வொரு வாரமும் ஞாயிறு கிழமை கிருஸ்தவ வழிபாடு நடந்து வந்தது அதுவும் மத உணர்வைத் தூண்டுகிறது என்று சொல்லித் தடை செய்யபட்டது. ஆனால் இப்போது பெருமாள் கோவில் தங்கு தடையின்றி உருவாக்கப்பட்டுள்ளது.

**அரசு வளாகங்களில் கோவில்கள் கட்டக்கூடாது என்ற அரசாணைகள்**

1. அண்ணா - தமிழக முதல்வராக பதவிக்கு வந்தவுடன், அரசு அலுவலகங்களில் கடவுள்கள், சாமியார்கள், படங்களை மாட்டக் கூடாது என்றும், ஏற்கனவே மாட்டப்பட்டிருக்குமானால் படிப் படியாக பிறர் கவனத்தை ஈர்க்காத வகையில் அகற்றிட வேண்டும் என்றும் தமிழக அரசு, தலைமைச்செயலாளர் ஒரு அரசாணையைப் பிறப்பித்தார். (29.4.1968, அரசாணைக் குறிப்பு எண்.7553/66-2)

2. அரசு வளாகங்களில் மதம், வழிபாடு தொடர்பான புதிய கோயில்கள், வழிபாட்டுத் தளங்களைக் கட்டுவதும், ஏற்கனவே இருந்தால், அதைப் புதுப்பிப்பதும் கூடாது என்றும், அத்தகைய நிகழ்வுகள் ஏதும் நிகழாமல் உறுதி செய்வது துறைத் தலைவர்கள், தலைமை நிர்வாகிகள், மாவட்ட ஆட்சியர்களின் நடத்தை விதிகளுக்கு உட்பட்ட தாகும் என்று வருவாய்த் துறை முதன்மை ஆணையர், வருவாய்த் துறை நிர்வாக ஆணையர் சார்பில், அனைத்துத் துறைகளுக்கும் அரசாணை அனுப்பப்பட்டது. (அரசாணை எண். 426, 13.12.1993)

3. அரசு அலுவலகக் கட்டிடங்களில் மதம் தொடர்பான முழக்கங்கள் எழுதுவதையோ, வளாகத்தில் வழிபாட்டுத் தளங்கள் அமைப்ப தையோ அனுமதிக்கக் கூடாது என்று மத்திய அரசின் உள்துறை அமைச்சகம் அதற்கான ஆலோசனைக் குழுவின் கோரிக்கையை ஏற்று மாநில அரசுகளுக்கு கடிதம் எழுதியது. அதனைத் தொடர்ந்து தமிழக அரசின் தலைமைச் செயலாளர் என். அரிபாஸ்கர், அய்.ஏ.எஸ்., அனைத்துத் துறைகளுக்கும் மத்திய அரசின் கடிதத்தை இணைத்து சுற்றறிக்கை ஒன்றை அனுப்பினார். (எண்.8472 சட்டம் மற்றும் ஒழுங்கு பி/94-1)

4. மதுரை உயர்நீதிமன்றமும், அரசு வளாகத்தில் வழிபாட்டுத் தளங்கள், மத நிகழ்வுகள் நடப்பதைத் தடை செய்ய வேண்டும் என்றும், 1993 ஆம் ஆண்டின் அரசு ஆணையைக் கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டும் என்றும், 17.3.2010 இல் உத்தரவிட்டது. அந்த உத்தரவின் அறிவுறுத்தல், அனைத்து அரசு அலுவலகங்களுக்கும் அரசு செயலாளர் வழியாக 22.4.2010 அன்று கடிதமாக (கடிதம் எண். 16844/ஏ/2010-1) அனைத்து அரசுத் துறைகளுக்கும் அனுப்பப்பட்டது.

இப்படி அரச மற்றும் நீதிமன்ற ஆணைகள் தெளிவாக இருந்தும், இராஜீவ் காந்தி கல்வி நிறுவனத்தில் பெருமாள் கோவில் திட்டமிட்டுக் கட்டப்படுகிறது. இதற்கு அந்த நிறுவனத்தின் இயக்குநர் ஆதரவாக உள்ளார். அவர் ஆர்.எஸ்.எஸ் ஸைச் சேர்ந்தவர்.

அதி அசுரன்

# ‘குடும்பப் பெண்’: பிணத்திற்குச் சமமானவள்!

கருத்துச்சுதந்திரம், ஜனநாயகம், சர்வாதிகாரம், சட்டம், ஒழுக்கம், நேர்மை, பண்பாடு போன்ற அனைத்தையும் அவை பயன்படுத்தப்படும் இடங்கள் எவை, பயன்படுத்து பவர்கள் யார், இவற்றால் பயன்படப் போகிறவர்கள் யார்? பாதிக்கப்படப் போகிறவர்கள் யார்? என்பனவற்றை வைத்துத்தான் முடிவு செய்ய முடியும். எல்லா இடத்திற்கும், எல்லாச் சிக்கல் களுக்கும் பொதுவாக - ஒரே மாதிரியாக இவற்றைப் பயன்படுத்த முடியாது.

ஹிட்லரின் சர்வாதிகாரத்தை எதிர்ப்போம். தோழர் பெரியாரின் சர்வாதிகாரம் என்றால் ஏற்போம். பெரியாரியலைப் பரப்புவதற்குத் தடை என்றால் ‘கருத்துச்சுதந்திரம்’ என்ற சொல்லையும் பயன்படுத்துவோம். அதே ‘கருத்துச் சுதந்திரம்’ என்ற கருவியை, பார்ப்பன ஆதிக்கக்காரர்கள் பயன்படுத் தினால் எதிர்ப்போம். ஒரு கவுண்டர் சங்கமோ, வன்னியர் சங்கமோ கருத்துச் சுதந்திரம் என்ற பெயரில் தாழ்த்தப்பட்டோருக்கு எதிராகப் பேசினால் உறுதியாக அந்தக் கருத்துச் சுதந்திரத்தை எதிர்ப்போம்.

கடந்த 2012-ஆம் ஆண்டு அக்டோபரில் உடுமலைப்பேட்டையில் தி.வி.க தோழர்கள் ஆயுத பூஜை குறித்து துண்டறிக்கை விநியோகித்ததற்காகக் கைதுசெய்யப்பட்டார்கள். துண்டறிக்கைகூட வெளியிடக்கூடாது என காவல்துறை வழியாகத் தடையை உருவாக்கியது இந்துமுன்னணி. அதே அமைப்பு, அப்போது கமலஹாசன் வெளியிட்ட விஸ்வருபம் 2 படத்தின் கருத்துரிமைக்காகப் போராட்டத்தில் இறங்கியது. இப்படிப் பல சான்றுகள் உள்ளன.

எல்லாச் சொற்களையும், எல்லா இடத்திலும், எல்லா நேரங்களிலும் ஒரே மாதிரியாக பயன்படுத்த முடியாது. இது அனைத்துத் தத்துவத் தலைவர் களுக்கும், அனைத்து இயக்கங்களுக்கும் பொருந்தும்.

அந்த அடிப்படையில்தான், மெர்சல் படத்தின் கருத்துச்சுதந்திரத்திற்காகத் தமிழ்நாடே பொங்கி எழுந்தது. பா.ஜ.க, மோடி எதிர்ப்பு காரணமாக, நாமும் மெர்சலின் கருத்துச்சுதந்திரத்திற்காகப் போராடுபவர்களை ஆதரித்தோம். அதே சமயம் பெண்களைக் கொச்சைப்படுத்தும் “கேரள பெண்கள் அழகா? தமிழ்நாட்டுப் பெண்கள் அழகா” என்ற ‘நீயா? நானா?’ நிகழ்ச்சியை எதிர்க்கிறோம்.

நிகழ்ச்சி நடந்தால் தானே அதில் கொச்சைப் படுத்தினார்களா? பெருமைப்படுத்தினார்களா? என்பது புரியும்? என்று கேட்கலாம். உண்மைதான் நிகழ்ச்சி நடந்த பிறகு விமர்சிக்கலாம். ஆனால், அதையெல்லாம் ‘கருத்துச்சுதந்திரம்’ என்பதை அதே பொருளில் - ஒரே பொருளில் - அனைத்து இடங்களிலும், ஒரே மாதிரியாகப் பயன்படுத்தியவர் கள் மட்டுமே கூறமுடியும். அப்படி யாரும் இருப்பதாகத் தெரியவில்லை.

நிகழ்ச்சிக்குத் தடை வந்த பிறகு 23.10.17 அன்று நியூஸ்ஸ்18 தொலைக்காட்சியின் ‘காலத்தின் குரல்’ நிகழ்ச்சியில், நீயா? நானா? நிகழ்ச்சியின் பொறுப்பாளர்கள் திலீபன், ஆண்டனி இருவரும் பேசியதைப் பார்த்த பிறகு, அந்த நிகழ்ச்சியைப் பார்க்கவே வேண்டியதில்லை - எதிர்த்துத் தடை பெற்றதில் சிறிதும் தவறே இல்லை என்பது புரிந்தது.

“குடும்பப் பெண்கள் இந்த நிகழ்ச்சியை எதிர்க்க மாட்டார்கள்” என்கிறார் ஆண்டனி. இதற்கு முன்பு இவர்கள் நடத்திய ‘நீயா? நானா?’ நிகழ்ச்சிகளில் பெண் விடுதலைக்கு ஆதரவான விவாதங்கள் நிறைய வந்துள்ளன. அவை எல்லாம் சமுதாய விடுதலை என்ற நோக்கில் இல்லாமல், வெறும் கமர்ஷியல் நோக்கில் மட்டுமே தயாரித்தார்கள் என்பதற்கு ஆண்டனி பேசியதே சான்று.

‘குடும்பப் பெண்’ என்பதற்கு என்ன வரை யறை வைத்திருக்கிறார் ஆண்டனி? இந்தக் ‘குடும்பப் பெண்’ என்ற சொல், பல கோடிக்கணக்கான பெண்களின் கனவுகளையும் - காதல்களையும் - ஆசைகளையும் - இலட்சியங்களையும் - சுயமரியாதை யையும் - சுய அடையாளத்தையும் அழித்துள்ளது. அழித்துக்கொண்டிருக்கிறது. அழிக்கப்போகிறது.

களநிலவரம், கள எதார்த்தம் என்றெல்லாம் அள்ளிவிடும் ஆண்டனி, திலீபன், கோபிநாத் கூட்டமே! இன்று இந்தியாவில் உள்ள குடும்பங் களில் வாழும் பெண்களின் மனநிலவரம் தெரியுமா? அதை எந்த ஏஜன்சியாலும் சர்வே செய்ய முடியாது. ஆம். உண்மையை, உண்மை மன நிலையை வெளிப்படையாகக் கூறினால் மட்டுமே எவரும் சர்வே எடுக்க முடியும்.

இந்தியாவில், தமிழ்நாட்டில் ‘குடும்பங்கள்’ என்பவை எவராலும் அசைக்கமுடியாத சிறைக் கூடங்களாக உள்ளன. அந்தச் சிறையில் ‘நல்ல பெண்’, ‘குடும்பப் பெண்’ என்று பட்டம் பெறுபவள் ஒரு பிணத்திற்குச் சமமானவள். அப்படிப்பட்ட பிணங்கள் உங்கள் நிகழ்ச்சியை எதிர்க்காது. உண்மைதான்.



# நான்காம் ஆண்டில் ‘காட்டாறு’

‘காட்டாறு ஏடு’ நான்காம் ஆண்டில் நுழைகிறது. எமது நோக்கம் இதழ் நடத்துவது அல்ல; பெரியாரியலைப் பரப்புவது. நாம் தொடங்கிய நேரத்தில் வலைப்பூக்களும், சமூக வலைத்தளங்களும் கருத்துப்பரப்பலில் பெரும் இடத்தைப் பிடித்திருந்தன. இருந்தாலும் அச்சு ஊடகத்தில் ‘காட்டாறு’ போன்ற ஒரு இதழுக்குத் தேவை உள்ளது என்று கருதி அச்சு இதழாகத் தொடங்கினோம். அதே நேரத்தில் சமூக வலைத்தளங்கள், இணைய தளம், மொபைல் ஆப்ஸ் என அனைத்து வடிவங்களிலும் காட்டாறு பரவியது.

‘காட்டாறு’ அச்சு இதழைப் படிப்பவர்களின் எண்ணிக்கையைவிட இணையத்திலும், மொபைல் ஆப்ஸிலும் படிப்பவர்கள் எண்ணிக்கை இருமடங்காக அதிகரித்துள்ளது. எனவே, பெரும் செலவு பிடிக்கும் அச்சு இதழை நிறுத்திவிடலாம் என எண்ணி, அதற்காக ஒரு கருத்துக்கணிப்பை நடத்தினோம்.

80 சதம் வாசகர்கள் அச்சு இதழ் அவசியம். காலத்திற்கேற்ப மாறுவதும் அவசியம் என இரண்டு கருத்துக்களையும் கூறினர். அச்சு இதழை மட்டும் பரிந்துரைத்தவர்கள் பெரும்பாலும் 40 வயதைக் கடந்தவர்களாகவும் ஏதோ ஒரு அமைப்பில் இயங்குபவர்களாகவும் இருக்கிறார்கள். நமது இலக்கு 30 வயதுக்கும் கீழானவர்கள் மட்டுமே. அந்த இளந்தலைமுறை இணையமும், செயலியும், இணையத் தொலைக்காட்சிகளும் தான் மிகவும் அவசியம் என்று தெரிவித்தினர்.

எனவே, வருங்காலத்தில், இணையத்திற்கும், செயலிக்கும், இணையத்தொலைக்காட்சிக்கும் முக்கியத்துவம் அளிப்பது. காலப்போக்கில், தேவையைப் பொறுத்து, மெது மெதுவாக அச்சு இதழைக் குறைத்துக்கொள்வது அல்லது நிறுத்துவது என முடிவு செய்தோம்.

ஆரியப் பார்ப்பனர்களின் ஆதிக்கத்தைத் தக்க வைத்துக் கொள்ளப் பாடுபடும் அமைப்புகள் - ‘யூ ட்யூப் சேனல்’ என்ற நிலையில் இருந்து, அனிமேஷன் வீடியோக்கள், கேம்கள் என்ற நிலைக்கு உயர்ந்து விட்டனர். நாம் இன்னும் எழுத்தில் மட்டுமே கவனம் செலுத்துகிறோம். இந்நிலை எமக்கு மிகப்பெரும் குற்ற உணர்ச்சியையும் - இயலாமை உணர்வையும் - வெட்கத்தையும் உண்டாக்கியுள்ளன. எதிரிகள் ஏவுகணைத் தாக்குதலில் இறங்கிவிட்ட பிறகும், நாம் இன்னும் கவண் கல்லில் எதிர்த்தாக்குதல் நடத்துவதைப் போல உணருகிறோம்.

அச்சு ஊடகத்தில், தட்டச்சு செய்வது தொடங்கி, லே அவுட், அச்சகம் என அனைத்திலும் நமது ஆதரவாளர்களும் நண்பர்களும் ஏராளமாக உள்ளனர். அதனால் காட்டாறு போன்ற இதழ்களை நடத்துவது எளிதாக இருக்கிறது. ஆனால் அனிமேஷன் படங்களை உருவாக்க ஒட்டுமொத்த திராவிடர் இயக்கங்கள் எவற்றிலும் தொழில்நுட்பம் அறிந்தவர்கள் இல்லை என்றே கூறலாம்.

நமது போராட்டம் பழைமையான கருவிகளை மட்டுமே நம்பி நடக்கிறது. காலத்திற்கேற்ற பரப்புரைக் கருவிகளை நாமும் இயக்க வேண்டும். அதற்குரிய தொழில் நுட்பப் பயிற்சிகளை எடுத்துக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால், எவ்வளவு உயர்ந்த தத்துவமானாலும் மக்களைச் சென்று சேராது. நமது அடுத்தகட்டப் பாய்ச்சலுக்கு, பெரும் பொருளாதாரம் கூடத் தேவைப்படாது. தொழில்நுட்ப அறிவு தான் தேவை.

20 ஆண்டுகளுக்கு முன்பு நமது இயக்கங்களில் தமிழ் தட்டச்சு செய்யத் தெரிந்தவர்களை விரல் விட்டு எண்ணிவிடலாம். இன்று கணினியிலும், மொபைல் ஃபோன்களிலும் தட்டச்சு செய்யத் தெரியாதவர்களை விரல் விட்டு எண்ணிவிடலாம். இந்த மாற்றம் தான் நமது பரப்புரைக்குப் பெரும் பலமாக உள்ளது. அதுபோல, இன்றைய தேவை இணையத் தொலைக்காட்சிகளும், அனிமேஷன் வீடியோக்களும், அனிமேஷன் விளையாட்டுக்களும் தான். இவற்றுக்குரிய தொழில் நுட்பப் பயிற்சிகளைப் பெற்று நம்மைத் தகவமைத்துக் கொள்ளாவிட்டால், அது இந்தச் சமுதாயத்திற்கு நாம் இழைக்கும் மாபெரும் துரோகம் ஆகும்.

காட்டாறு உறுதியாக அடுத்தகட்டத்திற்குச் செல்லும். இதுவரை காட்டாறு ஏட்டிற்கு ஆதரவளித்த அனைவருக்கும் மிக்க நன்றி. எமது அடுத்தடுத்த முயற்சிகளுக்கும் வழக்கமான தங்களது பேராதரவு கிடைக்கும் என நம்பிப் பணியைத் தொடர்கிறோம்.

Owner and Publisher by : S.Vijayaragavan
Consulting Editor: C.Ragavan
# 103/104, Nethaji Road, M.C.Complex, Pollachi. 642 001
Kaattaaru2014@gmail.com